பதிவு எண் 2041

மகாத்மா காந்தி வாழ்க

தனிப்பிரதி விலை { உள்நாடு 1¼ அணா / வெளிநாடு 1½ அணா }




[வாரப்பதிப்பு]

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 8
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹூ அற்பிசி மீ 21 உ (6—11—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 28 |
|---|---|---|

**THE**

## கும்பகோணம் இண்டஸ்ட்ரியல் கம்பெனி Ltd.

ரைஸ்மில்கள், ஆயில் இஞ்சின்கள், மோட்டார் இஞ்சின்கள் முதலிய இயந்திரங்களுக்கு வேண்டிய சாமான்கள், பேரிங்குகள் முதலானவைகள் இரும்பு, பித்தளை, கன்மெடல், தண்டவாளம், ஒயிட்மெடல் முதலிய லோகங்களில் வார்த்தும், கடைந்தும் ரிப்பேர் செய்தும் கரும்பாலை, ரைஸ்மில் சிலிண்டர், காப்பிங் பிரஸ் முதலிய சாமான்கள் புதியதாகச் செய்தும் கொடுக்கப்படும்.

ஆர்டர்கள் குறித்த காலத்தில் குறைந்த சார்ஜுக்கு செய்து கொடுக்கப்படும்.

P. கோவிந்த பிள்ளை மானேஜிங் டைரெக்டர்.
கும்பகோணம் இண்டஸ்டிரியல் கம்பெனி லிமிடெட், பெரிய தெருவு, கும்பகோணம்.

## எல்லாவுலகிற் கிறைவனொருவன் எல்லாவுடலும் இறைவனாலயமே!

கடவுள் படைப்பில் எவ்வித பேதமும் இல்லாத மானிட வர்க்கத்தில் பார்ப்பனர்கள் தங்களை உயர் குலத்தோர் என்று திருட்டுத்தனமான பெயரை வைத்துக் கொண்டு, இதர ஜனங்களை அடிமைத்தனம் என்கின்ற படுகுழியில் ஆழ்த்தி, என்றும் அவை ஏறுவதற்கு விடாமல் வருத்திக்கொண்டு கொடுமைசெய்வதைப் பார்த்தும், அவர்களை நம்மக்கள் அறிவில்லாமல் ஆதரிப்பதில் என்ன மோக்ஷம் கிடைக்கின்றதென்பது விளங்கவில்லை.

இவ்வளவிருக்க இம்மகான்கள் நம்மை 'சூத்திரன், சூத்திரன்' என்று அழைக்கிறார்களே! இதன் பொருள் என்னவென்று நாம் கவனித்துப் பார்ப்பதில்லை. அதை நாம் நன்குணர்ந்தால் அவர்கள் இவ்விதம் அழைப்பதற்கு வழிகொடுக்க மாட்டோம். சூத்திரன் என்ற பதத்திற்கு வேசிவயிற்றுப் பிள்ளையென்று சுருதிகள் கூறுகின்றன. நாம் வேசி வயிற்றில் பிறந்தவர்களா? நம்மை ஒருவன் வேசிக்குப் பிறந்தவனே என்று கேட்டால் நமக்கு சந்தோஷம் வருமா? கோபம் வருமா? ஆனால் பார்ப்பனர்கள் நம்மை அவ்விதம் அழைத்தால் அதை குயில் நாதம் போல் காதுக்கு மிகவும் இன்பரசமாக பாவிக்கின்றோமே? நம் நாடி நரம்புகளில் வீர ரத்தம் ஓடுமானால், நாம் இதை அவர்களால் சொல்விப்பதற்கும் அதை நம் செவிகளால் கேட்பதற்கும் இடம் கொடுப்போமா? இப் பெயரை எச்சென்மத்தில் நாம் திருத்தப் போகின்றோம்? இப்பெயர் நிலைநிற்குமளவும் நம் அடிமைத்தனம் ஓங்கி வளர்வதற்கு நமது சுயமரியாதையையே தீனியாகக் கொடுக்கவல்லவோ செய்கின்றோம்?

நிடதநாட்டரசனாகிய நளமஹாராஜனை சனிபகவான் பிடித்ததற்போல் கர்ப்பாசயத்தில் கரு உருவாகும் பொழுதே இந்த ஆயுட்கால சனீஸ்வரர்கள் நம்மைச் சூழ்ந்து, நமது ஜீவன் உடலை விட்டுப் பிரிந்து பிணத்தை கட்டையிலேற்றி நெருப்புவைத்து கொளுத்தும்வரையில் வாதனை செய்தது போதாமல், நம்மைச் சேர்ந்தவர்களை இறந்தவர்களின் பெயரால் சூழ்ந்து கற்பகோடிகாலமானாலும் நம்மைவிட்டு விலகாமலிருக்கிறார்கள்! வேத சாஸ்திர இதிகாச புராணங்களை வெளியில் காண்பிக்காமலும், அவைகளை கற்பதாவது கேட்பதாவது கூடாதென்றும் அர்த்தபேதங்களை கூட்டி, மூடநம்பிக்கைகளை உண்டுபண்ணி சொர்க்கத்திற்கு வழிகாட்ட மாட்டோம், நரகக்குழியில் ஆழ்த்திவிடுவோமென்கிற பூச்சாண்டிகளைக்கொண்டு பயமுறுத்தி, நம்மிடமிருக்கும் பொருள்களை பறிகொண்டு போகிறார்களே! இதென்ன விந்தை? கஷ்டம்! கஷ்டம்!! இதன் தத்துவத்தை கவனிப்போர் மிகவும் சொற்பமாயிருக்கின்றார்கள்! இனி மேற்கொண்டாவது ஏமாந்து போகாமல் பார்த்துக் கொள்வோம். நம்மில் ஒவ்வொருவரிடத்திலிருக்கின்ற ஞானக் கண்ணை திறந்து விழித்து பார்ப்போமாகுக.

இவ்விஷயம் இம்மட்டோடு நிற்கட்டும். இனி காப்பி ஓட்டல்களிலும் மற்றும் நடக்கிற சில விசேடங்களை சற்று கவனித்துப் பார்ப்போம். பிராமணர்களென்றும் சூத்திரர்களென்றும் பலகைகள் தொங்கவிட்டிருக்கிறார்களே! இதன் கருத்து என்ன? இவ்விதம் ஓட்டல்கள் பொது ஸ்தாபனமன்றோ? அவ்விடத்தில் ஏன் இவ்வித பேதாபேதம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்? அவ்விடத்தில் நடப்பது அவர்கள் சொல்லிக்கொள்ளும் முறைப்படித்தானா? கள்ளுக்கடை, சாராயக்கடை, சாக்கணாக்கடைகளில் அந்தணர்களில் சிலர் சென்று அப்பதார்த்தங்களை உட்கொண்டு இந்த ஓட்டல்களில் நுழைந்தவுடன் பார்ப்பனர்களுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட இடத்திற்குச் சென்று அவர்களுடன் இவர்களும் சேர்ந்து கொள்ளுகிறார்கள். இவ்வித நடத்தையில்லாத பார்ப்பனர்களும் இவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்களே! அவ்விதம் அவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது நம்மைச் சேர்த்துக் கொள்வதில் என்ன விரோதம். எந்த வேதம் அதற்கு இடம் கொடுப்பதில்லை? அவர்களைவிட நாம் எவ்வகையில் தாழ்ந்தவர்கள்? தவிர முன் ஒருகாலத்தில் கவிச்சிங்கமான கம்பர் பசிப்பிணியால் மிகவும் வாடி வதங்கி குடிப்பதற்கு ஜலம் வேண்டுமென்று ஓர் பார்ப்பனரையணுகி தண்ணீர் கேட்டமாத்திரத்தில், சூத்திரனுக்கு வார்த்த ஜலம் சேஷமாய்விடுமென்று சொல்லி பார்ப்பனன் ஜலம் கொடுத்தானில்லை. தாகத்திற்கு ஜலம் வார்க்காத இம்மகான்கள் தோட்டி முதல் தொண்டமான் வரையிலும் ஒரே பாத்திரத்தில் வைத்திருக்கும் காப்பி முதலியவைகளை குடுக்கின்றார்களே! இச்செய்கைகளை பிரதி தினமும் கவனித்து வந்தும் இவர்கள் இம்மாதிரி பொது ஸ்தலங்களில் செய்யும் அக்கிரமங்களையும் அட்டூழியங்களையும் கண்டும் நாம் ரத்தக்கண்ணீர் சொரிவதற்கு பதிலாக ஆனந்த பாஷ்பமல்லவோ விடுகின்றோம்? நம் நாட்டாருக்கு இவ்வுணர்ச்சி இல்லாவிட்டாலும் வெளிநாடுகளில் நடப்பதைப் பார்த்தேனும் வரவேண்டாமா? மதுரை முதலிய இடங்களில் காப்பி ஓட்டல்களில் சத்தியாக்கிரஹம் நடைபெறப்போகின்றன, இவ்வியாதிக்கு நம்மிடத்திலேயே போதுமான மருந்து இருக்கும் பொழுது ஏன வைத்தியரைத் தேடவேண்டும்? ஒருநாள் காலையில் ஷை ஓட்டல்களுக்கு போகாமலிருந்தால் அன்று மாலையே கடையை மூடிவிட்டு வேறு தொழில் பார்க்க ஓடிவிடுவார்கள். இவ்விஷயங்களுக்கெல்லாம் நாம் வழி காட்டிகளாக இருக்கிறோமென்பதற்கு கொஞ்சமேனும் ஐயமில்லை. கடைசியாக கனவான்களுக்கு செய்துகொள்ளும் விண்ணப்பமாதெனில், இந்துபுருஷர்கள் இந்து ஸ்திரீகள் என்று ரயிலடிகளில் கக்கூஸ்களைப் பிரிவினை செய்திருப்பதைப்போல் சாதக்கடைகளிலும், புட்டுக்கடைகளிலும், காப்பிக்கடைகளிலும் ஏற்படுத்தியிருக்கும் பிரிவினைகளை நீக்கம் செய்து, ஓட்டல்களில் எல்லோரும் சமத்துவமாய் உட்கொள்ளும்படிக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டியது. இ-ற்று நம் பு

ராண இதிகாஸங்கள் முதலியவைகளில் கூறியுள்ளவற்றைப் பார்ப்பதற்கு நம் கண்களில் பார்ப்பனர்களின் அதிசூழ்ச்சியானது பாசிபடர்ந்தாற்போல் ஒளிமழுங்கச் செய்திருப்பதைப் பார்த்து மிகவும் வருத்தமடையவேண்டியிருக்கிறதே! பார்ப்பன புராணங்களின்படியும் சாஸ்திரங்களின் படியும் பார்த்தாலே ஸ்ரீராமபிரான் தமக்கு பட்டாபிஷேகம் செய்தவுடன் சிருங்பேரியமென்னும் நகரத்திற்கு அரசனாகிய ஸ்ரீ குகப்பெருமானைச் சேர்த்து வைத்து போஜனம் உட்கொண்டாரே! ஸ்ரீ குகப்பெருமான் ஜாதியில் செம்படவனன்றோ? பாரதத்தில் விதுரர் வீட்டில் கிருஷ்ணர் போஜனம் உட்கொண்டார். விப்பரகுலோத்தமராகிய வாமதேவர் பசியினால் பீடிக்கப்பட்ட போது நாயின் மாமிசத்தைப் புசித்தார். மநு (10 106) தவத்தில் முதிர்ந்த பாரத்துவாஜர் தம் புத்திரனோடு காட்டில் விருந்துவெண்ணும் தச்சனிடம் அநேக பசுக்களை வாங்கித்தின்றார். மநு (10-107) விஸ்வாமித்திரர் பசியினால் வருந்தும்போது சண்டாளன் கையிலிருந்த நாயின் மாமிசத்தை வாங்கித் தின்றார். மநு (10-108 பாகவதத்தில் திருப்பாணர் ஆழ்வாரானார். திருவிளையாடற் புராணத்தில் நந்தனார் அறுபத்து மூவரில் ஒருவராகி நாயனாராயிருக்கிறார் என்றும். ஜாதியில்லையென்றும் இவ்விருவரும் கோவில்களில் இப்பொழுதும் பூஜிக்கப்படுகிறார்கள் என்று காண்கின்றோம்.

"தென்திசைப்புலையன் வடதிசைக்கேகிற்
பழுதறவோதிப் பார்ப்பானுவான்
வடதிசைப்பார்ப்பான் தென்திசைக்கேகின்
நடையதுகோணிப் புலையனாவான்"

என்று கபில முனிவர் கூறியிருக்கிறார். ஔவை 'சாதியிரண்டொழிய வேறில்லை' என்றும், இராமலிங்கசுவாமிகள் 'ஜாதிகுலம் பேசும் கசடர்கள்' என்றும், திருநாவுக்கரசு நாயனார் 'சாஸ்திரம் பல பேசும் சளக்கார்காள்! கோத்திரமும் குலமும் கொண்டென்ன?' என்பதாகவும் இராமாநுஜர் ஜாதி வித்தியாசம இல்லையென்றும் பறையர்களை எல்லாம பிடித்து நாமமிட்டு பூணூல் பஞ்சகச்சம போடச்செய்து ஐயங்காராகச் செய்ததாகவும், தெய்வப் புலமைத் திருவள்ளுவர் முதலிய மகான்கள் ஜாதி வித்தியாசமில்லையென்றும் ஆச்சாரியார்கள் அருளிச்செய்த அரிய நூல்களில் விரிவாக கோஷித்திருக்கிறார்கள். மலையாளத்தில், வடநாட்டில் வசிக்க ஸ்தலமின்றி ஓடிவந்தவரும் தாயாரைக் கொலைசெய்தவரும் பராக்கிரமசாலியுமான பரசுராமர், முன் இவ்விடத்தில் வசித்துக் கொண்டிருந்த நம்பு—செல்லு, ஊராபட்ட ஒரு வகுப்பாரையும், கடல் தீரங்களில மீன் பிடிக்கும புலையர்களையும் பிடித்து பூணூல் முதலியவைபோட்டு, சிரசில் சிகை வைத்து ஓதி யாகங்களுக்கு வடபாஷையிலுள்ள மந்திரங்கள் ஓதுவதற்கு வாயில் நுழையாத படியால், தந்திரங்களாகிய கைஜாடைகள் கற்பித்து பிராமணர்களாக்கினதாயும், ஜகத்குருவாகிய சங்கராச்சாரியார் தீண்டாமை இல்லையென்று சொன்னதோடு பறையனை

(இதன் தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க)

# திரு. எம். கே. காந்தி அவர்களுக்கு

## திரு. என். தண்டபாணி பிள்ளை அவர்கள் எழுதிய பகிரங்கக் கடிதம்.

திரு. காந்தியவர்களே! நான் தங்களுக்கு செப்டம்பர் 3ந் தேதி, 7ந் தேதி, 12ந் தேதிகளில் வெளி வந்த "திராவிடன்" தினசரி மூலம் மூன்று பகிரங்கக் கடிதங்கள் தங்களுக்கு எழுதியிருக்கின்றேன். தாங்கள் தமிழ்நாட்டிற்குள் நுழைவதற்காக முதன் முதலில் சென்னை வந்தபோது மேற்படி கடிதங்கள் எழுதப்பட்டன. தங்களுடைய தமிழ்நாட்டு யாத்திரை பூராவையும் நான் மிகவும் கவனமாய் படித்தபின் தாங்கள் தமிழ்நாட்டை விட்டு திருப்பூரிலிருந்து விடைபெற்றுக்கொண்டு கடைசியாகப் போகும்போது தங்கள் சுற்றுப் பிரயாணத்தினால் என் மனதில் என்ன மாறுதல் ஏற்பட்டதோ அதையும் தங்களுக்கு எடுத்துக் காட்டிவிட இந்தக் கடிதத்தையும் பகிரங்கமாகவே எழுதுகின்றேன். தமிழ்நாட்டுப் பிராமணரல்லாதாரிடத்தில் தங்களுக்கிருக்கும் தாழ்வான எண்ணமானது அவர்களிடத்தில் நியாயமான அன்புகாட்ட முடியாதபடி தங்களைச் செய்துவிட்டதுடன் அவர்களைப் பழிவாங்கவும் தங்களைத் தூண்டிவிட்டிருக்கிறது என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இவ்வளவு சாதாரணமான துறையில் தாங்கள் தொண்டாற்ற முற்படுவீர்களென்று நாங்கள் கனவிலும் கருதவில்லை. தங்களை இனி மகாத்மாவென்றோ பிராமணரல்லாதாரிடம் அன்புள்ளவரென்றோ கீழ்வரும் காரணங்களைக்கொண்டு தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாதாராகிய நாங்கள் நினைக்க இடமில்லாமற் போய்விட்டது. இதை தைரியமாய்ச் சொல்ல முன்வந்ததற்காக என்னையும் என்போன்றோர்களையும் தாங்களும் தங்கள் தாசர்களும் மன்னிப்பீர்களென்றே முழுதும் நம்பியிருக்கின்றேன். தாங்கள் பொதுவாக உலகத்திலும் சிறப்பாக இந்தியாவிலும் தற்காலம் ஒப்புயர்வற்ற பெரியோராக இருக்கலாம். நல்லவராக இருக்கலாம்.

ஆனால் தங்களால் நீக்கிழைக்கப்பட்டு சுயமரியாதை பறிமுதல் செய்யப்பட்டு அதனால் மிதியும் பாதகம் அடைந்த பிராமணரல்லாத தமிழ்மக்கள் தங்களை எப்படி அவ்வாறு கொள்ள முடியும்? மதப் மாறுபட்ட ஒருவன் எப்படி பிறமதக்கொள்கைகளையும் அதன் பேராலுள்ள கடவுள்களையும், அவர்கள் அடியார்களையும், பெரியவரென்றும், மேலானவர்களென்றும் வணங்கமுடியாதோ அப்படியே எங்களுக்கு விரோதமான கொள்கையும் முடிவும் கொண்ட தங்களை நாங்கள் எப்படி சுயமரியாதைகெட்டு மகாத்மாவென்று ஒப்புக்கொண்டு தங்களைப் பின்பற்ற முடியும்? மௌலானா முகமதலிகூட மகாத்மா காந்தியைவிட ஒரு கெட்டுப்போன முஸ்லீம்தான் மத விஷயத்தில் தம்மால் பெரியவனென்று கொண்டாடப்படுவார் என்று கூறியிருப்பதை இங்கே குறிப்பிடுகின்றேன். தங்களுக்கு ஜீவகாருண்யமும், அன்பும் இருந்தால் இம்மாதிரி சுயமரியாதை உணர்ச்சி கொண்டு எழும் தமிழ்மக்களை, அவர்கள் மனம் புண்படுமாறு வருணாசிரமத்தைப்பற்றி (அது உண்மையானதென வைத்துக்கொண்டாலும்) தாங்கள் தப்பான அபிப்பிராயத்தை வெளியிட்டு மக்களை வேற்றுமைப்படுத்தி இழிவு செய்திருக்க மாட்டீர்கள்.

தாங்கள் சென்னைக்கு வந்திருந்தபோது எங்களுக்கெல்லாம் பார்ப்பனர்கள் விரோதிகளெனத் தெரிந்திருந்தும் மைலாப்பூர் அக்கிரகாரத்தில் அவர்களுடன் தங்கி நாங்கள் தங்களைவந்து பார்த்து எங்கள் குறைகளை தாராளமாய் சொல்லிக் கொள்வதற்கில்லாமல் புறக்கணித்தீர்கள். பேசுவதும், எழுதுவதும், பிராமணர்களைப் பற்றியும், அவர்களின் சமஸ்கிருத பாஷையைப் பற்றியும், அவர்களின் வருணாஸ்ரம தர்மத்தைப் பற்றியும், அவர்களின் மேன்மையைப் பற்றியும், அவர்களிடம் மற்றவர்கள் நடந்துகொள்ள வேண்டிய கடமைகளைப் பற்றியுமேதான் இருந்ததே ஒழிய, 100க்கு 96½ பேர் உள்ள மக்களைப் பற்றிய நன்மைகள் எவை தங்களால் கவனிக்கப் பட்டன என்று கேட்கின்றேன். தாங்கள் சுற்றுப்பிரயாணத்தில் தமிழ்நாட்டில் கீழ் கண்டவைகளைத் தவிர வேறு ஒன்றும் தங்களால் சொல்லப்படவில்லை. பிராமணர்கள் பிராமண விதவைகள் கிடைக்காவிடில், பிராமணரல்லாத நல்ல பெண்களைக் கல்யாணம் செய்து கொள்ளலாமென்று சென்னையில் பச்சையப்பன் காலேஜில் கூறியிருக்கின்றீர்கள். அதே சமயத்தில் பிராமண விதவைகளையாவது, அவர்களுக்கு மறு கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப் பட்டு புருஷன் அகப்படா விட்டால் பிராமணரல்லாதாரை மணந்துகொள்ளலாம் என்று கூட ஏன் தாங்கள் சொல்லத் துணியவில்லை. இது பிராமணக் கைம்பெண்களைவிட பிராமணரல்லாதாரை மிகக் கேவலமென்றும், தாழ்வென்றும் தாங்கள் எண்ணியிருப்பதை விளக்கவில்லையா?

கூடலூரில் பிராமணர்கள் தியாக புருஷர்கள் என்றும், அறிவின் பொக்கிஷமென்றும் தாங்கள் சொல்லியதிலிருந்து பிராமணரலலாதார்கள் தியாகத்திற்கு பயந்த லோபிகள் என்றும், பொதுநல எண்ணமற்ற சுயநலமிகள் என்றும் அறிவற்ற மூடர்கள் என்றும், நினைக்க இடமேற்படுகிறதா இல்லையா? அன்றியும் எங்கள் சுயபாஷையை விட்டு விட்டு சமஸ்கிருதத்தைப்படியுங்கள் என்று ஊர் தவறாமல் சொல்லும்போது தமிழின் தெய்வீகப் பெருமையையும், தேசீயத் தன்மையையும் தாங்கள் உணராமல் பேசுகிறீர்கள் என்று நாங்கள் வருந்தவேண்டியிருக்கின்றதா இல்லையா? தவிர பார்ப்பனர்களைத் தெய்வமாகக் கருதவேண்டும் என்று சொல்லுகிற பகவத்கீதையை மட்டும் இடைவிடாது பிரசாரம் செய்யும் தாங்கள் அதைவிட மேலானதாய் உள்ள திருக்குறள் போன்ற தமிழ் நூல்களை அறியாதது என் அர்த்தமென்ன? தமிழர்கள் ஆரியர்கள் அல்ல என்பதைத் தெரிந்திருந்தும், தாங்கள் ஆரியப்பாகுபாடான வர்ணாசிரம தர்மத்தை தமிழ்நாட்டில் புனருத்தாரணம்செய்ய முன்வந்திருக்கின்றீர்கள். தமிழர்களால் வெறுக்கப்படவேண்டிய அத் தர்மத்தை தாங்கள் ஸ்தாபித்து தமிழர்களை என்றும் பிராமணர்களுக்கு அடிமையாகக தாங்கள் அரும்பாடுபட்டு முயற்சி செய்கின்றீர்கள்.

பிறவியினால் ஜாதி என்று ஓரிடத்தில் கூறுகின்றீர்கள், ஜாதியில் உயர்வு தாழ்வு இல்லையென்று பிறிதொரு இடத்தில் சொல்லுகின்றீர்கள். ஜாதியின்படிதான் ஜாதித்தொழிலைவிடாமல் செய்துவரவேண்டுமென்று சொல்லுகிறீர்கள். ஆனால் தாசித் தொழிலைமட்டும் செய்யக் கூடாதென்று தாசி ஜாதியை சீர்திருத்தப்பார்க்கிறீர்கள். "பெற்றோர் குணம் பிள்ளைகளுக்குப் பிறவியில் வருகின்றது. அதைப்பின்பற்றித்தான் வருணாச்சிரம தர்மத்தை ரிஷிகள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஆதலால் பெற்றோர் தொழிலையே பிள்ளைகளும் செய்ய வேண்டும்" என்கிறீர்கள். அப்படியானால் ஒரு தாசித்தனம் அவன் மகளுக்கும் வருமென்றுதானே ஏற்படுகின்றது. அந்த தாசி மகளை யார் கல்யாணம் செய்துகொண்டு சீர் திருத்த முன்வரமுடியும்? பிறப்பின் வழிபற்றி வரும் குணத்தைக் கொண்டு அவர்கள் ஜாதித்தொழிலையே முறை பிசகாது செய்துவர வேண்டுமென்று தாங்கள் சொல்லி வரும்போது தச்சுத்தொழில், கொல்லத்தொழில் உழவுத்தொழில், சிற்பத் தொழில் முதலிய சாதாரணமாய் யாவரும் எளிதில் கற்றுக்கொள்ளக்கூடிய தொழிலே பிறவியிலேயே அமர்ந்துவிடுவதால் அதை விடாது செய்து வரவேண்டுமென்றும் ஏற்படுகிறது. அப்படியாயின் பிறவியிலேயே திருடுபவன், கசாப்புக்கடைக்காரன், சூதாடுகிறவன் முதலானவர்களும் அவர்கள் பிள்ளைகளும் எப்படி சீர்திருந்த நினைக்கமுடியும்?

உங்கள் வேதத்தின் படியே தாசிகளை யாரும் நல்லவர்களாக இருப்பார்களென்று நம்பி கல்யாணம் செய்துகொள்ள முடியாத படியும் அயோக்கியர்கள் யோக்கியர்களாகாதபடியும் அவர்களுக்குப் பெரியதொரு பாதகத்தை விளைவித்துவிட்டீர்களே?

மகாத்மாவாகிய தங்களுடைய பிள்ளைகளுக்கு மகாத்மாவின் குணம் இருக்கிறதா என்று தங்களை அந்தரங்கமாகக் கேட்ட நண்பர் ஒருவருக்கு, மகாத்மா ஆவதற்குமுன் மிருகப்பிராய இச்சையுள்ள போது பிறந்த பிள்ளை மிருகத்தன்மையுடனும், மனிதத்தன்மையுள்ளபோது பிறந்த குழந்தை மனிதத் தன்மையுடனும், தெய்வத்தன்மையுள்ளபோது பிறந்த குழந்தை தெய்வத்தன்மையுடனும் இருக்கிறதென்று சொல்லிய முறையில் தங்கள் சித்தாந்தப்படி முறையாக பெற்றோர் குணம் பிள்ளைகளுக்கு காலத்திற்கும் நிலைமைக்கும் தக்கவாறு உண்டாகிறதென்று சொல்லியிருக்கின்றீர்கள். இதன்படியே யோசித்துப்பார்த்தாலும் பிராமணனுக்குப் பிராமணத்தன்மையே இல்லாதபோது பிறக்கும் குழந்தைகளுக்குப் பிராமணர்கள் என்று பேர்கொடுப்பது எப்படி பொருத்தமானது என்றுதான் கேட்கிறேன். தமிழ்நாட்டில் அதுவும் ஆயிரக்கணக்கான வருடங்கள் கழித்து கலப்படமில்லாமல் தாயும் தகப்பனும் அசல் பிராமணர்களாக ஆரியர்களில் ஒரு தம்பதியையாவது தாங்கள் குறிப்பிட்டுக் காட்ட முடியுமா? அது முடியாதபோது தாங்கள் தற்கால முள்ள பிராமணர்களை பிராமணர்களென்றே கொள்ள வேண்டுமென்று சொல்லும் வாதத்திற்கு ஆதாரமெங்கே? பெற்றோர்களே அசலாய் இல்லாதபோது பிள்ளைகள் நகலாகவாவது எப்படியிருக்க முடியும்? தவிர பிராமணத்துவம் எங்கிருந்து இறங்குகிறது என்று தாங்கள் கூறமுடியுமா? பிராமணர்கள் தங்கள் ஜாதியிலும் மற்ற மூன்று வருணத்தாரிடத்திலும் பெண் கொள்ளலாமென்று மனுஸ்மிருதி கூறுகின்றன. அதன்படி பார்த்தால் மலையாளத்தில் உள்ள நாயர்களிற் பலரும் தாசி வீட்டிற் பிறந்திருக்கும் தமிழர்களிற் சிலரும் பிராமணர்கள் என்று தாங்கள் ஒப்புக்கொள்வீர்களா? மாட்டீர்கள் என்றே எண்ணுகிறேன். ஏனெனில் தாங்கள் ஒப்பும் புராணக் கதைகளின்படி வியாசனுகிய பிராமணனுக்குப் பிறந்த குழந்தைகளாகிய திருதராஷ்டிரனும், பாண்டுவும் பிராமணரல்லாத க்ஷத்திரியர்களாகவே இருக்கின்றனர். பிராமண ஸ்திரீயிடமிருந்து தான் பிராமணத்துவம் இருக்கிறதென்றால் 'சூத்திர' ஜாதியிற் பிறந்த மந்திரி சுப்பராயக் கவுண்டருக்கும் 'மிலேச்ச' தேசத்தில் பிறந்த அருண்டேல் நாயகருக்கும் பிராமணப் பெண்களின் மூலம் பிறக்கும் குழந்தைகளை தாங்களே பிராமணர்கள் என்று ஒப்புக்கொள்ளுகிறீர்களா? மாட்டீர்களென்றே நம்புகிறேன். ஏனெனில், (பெயர் ஞாபகமில்லை) முன் காலத்தில் பிராமண ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்த ஒருவனை சூத்திரன் என்றே இதிகாசத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தவிர மேற்படி இதிகாசங்களில் புலைச்சிக்கும் சக்கிலி

ச்சிக்கும் பறச்சிக்கும் மச்சகந்திக்கும் பிறந்த குழந்தைகளை பிராமண ரிஷிகள் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படிப் பிறந்த குழந்தைகள் தான் வியாசர், பராசர் போன்றவர்கள். இவர்கள் கோத்திரத்தில் பிறந்ததாக பெருமையுடன் தற்காலப் பிராமணர்கள் சொல்லிக் கொண்டு பெருமை யடைகிறார்கள். தற்காலம் அனுபோக வாயிலாகப் பார்ப்போமானாலும் தமிழ்நாட்டில் தீர்த்த விசேஷம் தலவிசேஷம் மூர்த்தி விசேஷம் உள்ள ஊர்களில் உள்ள பிராமண ஸ்திரீகளுக்கும் பிராமணரல்லாதாருக்கும் சம்பந்தப்பட்டு பிறந்திருக்கும் குழந்தைகள் பிராமணர்களாகக் கருதப்பட்டு கோயில் அர்ச்சகர்கள் முதல் புரோகிதன் ஈறாக வுள்ள எல்லா தொழிலையும் மேற்கொண்டு செய்து வருகின்றனர். இதனால் பிராமணனிடமிருந்தும் தனித்தனி யராமணத்தியிடமிருந்தும் யாக பிராமணத்துவம் இறங்க வில்லை யென்றும், பிராமணரல்லாத ஆடவரிடமிருந்தும் பெண்களிடமிருந்தும் கூட தனித்தனியாக பிராமணர் ஒரு காலத்தில் பிறந்து வருகிறார்கள் என்பது நன்கு விளங்குகிறது. இதை தாங்கள் அறியவில்லை யென்று சொல்ல முடியுமா? அப்படி இருக்க கடைசியாக தாங்கள் திருப்பூரில் வருணாஸ்ரம தர்மத்தைப்பற்றி சொன்ன முடிவான அபிப்பிராயம் தமிழர்களுடைய மனதைப் பிளந்து விட்டது. தமிழர்களிடம் தங்களைப்பற்றி யிருந்த உயர்வான எண்ணமெல்லாம் இதனால் ஒரு நொடியில் பறந்திருக்குமென்று உறுதியுடன் கூறுகின்றேன்.

'திருப்பூரில் இம்மாதம் 23ந் தேதி பிற்பகல் தங்களிடம் ராவ் சாகிப் விட்டல்தாஸ் சேட், ஸ்ரீமான்கள் எம். என். சிக்கண்ண செட்டியார், டி. எஸ். கந்தசாமி செட்டியார் கே. எஸ். இராமசாமிக் கவுண்டர் கே. வி. வெங்கடாசலம் பிள்ளை டி. எஸ். அவிநாசிலிங்கம்செட்டியார், பி. டி. ஆஷர் சேட் முதலானவர்கள் பேசுகையில் தற்காலத்திலுள்ள பிராமணர்கள் அவர்களுக்குத் தகுந்ததாய் ஏற்பட்டிருக்கும் கடமைகளைச் செய்யாமலிருப்பதால் அவர்களை ஏன் பிராமணரல்லாதார்கள் என்று சொல்லக்கூடாதென்று கேட்டதற்கு தாங்கள் 'அப்படி சொல்லுவது சரியல்ல, இக்காலத்திய பிராமணர்களில் பெரும்பாலார் அவர்களுடைய கடமையைச் செலுத்தவில்லையானாலும் "அவர்கள் அந்த வகுப்பில் பிறந்தவர்களாகையால் அவர்களை பிராமணர்கள் என்றே சொல்லுவது நியாயமாகும் 'என்றும் பிராமணரல்லாதார்களில் பலர் பிராமணர்கள் செய்யவேண்டிய கடமைகளைப் பூர்த்தியாகச் செய்து வருவதால், அவர்களை நாம் பிராமணர்கள் என்று ஏன் அழைக்கக்கூடாதென்று கேட்க 'அவர் பிராமணரல்லாதார் பிராமணர்களின் கடமைகளைச் செய்துவந்த போதிலும் அவர்களை பிராமணர்கள் என்று சொல்லகூடாது' என்றும் பிராமணீயக்கொள்கைகளை அனுஷ்டித்து வருபவர் என்று மட்டுந்தான் சொல்லவேண்டும் என்று சொன்னதும் தவிர மறுபிறப்பில் தான் அப்படிப்பட்ட பிராமணரல்லாதார்கள் பிராமண வகுப்பில் பிறக்கக் கூடுமென்றும் தாங்கள் சொன்னதாக மித்திரனில் காணப்படுகிறது. இதனால் பிராமணல்லாதவர்கள் எவ்வளவு ஒழுக்கத்துடன் நடந்தாலும் இகத்திலும் பிராமணனுக்கு அடிமையாயிருக்கவும், மறுமையிலும் அவனுக்குப் பின்னாகப் பிறக்கவும் எண்ணும்படியான மூட நம்பிக்கையை உண்டுபண்ணவும் தாங்களும் எவ்வளவு உயர்ந்த சீலராயிருந்தாலும் பிராமணரல்லாதார் தான் என்றும் தாமும் மறு ஜனனம் பிராமணனுக்கு பிராமணத்தி வயிற்றில் பிறந்தால் தான் பிராமணனாக முடியுமென்றும் அர்த்தப்படும்படி பேசியிருக்கிறீர்கள். இப்படித்தாங்கள் பேசிய பிறகு தங்களால் எங்களுக்கு இனி எப்படி விடுதலை கிடைக்கக்கூடும்.

தமிழர்கள் எத்தனை ஜென்மம் எடுக்க நேர்ந்தாலும் தங்களால் பிராமணர்கள் என்று அழைக்கின்ற அயோக்கியர்கள் வயிற்றில் பிறக்க கனவிலும் நினையார்கள். கதரியக்கம் எவ்வளவு பரிசுத்தமாயிருந்த போதிலும், அது முற்றும் பிராமணரல்லாதாருக்கே நன்மை என்பது உண்மையான போதிலும், அதனால் சுயராஜ்யமே கிடைப்பதாயிருந்தாலும் அசந்து இந்தமாதிரி கொள்கையுள்ள தாங்கள் தலைமையாய் இருந்து நடத்தும் வரையில் அந்தச்செல்வாக்கைக்கொண்டும் தாங்கள் எங்களை சுயமரியாதையற்ற அடிமைப் படுகுழியில் வீழ்த்தி விடுவீர்கள் என்றஞ்சி தங்களிடமிருந்து கதரியக்கம் விடுதலை பெற வேண்டுமென்று கூட நினைக்கவேண்டிய நிலைமையில் எங்களை வைத்து வைத்துவிட்டீர்களென்று வருந்துகிறோம். உண்மையை உணர்ந்தபடி சொன்னதற்காக மன்னிக்கவும்.

மற்றபடி தங்களிடம் எண்ணில்லாத பிற நற்குணங்களும், தியாகங்களும் நிறைந்திருக்கின்றன என்பதை உணர்ந்து அதற்குரிய பக்தியுல்லாசத்துடன் தங்களைப் போற்றுகின்றேன் தாங்கள் இம்மையில் மகாத்மா வாகவிருந்ததில்லை. இறக்கும் போதும் மகாத்மாவாகச் சாகப் போவதில்லை என்று ஏற்படுகிறது. ஏனெனில் பிராமணனுக்குப் பிறந்து பிராமணனாக வேண்டும் என்பதாக தாங்களே கூறுகின்றீர்கள். அந்தப்படியே அடுத்த ஜென்மத்தில் எதிர்ப்பதைவிட இந்த ஜென்மத்திலேயே தங்களை பிராமண தாசனாகக் கருதி எதிர்ப்பது மேலென நினைக்கின்றேன். நடுவில் தோன்றிய மகாத்மா நடுவிலேயே போகும்படி விட்டு விட்டீர்கள். பிராமணரல்லாதாரிற் பிறந்து மகாத்மாவாய் விளங்கி மகாத்மா என்று எல்லோராலும் தாங்கள் கொண்டாடப் படுவது என்றென்றும் நிலைத்து நிற்குமென்றும் பிராமணரல்லாதாரும் மகாத்மா ஆகலாம் என்றும் எவ்வளவோ பெருமையுடன் எண்ணியிருந்தோம். கிறிஸ்து, புத்தர், முகம்மது நபி முதலியவர்களைவிட தன் ஆயுள்நாளிலேயே இவ்வளவு பெருமை பெற்று விளங்கி இவ்வளவு பின்பற்றும் அறிவாளிகளைக் கொண்ட மகாத்மா தாங்கள் தான் என்றும் தங்களைவிட உலகில் பெரியவரே இதுவரை தோன்றியதே இல்லை யென்றும், நினைத்திருந்தோம். புத்தர், கிறிஸ்து, முகம்மது நபியைவிட தங்கள் புகழும் உபதேசமும் இவ்வளவு சீக்கிரத்தில் எங்களுக்கு விரோதமாக முடியுமென்று நாங்கள் யாரும் ஒரு பொழுதும் நினைத்ததில்லை. என் செய்வது? நாங்கள் தங்களை மகாத்மாவென்று நினையாவிடினும் ஜனங்களால் தங்களுக்கு வழங்கப்பட்ட மகாத்மா என்ற பொறுப்பையாவது உணர்ந்து தாங்கள் அதைக் காப்பாற்றி உலகத்திற்கு நல்வழியில் பயன் படுத்தியிருக்கக்கூடாதா? கதர் விஷயத்தில் மட்டும் தலையிட்டு மற்றதில் மௌனம் சாதிக்கக்கூடாதா? எல்லாவற்றிற்கும் தாங்கள் முன்னின்று எங்களுக்குக் கெடுதி உண்டுபண்ணும் விஷயத்திலும் அபிப்பிராயம் கொடுத்து எங்களை சங்கடப் படுத்துகின்றீர்கள். வயித்தியம் வேண்டியதில்லை யென்றும் களிமண் வயித்தியமே போதுமென்றும் சுகாதாரம் எழுதினீர்கள்

இப்போது அதை மாற்றி "ரணம், ஜுரம், அஜீரணம், மஞ்சட்காமாலை முதலிய பல வியாதிகளுக்கும் மண்ணையும் ஜலத்தையும் கொண்டு சிகிச்சை செய்தேன். பலருடைய வியாதிகள் குணமடைந்தன. ஆனால் இந்தச் சிகிச்சை முறைகளில் தென்னாப்பிரிக்காவில நான் இருந்த காலத்தில் எனக்கிருந்த நம்பிக்கை இப்பொழுது எனக்கு இல்லை. அனுபவத்திலிருந்து இந்த முறைகளால் அபாயமேற்படக் கூடுமென்பதையும் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். என்னும்" தங்கள் சரித்திர வாலாற்றில் இவ்வாரம் எழுதியிருக்கின்றீர்கள்.

சென்னையில் வருணாசிரம தர்மத்தை ஆதரித்து விட்டு கும்பகோணம் போனதும் அங்குள்ள பிராமணப் பண்டிதர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் "என் வருணாசிரம தர்மத்திற்கு வேறு கொள்கைகள்" என்று கூறினீர்கள். இந்து மதக்கொள்கைகளையும், வேத புராணங்களையும் நம்பி பின்பற்ற வேண்டுமென்றும், எதையும் மூட நம்பிக்கையென்று தள்ளக்கூடாதென்றும், பிராமணரல்லாதார்களுக்கு புத்தி சொல்லி விட்டு கும்பகோணத்தில் போய் "அறிவுக்கெட்டாதவைகளையும் அனுபோகத்திற்கொத்து வராததையும் நம்பி பின் பற்ற தாங்கள் தயாராயில்லை" என்று சொல்லி இருக்கின்றீர்கள்.

பகவத் கீதையைப் படிக்கச் சொன்னீர்கள். மன்னார்குடியில் ஒரு பிராமணன் தர்க்கம் செய்து தீண்டாமை பகவத்கீதையில் உண்டு என்று ரூபித்த பிறகு தப்ப வழியின்றி "அதற்கு நான் கொள்ளும் அர்த்தம் வேறு" என்று வியாக்கியானம் செய்கிறீர்கள். அதில் பார்ப்பனர்களை தெய்வமாகக் கருதும்படி சொல்லி இருக்கின்றதென்றால் அந்தப் பார்ப்பனர் வேறு என்கிறீர்கள். பிறப்பினால் எல்லோரும் சமம் என்று சொல்லி விட்டு குணம் பிறப்பை யொட்டி வருகிறதென்கிறீர்கள். குணம் பிறப்பையொட்டி வருவதால் பிறப்பை உயர்வென்று சில இடத்தில் சொல்லுகிறீர்கள். தொழிலிலும், ஜாதியிலும் சமத்துவம் என்றும், தோட்டிக்கும் தொண்டமானுக்கும் ஒரே மதிப்பும், ஒரே சம்பளமும் கொடுப்பது நியாயமென்றும் கூறுகின்றீர்கள். நாங்கள் பிராமணீயக் கொடுமையை ஒழித்து பிராமணர்களிடம் சகோதர பாவத்துடன் பழக விரும்பினால் தாங்கள் "பிராமணர்களை வேண்டுமானால் அழிக்க முயலுங்கள். பிராமணீயத்தை அழிக்க முயலாதீர்கள்" என்று அடிப்படையில் வித்தியாசமாய் உபதேசம் செய்கிறீர்கள். பிராமணரல்லாதாரிடம் பெரும் பொருள் பெற்று பிராமணர்களுக்கே மிகுதியும் போய்ச் சேரும்படி செலவிட்டு விட்டு கணக்குக் கேட்டால் மொட்டையாய் "பகுதி பிராமணரல்லாதார்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்கிறீர்கள். "குடி அரசில்" பிரசுரித்த கணக்குப்படி கதர் நிதி பிராமணர்களுக்கே பயன்படுவதைத் தடுக்க என்ன முறை கையாளப்போகிறீர்கள்? பிராமணரல்லாதார்கள் சுயநலங்கொண்டு வகுப்பு துவேஷத்தைக் கிளப்பி விட்டு உத்தியோக வேட்டையாடுவதால் அவர்களிடம் அநுதாபம் காட்ட முடியாதென்று மதுரையில் அறிவித்தீர்கள். சமீபத்தில் சட்டசபை கேள்விகளுக்கேற்பட்ட பதில்களில் உத்தியோகங்கள் 100க்கு 90 பாரிடமிருக்கிறது என்பதை அறிந்து தாங்கள் சொன்னதை வாபீஸ் பெறுவீர்களா? நான் உணர்ந்ததை எழுதியதற்காக தாங்களும் தங்கள் சிஷ்யர்களும் என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன்.

குறிப்பு:— தாங்கள் தமிழ் நாட்டில் இந்த தடவை காலடி வைத்தது முதல் அதை விட்டு வெளியில் போகும் வரையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களில் சில வருமாறு:—

1 பிராமண பிராமணரல்லாதார் சண்டை பலமாக நடக்க அஸ்திவாரம் கெட்டியாகப் போடப்பட்டு விட்டது.

2 வருணாசிரம தர்மத்தைப்பற்றி தாங்கள் பிரசாரம் செய்த பிறகு திருட்டுத்தனமாய் இந்நாட்டில் வருணாசிரம பிரசாரம் செய்து கொண்டிருந்த பார்ப்பனர்களுக்கு இப்போது தைரியமேற்பட்டு காங்கிரஸிலும் மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது அதை அதிகமாகக் கண்டிக்க பிராமணரல்லாதாருக்கு அவசியம்நேர்ந்துவிட்டது.

இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

# திருவண்ணாமலை கோவில் வழக்கு.

## கோவிலுக்குள் யாரும் போகலாம்.

### ஸர். சதாசிவய்யரின் சாட்சியம்.

இன்று காலை 11 மணிக்கு டவுன் சப் மாஜிஸ்டிரேட் அவர்கள் முன்பு கோவில வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கோர்ட்டுக்கு வந்து உள்ளேயும் வெளியேயும் உட்கார இடமின்றி ஒருவர் மேல் ஒருவர் நின்று கொண்டிருந்தனர். ஸ்ரீ. கண்ணப்பருக்காக வேலூர் வக்கீல் ஸ்ரீ. வி. கிருஷ்ண செட்டி பி. ஏ. பி. எல். ஆஜரானார். எதிரிகளுக்கு உள்ளூர் வக்கீல்கள் ஸ்ரீ. இராமசாமி ஐயரும், விஜயராகவாச்சாரியாரும் ஆஜரானார்கள். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜும் இந்துமத பரிபாலன போர்டு தலைவருமாகிய சர். டி. சதாசிவ ஐயர் ஸ்ரீ. கண்ணப்பர் சார்பாய் இந்துமதத்திற்கு நிபுணர் என்கிற முறையில் 6-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கொடுத்த சாட்சியம் பின்வருமாறு:--

கேள்வி-தாங்கள் ஹைக்கோர்ட்டில் மாஜி நீதிபதியல்லவா?

பதில்—ஆம்,

கே—சென்னை சட்டசபையில் இந்துமத பரிபாலன சட்டம் வாதிக்கப்பட்ட காலத்து தாங்கள் எக்ஸ்பர்ட் மெம்பராக அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்படவில்லையா?

ப—ஆம்.

### இந்துக்கள் யார்.

கே—இந்துக்கள் என்போர் யார்?

ப—சமஸ்கிருதத்திலுள்ள ருக்வேத மந்திரங்களிலும், ரிஷிகளின் வாக்கியங்களிலும் நம்பிக்கையுள்ளவர்களெல்லாம் இந்துக்களென்று நான் நினைக்கின்றேன்.

கே—ஆதிதிராவிடர்கள் இந்துக்களா?

ப—ஆதிதிராவிடர்கள் மேற்கூறியவைகளில் நம்பிக்கையுடையவர்களாக இருந்தால் அவர்களும் இந்துக்களே,

கே—இந்துமதத்துள் பிறப்பினால் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை உண்டா?

ப—பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டென்ற கொள்கைக்கு இந்து சாஸ்திரங்கள் மதிப்புக் கொடுக்கவில்லை.

கே—இந்துக்கள் பல வகுப்பாருள்ளும் உடன் உண்ணல் வைத்துக்கொள்ளலாமா?

ப—எவன் ஒருவன் சுத்தமான உணவை அன்புடன் அளிக்கின்றானோ அவன் யாராயினும் அவனுடன் உண்ணலாம்.

கே—ஆதிதிராவிடர்கள் வீட்டில் சாப்பிட்டாலும், அவர்களைத் தீண்டினமையாலும் ஓர் இந்து தன் சாதியையும், கோவிலுக்குள் நுழையும் உரிமையையும் இழக்கின்றானா?

ப—குடிகாரனான ஓர் ஆதிதிராவிடனோடு சாப்பிட்டால்தான் ஒருவன் சாதியை இழக்கின்றான். இல்லாற்போயின் இல்லை,

கே—குடிகார பிராமணனுடன் அல்லது ஓர் உயர்ந்த சாதியானுடன் இந்து என்பவன் சாப்பிட்டால் சாப்பிட்டவன் சாதியை இழக்கின்றானா?

ப—எந்த வகுப்பைச் சார்ந்த குடிகாரனோடு சாப்பிட்டாலும சாதியையும் கோவிலுக்குள் நுழையும் உரிமையையும் இழக்கின்றான். ஆனால் தான் குடிகாரனோடு சாப்பிட்ட குற்றத்திற்காக கோயிலுக்குள் நுழையுமுன் வருந்துவானாயின், மீண்டும் இழந்த உரிமையைப் பெறுகின்றான்.

கே—தாங்கள் சமுதாய சீர்திருத்தக்காரரல்லவா?

ப—ஆம்.

### பிறப்பினால் உயர்வுண்டா

கே—தீண்டாமையைக் குறித்தும் சாதி ஒழிவதைக் குறித்தும் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப—பிறப்புக்கு மிகவும் உயர்வு கொடுக்கும் படியான இப்பொழுதிருக்கும சாதி வேற்றுமை ஒழியவேண்டியதுதான். குடிகாரன், அசுத்தமுடையவன், நோயாளி, கெட்ட குணமுடையவன் முதலியவரை தொடாமல் இருப்பது நலம். மேற்கூறியவர்கள் தான் தீண்டப்படாதவர்களன்றி, மற்றவர்களெல்லாம தீண்டப்படக் கூடியவர்களே!

கே—ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் போகலாமென்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்களா?

ப—சொல்லியிருக்கலாம் சுத்தமான பக்தியுள்ள ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் போவதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை கிடையாது.

கே—தாங்கள் ஆதி திராவிடர்களுடன் சாப்பிட்டிருக்கின்றீர்களா?

ப—நான் ஆதிதிராவிடர்களுடன் சாப்பிட்டிருக்கவேண்டும் சென்னையில் கூடிய தீண்டாமைவிலக்கு மகாநாடு சம்பந்தமாக விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடந்த விருந்தொன்றில் நான் ஆதிதிராவிடர்களுடன் சாப்பிட்டிருக்கிறேன். இது பத்திரிகைகளிலும வெளிவந்திருக்கின்றது.

கே—தாங்கள் சென்ற கார்த்திகை திருவிழாவுக்குத் திருவண்ணாமலை வந்திருந்தீர்களா?

ப—ஆம்.

கே—நீங்கள் கோயிலுக்குள் சென்று அண்ணாமலையாரைத் தெரிசனம் செய்தீர்களா?

ப—ஆம்.

கே—தங்களுடன் கோயில் சிப்பந்திகள் வந்து சாமி தெரிசனம் செய்து வைத்தார்களா?

ப—கோயில் சிப்பந்திகள் வந்தார்களோ, வரவில்லையோ எனக்கு ஞாபகமில்லை.

கே—குருக்களெல்லாம் கோயில் வேலைக்காரர்களா?

ப—ஆம் அவர்கள் கோயில் வேலைக்காரர்கள்தான்.

கே—அவர்கள் நம்பிக்கை துரோகம் செய்தாலும், சரிவர நடந்து கொள்ளாமல் இருந்தாலும் அவர்களுக்கு அபராதம் விதிக்கவும் வேலையினின்று நீக்கவும் முடியுமா?

ப—இந்துமத பரிபாலனச் சட்டம் 43வது செக்ஷன்படி அவர்களைத் தண்டிக்கலாம்.

கே—குருக்கள் தம்மனம்போல் நினைத்த நேரத்தில் பூசை செய்யவும், கதவை மூடிக்கொள்ளவும செய்யலாமா?

ப—அவர்கள் அவ்விதம் செய்யமுடியாது.

கே—கோயில் பூசைகள் இந்த இந்தக் காலத்தில் இந்த இந்த விதமாய் நடைபெற வேண்டுமென்ற ஒழுங்கிருக்கின்றதா?

ப—ஆம்.

கே—கோயிலில் நடக்கும் ஒழுங்கீனங்களுக்கு எக்சிகியூட்டிவ் டிரஸ்டி பாத்தியப்பட்டவரல்லவா?

ப—ஆம.

கே—பிப்ரவரி மாதம் 7ந் தேதிக்குப்பின் 1வது எதிரியும், 3வது எதிரியும் தங்களை வெட்டவலம ஜமீன்தார் அவர்களுடன் வந்து பார்த்தார்களா?

ப—பார்த்ததாகத்தான் ஞாபகம்.

கே—இந்த வழக்கைக் குறித்து அவர்கள் தங்களிடம ஏதாவது முறையிட்டுக் கொண்டார்களா?

ப—ஞாபகமில்லை.

கே—தாங்கள் எப்படியாவது இந்தவழக்கை சமாதானப்படுத்த வேண்டுமென்று தங்களிடம வேண்டிக்கொள்ளப்பட்டதா?

ப—ஞாபகமில்லை.

கே—வைஷ்ணவர்களுக்கு சிவக்கோயிலுக்குள் நுழைய உரிமை உண்டா?

ப—உரிமை உண்டு.

### பெசன்ட் சம்பவம்

குறுக்கு விசாரணை செய்யப் பட்டதில் அவர் கூறியதின் சாரம்'—

ஆதிதிராவிடர்களுக்குப் பொதுவாக வேதத்தில் நம்பிக்கை உண்டு. ஆகையால் அவர்கள் இந்துக்களே. தென்னிந்தியாவில் மட்டும் அவர்கள் கோயிலுக்குள் நுழையவிடமறுக்கப்படுகிறார்கள. இந்து மதத்தில் பல தீங்குகள் இருக்கின்றன. உதாரணமாக பிறப்பை முன்னிட்டு ஒரு ஜாதியைச் சார்ந்திருக்கின்றவன், எவ்வளவு உயரிய ஒழுக்கமும் குணமுடையவனானாலும் தான் பிறந்த சாதியைவிட்டு மேலேறமுடியவில்லை. கோயிலுள் ஆதிதிராவிடர்களுள் மிக பக்தியுடையவர்கள்கூட போக முடியவில்லை. இத்தகையவும் இவைபோன்றவையுமான தீங்குகளை எல்லாம் நான் ஒழிக்க விரும்புவதால் என்னைச் சமுதாய சீர்திருத்தக்காரன் என்று சொல்லிக் கொள்ளுகின்றேன். சில கோயில்களுள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற வித்தியாசம் இல்லை. இவ்வித்தியாசங்கள் எனக்கு விருப்பமில்லை. சிதம்பரத்தில் தீட்சதர்களே அன்னி பெசண்டு அம்மையாரைப் பிராமணர்கள் போகும்இடம் வரை அழைத்துக் கொண்டு போயிருக்கின்றார்கள். எனக்கு இச்சம்பிரதாயங்களிலும் 2 அணாகொடுக்கும்பிராயச்சித்தங்களிலும் நம்பிக்கைஇல்லை. என்னுடைய பிராயச்சித்தம்

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க]

# இராமாயணத்தின் உள்ளுரை.

(உத்தமர் எழுதுவது)

இனி, எழுதப் போகுமவற்றால் நம்மை நாஸ்திகனென்றாவது கொடிய வீரசைவன் அல்லது வைஷ்ணவத் துவேஷி என்றாவது நண்பர்கள் பிறழ உணர்ந்து கொள்ளாமலிருக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். சத்தியின் வடிவமாயும், இயற்கை நிலப்பாகுபாட்டில் காடும் காடும் சார்ந்த இடமுமாயமுல்லை நிலப்பகுதிக்கு அதிதெய்வமாயும் 'தீரின்றமையாதுலகு' என்ற உண்மையை அறிவுறுத்தும் பொருட்டு தளிகடல் நாப்பணவதிந்து நாரணன் என்ற பெயர் பூண்டவராயும் உள்ள திருமாலின் மெய்த்தொண்டர்களது அடிப்பொடிக்கும் ஒரு அன்பு பூண்டவர்களில் நாமும் ஒருவராவோ மென்பதைப் பணிவுடன் முதலில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இனி, இராமாயணம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட அரசான தசரதச் சக்ரவர்த்தி யென்பாருக்கு திருக்குமாரனாய்ப்பிறந்து ஒரு குறிப்பிட்ட நகராகிய அயோத்தி நகரத்து அரசராய்த்திகழ்ந்த இராமனென்று பெயர் பூண்ட ஒரு அரசரது சரித்திரம் என்று சொலக்கூடாது. மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களுள் ஒன்றாய்த் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தம் இம்மண்ணுலகில் திருவவதாரஞ் செய்த திருமாலின் சரித்திரமே யாகுமென்றுதான் சொல்லவேண்டும என்பார் ஒரு பகுதியினர். தம் சமய உணர்ச்சிமேலீட்டால் இவ்வாறு உரைப்பாருடன் நமக்குச் சண்டையில்லை. ஆயினும் அவர்களை நாம் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எப்படியவர்கள் தம உணர்ச்சி காரணமாக இராமரைத் தெய்வாம்சமாகக் கொண்டு வழிபடுகிறார்களோ, அப்படியே தென்னிலங்கை முதல் ஆந்திரதேசம் முடியத் தனியாக செலுத்தி பத்து திசைகளும பணிக்க மேற்கொள்ளும பதின்முடிச்சக்ரவர்த்தியாயிருந்தவரும், ஆதி தொட்டே உள்ளதாகக் கூறப்படும நால் வேதங்களில் ஒன்றாய் சாம வேதகர்த்த ஆசிரியரென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டவருமான சிறந்த சிவபக்தி மிகுந்த 'இராவணேஸ்வரனையும, "அவர் அசுரனன்று இராக்கதனனறு, சிவாம்சம்பூண்ட சிவ அவதாரமல்லவாயினும பாவரும் வியக்கத்தக்க சிவபக்தி பூண்ட சிவனடியாரில் தலை சிறந்து விளங்கினவர்" என்று உயத்துணர்ந்து கொள்வோருடன் அவர்களுஞ் சண்டையிடக்கூடாதென்பதே. இராமரைத் திருமாலின் அவதாரமென்று நீங்கள் கொள்ளுமபோது இராவணரைச் சிவனடியாரென்று ஒருவர் ஒப்புக் கொள்ளின், அதனால் மதவுணர்ச்சி கொண்டு சண்டையிடுதல வேண்டுமோ? இராமரால் வெற்றி கொள்ளப்பட்டாரென்ற ஒரு காரணம பற்றி இராவணரது உண்மை யொழுக்கம் குறைவு படுத்தப்பட்டு அவர் அசுரனாக மதிக்கப்படுதல வேண்டுமா? இவ்வளவேன்? தற்காலத்திலே நம் கண்ணெதிரிலேயே உத்தம பூஷணராய் மகாத்மா காந்தியவர்களை எல்லோருந் தலைவராகக் கொண்டு வரும்போது அவர் வாழ் நாளிலேயே அவரைப்பற்றிப் புராணங்கள் எழுதப்பட்டு விட்டன. அவரும் 'தரித்திர நாராயணன்' 'இராம இராஜ்யம' என்ற வார்த்தைகளை இடங்கண்டபோதெல்லாம் பேசியும் எழுதியும் வருவதாலும், உண்மைப் 'பிராமணர்களுக்கு இணை உலகிலொருவருமில்லை, அவர்களே பூசுரர்கள் அவர்களே உயர்ந்தவர்கள்' என்று பல்லவி பாடி வருணாசிரமம் நிலைநிறுத்தப்பட்டு வருவதாலும், அவரையும் பிற்காலத்தில் திருமாலினவதாரம என்று கூறி, அவரை யெதிர்த்தோரோ அல்லது அவருடன் மாறுபட்டோரோ 'அசுரர்கள்' என்று எழுதப்படுவார்கள் என்பது உறுதி. இப்பொழுதே அவ்வாறு ஒரு சிலர் எழுதவுந் துணிந்து விட்டனர். ஆகவே அதையும் உண்மையென்றே கொள்ளவேண்டும், தெய்வ வாக்காக ஒப்புக்கொள்ளவேண்டும், என்று ஒரு சிலர் கூற முன்வரின் அது எத்தகைய நகைப்புக்கு இடந்தருமோ? எதிர்ப்புக்கும இடமாகும். இதை அன்பர்கள் கூர்ந்து கவனித்து இராமாயணத்தின் தெய்வாம்சத்தை ஒருபுறம் தற்சமயம் விலக்கி வைத்து உண்மையுள்ளுறைப்பொருளைக் கண்டறிய முயல்வார்களாக,

இனி, இராமாயணத்தின் உண்மைப் பொருள் யாதெனக் கூறுவோரில் பலர் பல விதமாகப் பகர்ந்திருக்கின்றனர். அவற்றில் முக்கியமாக மூன்றை யெடுத்துக் கொள்வோம்.

முதலில், மதத்தின் சார்பாகப் பொருள் கூறவந்தோர், இராமாயணம் தென்னாட்டில் வைணவம் கால் கொண்ட வரலாற்றையே குறிக்குமென்று சொல்லுவர். அவன் அவள் என உண்மைப் பாகுபாடு கொண்டு அவனைச் சித்தாகவும் அவளைச்சத்தியாகவும அவனும அவளும் சேர்ந்த ஒன்றே, அதாவது, சித்தும சத்தியுஞ் சேர்ந்த ஒன்றே, பரம் பொருள் என்று உண்மைத் தத்துவமுணர்ந்து கைப்பற்றிய தென்னாட்டில், 'அரியுஞ்சிவனுமொருவாருமறிலாா' எனப்பதும்போலத் திருமாலை வழிபடுவதுஞ் சிவனை வழிப்படுவதேயாகும் எனச்சமரச மிகுந்திருந்த தென்னாட்டில், சிவமாகிய அன்பைக் கீழ்ப்படுத்தி வீரஞ்செறிந்த சத்தி வடிவமான விஷ்ணுவை மேம்படுத்தி வைஷ்ணவம சைவத்தை வெற்றி கொண்டது என்று ஒருவனது ஒரு கை மற்றொரு கையை வென்றதுபோல மகிழ்ச்சியடைந்து கூறிக்கொள்வோர் கூறிக்கொள்ளட்டும. அது பற்றுள்ளங்கொண்டு கூறிய கூற்றாகலின் இதை விடுத்து மேற்செலவோம.

இரண்டாவதாக சமூகதத்துவ படி பொருள் காண வந்தோர், சீதையெனபது கலப்பையின் பகுதிக்கு பரியாயப் பெயர், கலப்பை உழவுக்கு முக்கிய கருவி, ஆதலால் கலப்பையாகிய சீதையை இராவணன் தூக்கி வந்தானென்பது வடநாட்டிலிருந்த உழவுத் தொழில் தென்னாட்டுக்கு முதன் முதல் வந்ததென்பதையே குறிக்குமென்று கூறினார். இதனால் தென்னாட்டார் உழவுத் தொழிலையே முதன் முதல் அறியாமலிருந்து பின்னர் இராவணன் காலத்தில் தான் அறிந்து கொண்டனர் என்பது பெறப்படும். இக்கூற்று ஆராய்ச்சி முறைப்படி ஒரு கணமும் நிலைநிற்காது என்று நாம் கூற வேண்டியதில்லை. இராவணன் சீதையைச் சிறை பிடித்ததால் உழவுத் தொழில் தென்னாட்டுக்கு முதன் முதல் வந்தது என்பதை நாமஒப்புக்கொள்வதாக வைத்துக் கொள்கிறோம். அதே சீதையை இராமன் மீட்டுக் கொண்டு வடநாட்டிற்கேகிவிட்ட பிறகு அவருடன் ஏன் அவ்வுழவுத்தொழில் செல்லவில்லை? எப்படி அது இன்றும் தென்னாட்டில் இருந்து வருகிறதென்று கேட்டால் என்ன பதிலளிப்பார்களோ தெரியவில்லை, மேலுஞ் சீதை இராவணரது மகள். அவள் பிறந்ததால் இலங்கை யழியுமென்று சோதிடர்கள் கூறினமையால் அவளை இராவணர் ஒரு பெட்டியில் வைத்துக் கடலில் விட்டுவிட்டார். அதுவே மிதிலையில் ஒதுங்கி ஜனகரால் எடுத்துக் கொள்ளப்பட்டதாகுமென்று நமது பாட்டிமார்கள் கூறும் ஒரு கதையை நாம் கேட்டிருக்கிறோம். அக்கதைக்கு முதன் முதல் உழவுத் தொழில் தென்னாட்டிலிருந்து பின்னர் வடநாட்டுக்கு இராவணரது காலத்தில் அனுப்பப்பட்டதென்பது பொருளோ? ஆகவே இவ்விதத் தப் பொருளைபு மொதுக்கி விடுவோம்.

மூன்றாவதாக, சிந்து நதியாயும் இந்துஸ்தானத்திலிருந்த ஆரியர்களில் க்ஷத்திரிய வகுப்பில் இரகு வமசத்தில் தசரதச் சக்ரவர்த்திக்கு தோன்றிய இராமச் சக்ரவர்த்தி யென்பவர், தென்னாடாகியதமிழ்நாட்டில் முடிமன்னனாய்க் கோலோச்சி வந்த இராவணேஸ்வரன் மீது படையெடுத்துவந்து வெற்றி கொண்டாரென்று சரித்திரக்காரர்கள இராமாயணத்திற்குப்பொருள் கூறுவார்கள். அதாவது இராமாயணம் ஆரியர் தமிழர்மீது கொண்ட வெற்றியைக் குறிக்குங் கதை என்றே அதற்கு பொருள்படும்.

இப்பொருளை நாம ஆய்ந்து கொள்ளக் கூடிய உண்மைப்பொருளாகும். இது பற்றியே இராமாயணம எழுதப்பட்டது என்பதும் நம கருத்தாகும். அப்படியல்லவென்றால கன்னங்கரிய மையை எடுத்து மயிர் செறிந்த ஒரு கோலினால் தீட்டுவதுபோல இராவணரை இவ்வளவு கருப்பாய்த் தீட்டியிருக்க வேண்டிய நியாயமென்ன? அவ்வளவும் சரித்திரத்திற்கும் உண்மைகளாகுமா? சமன் செய்து நிற்குந் தராசிலுள்ள இரு தட்டுகளில் ஒன்றைவிட ஒன்றைப்பளுவாகவிருப்பதாக காட்ட வேண்டுமானால் ஒன்றில் பளுவுள்ள பொருளை வைத்துவிட்டு மற்றொன்றில் இலேசான பொருளை வைத்துத்தானே காட்டவேண்டும்? அதேபோல் இராவணன் வெற்றிகொண்ட வீரத்து புகழை எடுத்துக்காட்டவேண்டுமானால் இராவணனை எவ்வளவுக்கெவ்வளவு கருப்பாகத் தீட்டிக் காட்டுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு இராமரது புகழ் உயருமென்பது உண்மையாதலால் அவ்வாறு கருப்பாகத்தீட்டுதல் தானே ய கவேண்டும்? அவ்வாறே தான் இராமாயணத்திலும தீட்டப்பட்டிருக்கிறது. இல்லையென்று இராவணரையும் உண்மை

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க).

## காந்தியும் மதமும்.

நமது நாட்டு மக்களுக்கு அதாவது பௌத்தரும் கிருஸ்தவரும் மகம்மதியர்களும் அல்லாத மக்களாகிய இந்துக்களென்று சொல்லப்படும் சுமார் 20 கோடி மக்களுக்கு இப்போது அன்பையும் சுயமரியாதையையும் விடுதலையையும் அடிப்படையாகக்கொண்டதான ஒரு மதமே அவசரமாய் வேண்டியிருக்கின்றது என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் ஏதாயினும் சில மக்கள் கூடி வாழவேண்டுமானால் அவர்களுக்கு ஏதாவது ஒரு கொள்கையும் அவர்களை ஒன்று சேர்க்க வல்ல உணர்ச்சியும் ஏற்படவேண்டும். இம்முறையில் இந்துக்கள் என்று சொல்லப்படும் 20 கோடி மக்களுக்கு பொதுவானதாகவும் ஒற்றுமை உணர்ச்சியளிக்கத்தக்கதாகவும் என்ன கொள்கைகள் இருக்கின்றது என்று யோசிப்போமானால் ஒன்றும் மனதுக்கு எட்டாததோடு எந்தக்காலத்திலும் ஒரு குறிப்பிட்ட கொள்கையை அனுஷ்டித்து ஒற்றுமைபடைய முடியாததாகவும், எந்தக்காலத்திலும் விடுதலையும் சுயமரியாதையும் அடைவதற்கு மார்க்கமில்லாததுமான கொள்கைகளில் கட்டுண்டு மூழ்கிக்கிடக்கின்றோம்.

இந்தக் காரணத்தினாலேயேதான் இந்தியாவில் அடிக்கடி பல வேறு மதங்கள் ஏற்படுவதும், அவைகளுக்கெல்லாம் இந்துக்கள் என்போர்களிருந்தே மக்களைக் கொள்வதுமான காரியங்கள் செல்வாக்குப் பெற்று, அதுவே பலருக்கு நித்திய வாழ்க்கையாக நடந்தும் வருகின்றது. அல்லாமலும் அன்னிய மதக்காரர்கள் நம்மை மதக்கொள்கையில்லாதவர்கள் (காபர்) என்றும், ஞானமில்லாதவர் (அஞ்ஞானி) என்றும் காட்டுமிராண்டிகளென்றும் (அந்தன்) குருட்டுத்தனமுள்ளவர்கள் என்றும், அழைக்கின்றார்கள் அன்றியும் அரசாங்கத்தார் கூட நம்மை மகம்மதியரல்லாதார்கள் என்றுதான் அழைக்கின்றார்கள். இவைகளை ஆட்சேபிக்க நமக்கு எவ்விதத்திலும் சக்தியில்லாமல் இருந்து வருவதோடு ஏற்றும் வருகின்றோம்.

திரு காந்தியவர்களும் தன் இஷ்டப்படியெல்லாம் ஏதேதோ வியாக்கியானங்களைச் சொல்லிக்கொண்டு, தன்னை சனாதன இந்துவென்றும், இந்து மதத்தின் உருவம் என்றும் சொல்லிக்கொண்டு வந்தாலும், இந்துமதம் என்பதாக ஒரு மதம் நமது நாட்டில் இருக்கிறதா என்பதும், அதன் கொள்கை என்ன, அதை ஏற்படுத்தியவர் யார், அதற்கு பொது ஆதாரம் என்ன, என்கிற கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் மழுப்பப் பார்ப்பதுடன், இந்துமதம் என்கின்ற பெயருக்கு நாட்டில் இருக்கும் செல்வாக்கின் மறைவிலேயே வாழ்ந்து வருகின்றார். தவிரவும் தான் சொல்லுவதுதான இந்துமதத் தத்துவமென்கிறார். யாராவது இவர் சொல்லும் தத்துவத்தை இவருடைய ஆதாரத்தைக்கொண்டே ஆட்சேபித்தால அறிவையும் இயற்கையையும் சொல்லி தப்பித்துக்கொள்ளுகின்றார். இம்மாதிரி ஸ்ரீமான் காந்தி மாத்திரமல்லாமல் வேறு அனேக பெரியோர்கள் என்றவர்களும் இதைப் பற்றி யோசித்து யோசித்துப் பார்த்து இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லையென்றே முடிவு கட்டிவிட்டு தனித்தனியாக அவரவர்களுக்கு இஷ்டமான கொள்கைகளுடன் இருந்து வருகின்றார்கள். இதனால் மக்கள் ஒன்றுசேர்ந்து ஒரு முயற்சி செய்ய முடியாதபடி சிதைந்து கிடக்க நேரிடுகின்றது. அந்நிய நாட்டார்களும் அன்னிய மதக்காரர்களும் இந்துக்கள் என்கிறவர்களின் பழக்க வழக்கங்களையும் மதக்கொள்கைகளையும் பரீட்சிப்பதுடன் காட்டுமிராண்டிகளெனவே நினைக்கின்றார்கள். காட்டுமிராண்டிகளுக்குள்ள குணம் என்னென்னவோ அவ்வளவும் நமது மத ஆதாரமென்பவைகளிலும் மதக்கொள்கைகள் என்பவைகளிலும் நிரப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விஷயங்கள் விவகாரங்களுக்கு வரும்போது அவைகள் மதக்கொள்கைகள் அல்லவென்றும், அவைகள் ஆதாரங்கள் அல்லவென்றும் சொல்லுவதுடன், அவைகளுக்குத் தத்துவார்த்தங்கள் வேறு என்றும் சொல்லி பல வியாக்யானங்கள் செய்து மக்களை ஏமாற்றி விடுகின்றார்கள். இம்மாதிரி காரியங்களால் நமது மக்கள் மாத்திரம் தான் ஏமாறலாமேழிய இதனால் உண்டாகும் கெட்ட பலனை நாடும் சமூகமும் அடையாமல் இருக்கும்படி ஏமாற்ற முடியவே முடியாது. உதாரணமாக வருணாசிரம தர்மம் என்பதற்கு ஸ்ரீ காந்தி இதுவரை என்னென்னமோ வியாக்கியானம் செய்துகொண்டு வந்தும், கடைசியாக திருப்பூர்காரர்கள் அவரிடம் உள்ள துருப்புச் சீட்டை தட்டி வாங்கி விட்டார்கள். ஸ்ரீ. காந்தியவர்கள் வருணாசிரமத்தின் சுயரூபத்தோடு விளங்கிவிட்டார். என்னவெனில் பிராமணனாய்ப் பிறந்தால்தான் ஒருவனை பிராமணன் என்று சொல்லலாம் என்றும், அதுவும் இந்தஜன்மத்தில் பிராமணனல்லாத ஒருவன் பிராமண தர்மத்தை அனுஷ்டித்து வந்தால் அடுத்த ஜன்மத்தில் பிராமணனாய்ப் பிறக்கலாம் என்றும் சொல்லி இருக்கின்றார். (சு. மித்திரன் 25—10—27) இதற்குமேல் இனி ஸ்ரீ காந்தியின் வருணாசிரம தர்மத்திற்கு வேறு வியாக்கியானமே தேவை இல்லை. ஏனெனில் ஸ்ரீ காந்தி பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று சொல்வதானாலும், அவரால், பிராமணனாய் பிறந்தவனுக்கு ஏற்படுத்தியிருக்கும் யோக்கியதையின்படியும் பிராமணனாய்ப் பிறக்காதவனுக்கு ஏற்படுத்தி இருக்கும் யோக்கியதையின்படியும் உயர்வு தாழ்வு இல்லை என்று சொல்வது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பதாகும். எனவே நமது மக்களை இனியும் இம்மாதிரி இந்து மதம் என்னும் காட்டுமிராண்டிக் கொள்கையில் வதியச் செய்வது பெரிய அதர்மமேயாகும். இதை நாம் சொல்லும்போது மக்களுக்கு ஆத்மார்த்த சம்மந்தமானதென்று சொல்லப்படும் மோக்ஷசாம்பிரதாயத்தையே பிரதானமாகக் கருதி சொல்லவாவில்லை. மக்களின் பிறப்புரிமையாகிய சுயமரியாதையையும் ண

(இதன் தொடர்ச்சி 14—ம் பக்கம் பார்க்க

## மலேயா நாட்டுச் சுற்றுப்பிரயாணம்

“குடி அரசு” பத்திராதிபரின் தமயனார் ஸ்ரீமான் ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்கள் மலேயா நாட்டு நண்பர் பலரின் வேண்டுகோளின்படி இம்மாதம் 11 உடெயிரியா கப்பலில் பிரயாணம் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். ஆதலால் அந்தப்படி வரும் ஸ்ரீமான் நாயக்கர் அவர்களுக்கு மலேயா நாட்டு தமிழ் மக்கள் தக்க அன்புகாட்டி அவர்களது எண்ணத்தை நிறைவேற்றுவார்களென்று நம்புகிறோம்.

# தாசிகளும் சத்தியமூர்த்திகளும்.

என்ற தலைப்பில் திராவிடன் எழுதுவதாவது

..................................................

மடங்களைச் சீர்திருத்தவேண்டுமென்றால் அது கூடாது, விபசாரத்தை ஒழித்து நாட்டை மேம்பாடுறச் செய்யவேண்டுமென்றால் அதுவும் கூடாது, எல்லாம் மதசம்பந்தமுடையன, என்று ஆபாசங்களின் பேரால் வயிறு வளர்த்துவரும் சத்தியமூர்த்தி கூட்டத்தார் கூறுவார்களாயின், நாம் இப்பார்ப்பன மதத்தை அடியோடு கொன்று, நம் நாட்டைச் சீர்படுத்தவேண்டியது மிக அவசியமாகும். விபசாரம் மதசம்பந்தமுடையதென்றால், குடிப்பது, திருடுவது, கொலை செய்வதுகூட மதசம்பந்த முடையதென்று தான் நம் நாட்டுப் புராணங்களும் வேதங்களும் கூறுகின்றன. நம் நாட்டில் மதசம்பந்தமில்லாதது என்ன இருக்கின்றது? ஒரு பார்ப்பன விதவையோடு வேத மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு எல்லோருமறியப் புணர்வது, ஒருவன் மனைவியை அபகரித்துக்கொள்வது, ஒருவன்மனைவியைப் பிறருக்குக்கொடுப்பது, ஒரு குருவுக்கு அவன் சிஷ்யன் தன் மனைவியைக் கொடுப்பது, ஒரு முனிவருக்குக் காம இச்சை யொழிப்பதற்கு ஒருவன் தன் மனைவியைக் கொடுப்பது, பிள்ளை பெறுவதற்காகக் குருவினிடத்து ஒரு பெண் செல்வது, ஆண்களும் பெண்களும் குருவின்முன் நிர்வாணமாய்க் கூத்தாடி முறைதவறிப் புணர்ந்து வணக்கம் செய்வது, ஆடுகளைக் கொல்வது, பசுக்களைக் கொல்வது, மனிதர்களைக் கொல்வது, மற்றும் உலகத்தில் உள்ள எல்லா அக்கிரமங்களையும் செய்வதுகூட மதசம்பந்த முடையன; மோட்சத்திற்காகச் செய்யப்படுவன என்று இந்துமத நூல்கள் சொல்கின்றன. இந்த அபாசங்களெல்லாம் மதத்தின்பெயரால் நம் நாட்டில் நடைபெற நாம் இடங்கொடுக்க முடியுமோ? மற்றும் திரு. சத்தியமூர்த்தி என்ன அக்கிரமம் வேண்டுமென்றாலும் செய்யலாம். செய்துவிட்டு மதசம்பந்த முடையதென்று சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம். ஏனெனில் பிராமணன் ஆபத்து தருமமாக எதையும் செய்யலாமென்று மனுதரும நூல் கூறுகின்றது. மனுதரும நூல் அவ்வாறு கூறுகின்றதென்று திரு. சத்தியமூர்த்தி செய்யும் அயோக்கியத் தனங்களையும் அக்கிரமங்களையும் நாம கண்டித்து எழுதாமல் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம். பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்பில் மண்போடும் எந்த விதமான சீர்திருத்தம நாம செய்யப்புகினும் சத்தியமூர்த்தி கூட்டத்தார் மதத்துக்குஆபத்து! மதத்துக்குஆபத்து!! என்ற கூக்குரல் இடப்போவதுறுதி. "கோயிலில் பொட்டுக்கட்டி விபசாரத் தொழில் செய்வது மத சம்பந்தமுடையது, அது புண்ணியம், ஆகையால் அத்தொழில் நீக்க வேண்டும்" என்று சொல்லும் திரு. சத்தியமூர்த்தி பொட்டுக்கட்டும் தொழிலால் வரும் புண்ணியத்தைத் தேவதாசிகளுக்கு மட்டும்தானு தேடிக் கொடுக்கவேண்டும்? பார்ப்பனர்களின் ......தத்திற்காகவும் அவர்களின் வயிற்றுப் பிழைப்புக்காகவும் எல்லா இழிதொழிலையும் மதத்தின் பெயரால் ஒரு வகுப்பார் செய்யவேண்டுமபோலும் என்னே! திரு சத்தியமூர்த்தி கூட்டத்தாரின் கொடுமை! கொடுமை!! இந்து மதமும், இம்மதத்தின் பெயரைச்சொல்லிக்கொண்டு சத்தியமூர்த்தி கூட்டத்தார் செய்யும் அக்கிரமங்களும் ஒழியவேண்டும். அப்பொழுதுதான நம நாடும நம் வகுப்பும விடுதலை அடையும.

'திராவிடன்'

# ஊர்வம்பு.

திரிச்சிராப்பள்ளியில் இந்திய சங்கீத கிளப் ஒன்றிருப்பதாக வெளியாகி இருக்கிறது. இந்தக் கிளப்பின் அங்கத்தினர்கள் ஸ்ரீ பி. ஜி. சுந்தரேச சாஸ்திரியின் தலைமையில் கூடி ஓர் அழகிய தீர்மானம் செய்து பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

1. நடன மாதர் நடனம் செய்தல் அசுவமேதயாகத்தில் ஓர் பகுதி, 2. ஹிந்து சங்கீதம், பாவம், ராகம், தாளம் மூன்றும் சேர்ந்தது, 3. ஆகமங்களில் 16 உபசாரங்களில் ஒன்றாக நாட்டியம் சொல்லப்பட்டிருக்கிறது, 4. குறவஞ்சிக் கூத்து சரித்திர பூர்வமானது.

ஃ ஃ ஃ

இந்த நாலு காரணங்களாலும் நாட்டியம் ஹிந்து மதத்தின் ஒரு முக்கியமான அம்சமானபடியால், அறியாதவர்களின் கூக்குரலைக் கேட்டுக்கொண்டு, கோயில்களின் ஆராதனை முறையில் நாட்டியத்தை எடுத்துவிடக்கூடாது என்று மேற்படி சங்கீத, மதாபிமானிகள் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

நல்லது, காரணங்களுடன் நாம் சண்டை போட இப்போது தயாராயில்லை. ஒன்று மட்டுமே கூறுகிறோம். சங்கீதத்திலும், மதத்திலும் அவ்வளவு தீவிர அபிமானமுள்ளவர்கள் பிறரைவிட்டு ஆழம் பார்க்க வேண்டுவதில்லை. தங்கள் தங்கள் மனைவி மார்களுக்கு ராக தாளங்களுடன் நாட்டியம் பயில்வித்துக் கோயில்களில் பக்தி பரவசத்துடன் நடனமாடச் செய்து ஆனந்திக்கலாம்.

ஃ ஃ ஃ

இதற்குச் சம்மதியாதவர்கள் கோயில்களில் நாட்டியம் நடக்கவேண்டுமென்று சொன்னால் அவர்களுடைய பக்தியிலும், "சங்கீதாபிமானத்திலும் நமக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை.

ஃ ஃ ஃ

மேற்படி கூட்டத்தில் மற்றொரு சகோதரி 'நாங்கள் விபசாரிகள் அல்லோம். நாங்கள் தேவரடியார்கள். ஆண்டவனுக்குத் தொண்டு செய்து காலங்கழிக்கிறோம்' என்றாராம்.

ஃ ஃ ஃ

இத்தகைய தேவதாசிகள் இல்லவே இல்லையென்று நாம் சொல்லவில்லை. ஆனால் மேற்படி கூட்டத்திற்கு வந்திருந்த எல்லாரும் அத்தகையவர்கள் அல்லவென்று தோன்றுகிறது. ஏனெனில பலர் 'எங்கள் பெண்களுக்குப் பொட்டுக்கட்டியே தீரவேண்டும்' என்று வாதிட்டிருக்கின்றனர்

ஃ ஃ ஃ

ஆண்டவனுக்கு அடிமை பூண்டு தொண்டில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பெண்கள் எப்படிப் பிறந்தன? ஆண்டவன் மீது எவ்வளவோ பழிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தப் பெரும் பழியை அவர் தலையில் போட எவரும் துணியாரென்று நம்புகிறோம்!

ஃ ஃ ஃ

பொட்டுக் கட்டுதல் மத சம்பந்தமான விஷயம் என்று மேற்படி கூட்டத்தில் சொல்லப்பட்டதாம். 'இன்றைய தினம் பொட்டுக்கட்டுதல் கூடாதென்கிறார்கள். நாளைக்குக் குருக்கள் மாரை நீக்கிவிடவேண்டு மென்று சொல்லலாம்' என்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பரிந்து பேசினாராம்.

ஃ ஃ ஃ

தீண்டாமையும், பாலிய வைதவ்யமுமே ஹிந்து மதம் என்று கும்பகோணம் வைதீகர்கள் சொன்னார்கள். இப்போது பொட்டுக் கட்டுதல் தான் ஹிந்து மதம் என்று சென்னையில் சிலர் சொல்கிறார்கள்.

ஃ ஃ ஃ

மதுபானம் மத சம்பந்தமானதென்றும், அதில் யாரும் தலையிடக்கூடாதென்றும் குடிகாரர்கள் கிளர்ச்சி செய்யக் காலம் வந்துவிட்டதென்று கருதுகிறோம். சென்னையிலுள்ள ஐரோப்பிய மது வியாபாரிகள் கூடிய விரைவில் குடிகாரர்கள் கூட்டமொன்றைக் கூட்டுவிப்பார்களென்று நம்புகிறோம்.

ஃ ஃ ஃ

அவர்களுக்கும் போதிய காரணங்கள் இருக்கின்றன வேதங்களில் சொல்லப்படும் சோமபானத்தை அவர்கள் எடுத்துக்காட்டலாம். அத்துடன் தற்காலத்தில் காளியம்மன், காட்டேரி தெய்வங்களுக்குக் கள் நைவேதனம் செய்யப்படுவதால், மதுவிலக்குச் செய்தல் மதத்தில் தலையிடுவதாகும் என்று வற்புறுத்திச் சொல்லலாம்.

ஃ ஃ ஃ

அந்தோ! மதமே! உன் பெயரால் எத்தனை எத்தனை பாதகங்கள் செய்யப்படுகின்றன?

'நவசக்தி'

# ஒரு விண்ணப்பம்.

திருவண்ணாமலை கோவில் பிரவேச தடுப்பு வழக்கு அநேக வாய்தாக்கள் ஏற்பட்டு இதுவரை 500 ரூபாயுக்கு மேலாகவே சிலவாகி இருக்கின்றது ஆனால் வாதி தரப்பு மாத்திரம் தான் முடிவாயிருக்கிறது. இனி எதிரி தரப்பில் சுமார் 2, 3 சாக்ஷிகள் போடப்பட்டிருக்கின்றது. தினம் ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு சாக்ஷிக்கு மேல் விசாரணை ஆவதற்கில்லாமல் வளருகின்றது. ஆகலால் இனியும் குறைந்தது 10 வாய்தாக்களாவது ஏற்படலாம். வக்கீல்கள் பீஸ் இல்லாமல் நமக்காகப் பேசியும் அவர்களுக்கு வழிச்சிலவும் சாக்ஷிகளுக்கு வழிச்சிலவுமாகவே மேல்கண்ட ரூபாய்கள் சிலவாகி இருக்கும் போது பாக்கி விசாரணைக்கு 500 ரூபாயாவது பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் நண்பர்கள் தங்களால் கூடியதை சேர்த்து சீக்கிரம் அனுப்பவேண்டுமாய் சிபார்சு செய்கின்றோம். ஏனெனில் இப்பேர்பட்ட உண்மைச்சுயமரியாதைக்காக தொடரப்பட்டிருக்கும் வழக்கு நாட்டில் மக்கள் ஆதரவில்லையானால் மறுபடி பின்னால் நடக்கவேண்டிய காரியங்களுக்கு எப்படி பொது மக்களை நம்ப இடமுண்டாகும். ஆதலால் வெளிநாட்டு நண்பர்களும் உள்நாட்டு நண்பர்களும் கூடிய சீக்கிரம இந்த தேவையை பூர்த்தி செய்து தைரியமும ஊக்கமும் அளிப்பார்களாக

## எங்கும் சுயமரியாதை சத்தியாக்கிரகம்.

தென்னாட்டில் மாத்திரமல்லாமல் இந்திய நாடு முழுவதிலுமே இதுசமயம் சுயமரியாதை உணர்ச்சி பெருகி வருகின்றதை பார்க்க ஒரு சிறு கூட்டத்தாரான பார்ப்பனர்களைத் தவிர மற்ற எல்லோருக்கும் ஆனந்தத்தை விளைவிக்கும் என்றே எண்ணுகிறோம். கொஞ்ச காலைக்கு முன்பு வட தேசத்தில் உள்ள படகு ஓட்டும் கூட்டத்தாரான செம்படவர்கள் ஒன்று சேர்ந்து, தங்களை தீண்டுவதில்லை என்கின்ற வகுப்பாருக்கு படகு ஓட்டுவதில்லை என்று கட்டுப்பாடு செய்து கொண்டது யாவருக்கும் ஞாபகமிருக்கலாம். மறுபடியும் திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் சத்தியாக்கிரஹம் ஆரம்பித்ததும, அதற்கு ஸ்ரீமான் காந்தி மகதியஸ்தராயிருந்து அரசாங்கத்தார் சீக்கிரம் அனுகூலம் செய்வார்கள் என்று ஒப்புக்கொண்டு இருப்பதும், புராணம் சாஸ்திரம் முதலிய குப்பைகளை எறிப்பதுடன் மதாசாரியார்கள் என்பவர்களையும் பஹிஷ்கரிக்க வேண்டுமென்று பமபாய் மாணவர்கள் ஒன்று கூடி தீர்மானித்ததும், சென்னையிலும் அதுபோலவே பார்ப்பனரல்லாத வாலிப மகாநாட்டில், மனிதனின் சுயமரியாதைக்கு விரோதமான மனுதர்ம சாஸ்திரம் புராணம் இவைகளை சர்க்காரார் பறிமுதல் செய்யவேண்டுமென்று தீர்மானம் செய்ததும், தாழ்ந்த ஜாதி தீண்டாத ஜாதி சூத்திரன் ஆகிய வார்த்தைகளை உபயோகித்தால் அவர்களை கிரிமினல் சட்டப்படி தண்டிக்க சட்டமேற்படுத்த வேண்டும் என்று சொன்னதும், ஆதி திராவிடர்கள் என்கிற கூட்டத்தார் மகாநாட்டிலும் வருணாசிரம தர்மத்தை போதிக்கும் ஆதாரங்களையெல்லாம் பறிமுதல் செய்யவேண்டுமென்று பேசியதும், தீர்மானித்ததும், மற்றும பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாட்டிலும கும்பகோணம் நாடார் சமூக மகாநாட்டிலும சுயமரியாதை சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவளித்ததும், பம்பாயிலுள்ள பல மக்களும் கோவிலுக்குள் போக சத்தியாக்கிரகம ஆரம்பித்திருப்பதும், மற்றும் அங்குள்ள தமிழ் மக்கள் பம்பாயிலுள்ள சென்னைப் பார்ப்பனர்கள் ஓட்டல்களில் உள்ள வித்தியாசத்தை ஒழிக்க ஜாதிசம்ஹார சக்கிர சங்கத்தார் சத்தியாக்கிரகம் செய்ய முன் வந்திருப்பதும, மற்றும பம்பாயில் உள்ள பனஸ்வதி என்கின்ற ஆலயத்தில் தரிசனம செய்ய ஆவலுள்ள யாரையும உள்ளே விடாததற்காக அக்கோவிலையே பஹிஷ்கரிக்க வேண்டுமென்று, முடிவு செய்ததும், மகத் என்கின்ற இடத்தில் உள்ள பொதுக்குளத்தில் ஒரு கூட்டத்தாரை ஸ்னானம் செய்யவொட்டாமல் தடுப்பதை ஒழிக்க டிசம்பர் மாதம் 25 உ முதல் சத்தியாக்கிரகம செய்யப் போவதாய் ஏற்பாடு செய்து 500 ரூ. வசூலாயிருப்பதாயும் பல தொண்டர்களும் சேர்ந்திருப்பதாகவும் தினப்படி பத்திரிக்கைகளில் காணப்படுகின்றன. இது மாத்திரமல்லாமல் சமூகங்களில் உள்ள சில கொடுமைகளையும் விலக்குவதற்காக பெண்களைத் தயாரிப்பதான பொட்டுக் கட்டும் வழக்கத்தை ஒழிக்க செங்குந்த சங்கங்களும் சட்ட சபை மசோதாக்களும் பறந்து கொண்டிருக்கின்றன மது விலக்குக்கும் எங்கும் முயற்சிகளும் நடந்து வருகின்றன. ஆகவே நாட்டின் சுயமரியாதைக்கும் ஒழுக்கத்திற்கும் ஆன வேலைகள் தீவிரமாய் நடைபெறுவதுடன் இன்னமும ஒவ்வொருவருடைய கவனமும உணர்ச்சியும் இதிலேயே செல்லும் குறிகளும் காணப்படுகின்றன.

இப்படி உலகம் முன்னேறிக்கொண்டிருக்கும் சமயத்தில் நம் நாட்டுப் பார்ப்பனர்களின் போக்கியதை எப்படி இருக்கின்றது என்று பார்ப்போமானால், இவைகள் ஒவ்வொன்றுக்கும் முட்டுக்கட்டையாய் இருந்து கொண்டு மதம் போச்சு, கடவுள் போச்சு, கோவில் போச்சு, குளம் போச்சு, சாஸ்திரம் போச்சுது என்பதாக ஓலமிட்டுக் கொண்டு மக்களை ஏமாற்றிப் பிழைக்கப்பார்க்கின்றார்கள். மக்களின் சுயமரியாதைக்கும் ஒழுக்கத்திற்கும ஏற்படுத்துகிற இயக்கங்களை வைது கொண்டு, அதை அழிப்பதற்கும் முயற்சி செய்து கொண்டு, முட்டாள்களையும, அயோக்கியர்களையும, வயிற்றுச்சோற்றுக் கூலிகளையும் பொறுக்கி எடுத்துத் தங்களுடன் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குக் காசு, பணம், பட்டம, பதவி மற்றும் என்னென்னவோ முதலியவைகளை உதவி, இவற்றின் மீது ஏவிவிட்டு நாட்டில் கலகம விளைவிப்பதும், மக்களுடைய கவனத்தை தப்பு வழியில் இழுத்து விடுவதுமான கொடுமைகள் ஒருபக்கம் செய்து கொண்டு, மற்றொரு பக்கம் காங்கிரசு என்றும், சுயராஜ்பம் என்றும் பித்தலாட்டப் பெயர்களைவைத்துக்கொண்டு, திருட்டுத்தனமாய் சர்க்காருக்கு உள் ஆளாய் இருந்து உத்தியோகங்கள் பெற்று, மாதம் 1000, 2000, 5000 சம்பளம் பெறுவதில் கவனம் செலுத்திக்கொண்டு ஈனவாழ்வு வாழ்வதையே பொதுநல சேவையாய் கட்டிக்கொண்டுமிருக்கிறார்கள் அத்தோடு அவர்கள் இழிதொழில் நிற்கின்றதா என்று பார்த்தால் இல்லவே இல்லை.

இவ்வளவு அக்கிரமங்களையும செய்து கொண்டு இருப்பதல்லாமல் இதை யாராவது வெளியில் எடுத்துச்சொன்னால், அவர்களை வகுப்புத்துவேஷக்காரர்கள் என்றும், அசுரனென்றும், ராக்கதனென்றும் சொல்லி விஷமப்பிரசாரம் செய்வதுமாயிருக்கின்றார்கள். இந்த விஷயங்களை உணருவதற்கு நமது நாட்டு மக்களுக்கு புத்தி இல்லாமல் இனியும் அப்பார்ப்பனர்களை நத்திக் கொண்டு பிழைக்கவே ஆசைப்படுகின்றார்கள். இந்த மக்களைப் பார்க்கும்போது, ஒரு வேசி வீட்டில் உள்ள வாலிபன் ஒருவன் வேசியான தன் தாயாருக்கோ தமக்கைக்கோ ஆட்களைக் கூட்டிக்கொண்டுபோவதையும், அநுக்கடிதங்கள் கொண்டு போய்க் கொடுத்துப் பதில்வாங்கிவருவதையும் பார்ப்பது நமக்கு ஆச்சரியமாய்த் தோன்றவில்லை.


ஏ[illegible] ஒரு பெரும் சமுகத்திற்கே இவ்[illegible]ரிய இழிவுசெய்து கொண்டிருக்கு[illegible]ர்ப்பனனிடம், கூடிக்கொண்டு அவ்விழிவுகள் தொலைய ஏற்படுத்தப்படும் இயக்கங்களுக்கு விரோதமாய் இருக்க மனம்சம்மதித்த ஒருவனுக்கு மேற்சொன்ன அநுக்கடிதம் பெற்றுபோய்வருவது கஷ்டமான காரியமாயிருக்குமென்று நமக்குத் தோன்றவில்லை.

நிற்க, நமது ஒழுக்க முன்னேற்றத்திற்கு பார்ப்பன முட்டுக்கட்டை எவ்வளவு தூரம் துணிவு பெற்று இருக்கின்றது என்பதைக் காட்ட ஒரு சிறு உதாரணத்தைச் சொல்லுகிறோம். அதாவது ஸ்ரீமதி முத்துலக்ஷிமி அம்மாள் விபசாரத்திற்கு பெண்களைவிடும்—கோவில்போரால பொட்டுக் கட்டும்—வழக்கத்தை ஒழிக்கக் கொண்டுவந்த மசோதாவுக்கு எதிர் பிரசாரம செய்யப் புறப்பட்ட சுயராஜ்பக்கட்சியும் அதன்உயிர்நாடியுமான ஸ்ரீமான் சத்திய மூர்த்தி அய்யர் அவர்கள் இதைப்பற்றி பேசும் பாது என்ன சொலலுகிறார் என்றால் "பொட்டுக்கட்டுதல் என்பது மத ஆச்-ாரமும் குல தர்மமுமாயிருக்கின்றது. என்று சொல்லப்படுகிறது கோவிலில் நாட்டியம் முதலிய பணிகள் செய்வதற்கு தேவதாசிகள் ஏற்பட்டிருக்கிறார்கள், எனவே இது மத சம்மந்தமான விஷயமாய் இருக்கின்றது, இம்மாதிரி மத சம்பந்தமான விஷயங்களில் பிரவேசித்து இன்று பொட்டுக்கட்டுவதை ஒழிக்கவேண்டுமென்றுசொல்ல முன் வருவோமானால், மற்றொரு புறம் ஈ. வே. ராமசாமி நாயக்கரும் வரதராஜுலு நாயுடுவும் கோவிலுக்குள் குருக்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகின்றார்கள் ஆதலால் இம்மாதிரி விஷயங்களில் நாம் தலையிட்டுக்கொள்ளக கூடாது" என்று பேசினாராம். இதிலிருந்து பார்ப்பனர்கள் நமது நாட்டு ஒழுக்கத்திற்கும் சுயமரியாதைக்கும் எவ்வளவு தூரம் எதிரிகளாயிருக்கின்றார்கள் என்பது விளங்காமல்போகாது. விபசாரம் கூடாது என்றால், அதை ஒழிப்பது மதத்துக்கு விரோதம் என்று சொல்லுவார்களானால், அம்மாதிரி மதத்திற்கு நமது நாட்டில் என்ன வேலை என்று கேட்கின்றோம். அவ்விபசார ஸ்திரீகளை வேண்டி இருக்கின்ற கோவிலும் சாமிகளும் நமது நாட்டில் எப்படி வைத்துக்கொண்டிருக்கத் தக்கனவாகும்?

பார்ப்பனப் புரட்டுப்படி நமது மதத்திற்கும் சாமிகளுக்கும் வேண்டாத இழிவான காரியங்கள் எது நமது நாட்டில் இருக்கின்றது? தினம் ஆயிரக்கணக்கான ஆடுகளும் மாடுகளும் எருமைக் கிடாக்களும கோழிகளும் பன்றிகளும் வெட்டுப்படுவது இந்து மதக கடவுள்களின் பேரினாலல்லவா என்று கேட்கின்றோம். தினம் ஆயிரக்கணக்கான கள்ளுகுடங்களும் சாராயப் புட்டிகளும் கஞ்சா அபின் உருண்டைகளும் படைப்பது இந்துமதக் கடவுள்கள் பேரால் அல்லவா என்று கேட்கின்றோம்.

சிவநேசச் செல்வர்கள ஒருபுறம் ஜீவகாருண்ணியப் பிரசாரம் செய்து வருவதும் சக்தி (காளி) நேசச் செல்வர்கள் ஒருபுறம் கள்ளும் மாமசமும் வைத்துப் படைப்பதும் இந்துமதக்கடவுள்கள் பேரால்லவா என்று கேட்கின்றோம்.

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க).



குடி அரசு.

ஈரோடு, பிரபவ ௵ ஐப்பசி ௴ 14௳

## ராயல் கமீஷன்.

### ஒரு கூட்டுக் கொள்ளை.

I

இந்தியாவுக்கு இன்னமும் ஒரு முறை சீர்திருத்தமளிப்பதற்காக, நாட்டின் நிலையை விசாரிக்க என்பதாக, ஒரு கமீஷனை சர்க்காரார் நியமிக்கப் போகிறார்களாம். இந்தக் கமீஷனில் பலர், தாங்கள் தாங்கள் அங்கத்தினர்களாக வேண்டும் என்கின்ற ஆசையின் பேரில் அரண்மனை நெல்லுக்கு பெருச்சாளிகள் சண்டை போட்டுக்கொள்வதுபோல் தலைவர்கள் ஆளுக்காள் முந்துகின்றார்கள். சர்க்காரும் யாரை நியமிப்பது யாரை விட்டுவிடுவது என்கிற கவலையில் மிகுதியும் ஆழ்ந்திருக்கின்றார்கள். ஏனெனில் யாராவது செல்வாக்குள்ள மனிதர் பெயர் அதில் விடுபடுமானால் அவர் மற்றவர்களை சேர்த்துக்கொண்டு கமீஷனை பஹிஷ்கரிப்பதாகவோ சீர்திருத்தத்தை பஹிஷ்கரிப்பதாகவோ கலகம் செய்தால் என்ன செய்வது என்கின்ற பயம் ஒருபுறமும், ஜனங்களிடம் செல்வாக்கில்லாதவரை நியமிக்க நேரிட்டுவிட்டால் கமிட்டிக்கு மரியாதை இல்லாமல்போகுமே என்கின்ற பயம் மற்றொரு பக்கமாகவும் இருந்துகொண்டு ஊஞ்சலாடுகிறார்கள். இந்த நிலையில் தலைவர்களும் தேசியச் சங்கங்கள் என்கின்றவர்களும் கமீஷனைப்பற்றி முடிவாக யாதொரு அபிப்பிராயமும் சொல்வதற்கில்லாமல் சுவற்றுமேல் பூனைபோலிருக்கிறார்கள்.

ஆகவே இந்தக் கமீஷன் என்பது தலைவர்கள என்போர்களுக்கும் சர்க்காருக்கும் ஒரு சூதாட்டம்போல் நடைபெறுவதாயிருக்கின்றதே தவிர மற்றபடி நாட்டிற்கோ மக்களுக்கோ எவ்வித நன்மையான பலனும் அளிக்கப்போவதில்லை என்பதோடு அநேக கெடுதிகளையும் உண்டாக்கப் போகின்றது என்பது மாத்திரம் உறுதி.

என்னவென்றால் டிஷ கமீஷன்படி மற்றொரு புதிய சீர்திருத்தம் என்பதாகச் சொல்லிக்கொண்டு நமது அரசாங்க அமைப்பு என்பது சிறிது மாறுதல் அடையக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. அந்த மாறுதல் என்னமாயிருக்கும் என்று யோசிப்போமானால் இன்னம் கொஞ்சம் சட்டசபை அங்கத்தினர்கள் அதிகமாவார்கள். அதாவது நமது மாகாணத்துக்கு இப்போதிருக்கும் 125 சட்டசபை மெம்பர்கள் குறைந்தது 250 மெம்பர்களாகவாவது பெருகுவார்கள். இப்போது இருக்கும் 3 மந்திரிமார்கள் 5, அல்லது 6 மந்திரியாகவாவது பெருகுவார்கள். அல்லது இப்போது ஒரு மாகாணமாயிருக்கும் சென்னையும் அதிலுள்ள ஒரு கவர்னரும் குறைந்தது 2 மாகாணமாகவாகிலும் ஆக்கப்பட்டு இரண்டு கவர்னர்களுக்கு குறையாமல் ஏற்படுவார்கள். மற்ற மாறுதலும் இது போலவே இருக்கும். ஆனால் சம்பளங்கள் மாத்திரம் சுலபத்தில் குறையாது. அல்லாமலும் வெள்ளைக்காரர்கள் அனுபவிக்கும் உத்தியோக எண்ணிக்கையிலும், சம்பள அளவிலும் ஒரு சிறிதும் குறையாது என்பதோடு சீர்திருத்தத்தின் பலனாய் அவர்களுக்கு இன்னமும் பல உத்தியோகங்கள் ஏற்படும். தவிர, ஒன்று இரண்டு பங்காய் பெருகி சட்டசபை மெம்பர்கள் மந்திரிகளை நியமிக்க ஓட்டர்களாயிருப்பதும் அந்த ஓட்டு கொடுத்த பிறகு அதற்கு விலையாக தங்கள் சுயநலம் தேடிக்கொள்வதல்லாமல் வேறு என்ன தேசத்துக்கோ மக்களுக்கோ இவர்களால் செய்யமுடிகின்றது. எனவே இதைத்தான் சீர்திருத்தத்தின் முடிவு என்று இப்போதே ஒருவாறு சொல்லிவிடலாம்.

மற்றபடி நமக்கு இன்னும் சில அதிகாரங்கள் கொடுப்பது என்பது ஒரு முக்கியமாக மக்களுக்குத் தோன்றலாம். நம்முடைய யோக்கியதையை அறிந்த சர்க்கார் நமக்கு எவ்வளவு அதிகாரத்தை வேண்டுமானாலும் நமக்குக் கொடுக்கக்கூடும். அதினால் ஒன்றும் சர்க்காருக்கு கஷ்டம் ஏற்பட்டு விடாது. நமக்கும் அதனால் யாதொரு லாபமும் இருக்கும் என்று ஒப்புக்கொள்ளவும் முடியாது. ஏனெனில் கொடுத்துள்ள அதிகாரத்தைப் பொருத்த வரையில் நமது நிலை என்ன? அது சர்க்காருக்கு என்ன நஷ்டத்தை உண்டாக்கிற்று? நமக்கு எப்படி அது உபயோகப்பட்டிருக்கின்றது? என்று பார்த்தால் இனிவரக்கூடிய அதிகாரத்தின் யோக்கியதை நன்றாய் விளங்கும்.

மந்திரிகளின் அதிகாரங்களை முதலில் எடுத்துக்கொள்வோம். ஸ்தல ஸ்தாபன அதிகாரங்கள் மந்திரிகளுக்கு அதாவது ஜனப்பிரதிநிதிகளுக்கு கொடுத்ததால் ஏற்பட்ட லாபம் என்ன என்று பார்த்தால் மாகாணத்தில் உள்ள முனிசிபாலிட்டிகள், ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டுகள் எல்லாம் அவ்வளவைகளுக்கு வரும், வர முயலும், தலைவர்களை எல்லாம் அயோக்கியர்களாகவும், நாணயக் குறைவுள்ளவர்களாகவும் செய்ததல்லாமல் ஒரு மனிதனையாவது யோக்கியனாய் இருக்கும் படி செய்யமுடிந்ததா என்று கேட்கிறோம். இதை மேல்பார்க்கும் மந்திரிகளின் யோக்கியதை என்ன என்று பார்த்தால், இந்தத்தலைவர்கள் செய்யும் அயோக்கியத்தனத்தையும், நாணயக் குறைவுகளையும் அடக்காவிட்டாலும், அவர்கள் அடிக்கும் கொள்ளைகளில் பங்கு வாங்காமல் இருக்கிறார் என்றாவது ஜனங்கள் சந்தேகப் படுவதற்கில்லாமலிருந்தால் அது போதுமானதுஎன்று நினைக்கும் படியாகத்தான் நடந்து வருகிறது.

நியமன ஊழல்களைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. எந்த [illegible] பார்த்தாலும் அவன் மந்திரிக்கு பணம் கொடுத்து நியமனம் பெற்றான், இவன் மந்திரிக்கு கடன் கொடுத்து நியமனம் பெற்றான், அவன் மந்திரிக்கு வேண்டியவனை இன்னொருவனுக்கு பணம் கொடுத்து நியமனம் பெற்றான், அவன் இன்ன பெண் தயவு பிடித்து நியமனம் சம்பாதித்தான் என்று கடைத்தெருவில் ரொட்டி பிஸ்கோத் விற்பது போல விஷயங்கள் அடிபடுகின்றதே அல்லாமல் கவுரவம் கொடுத்து யாராவது பேசுகின்றார்களா? அல்லது ரகசியமாயாவது பேசுகின்றார்களா? என்றாவது பார்ப்போமானால் இல்லவே இல்லை என்று தான் சொல்லவேண்டும். அன்றியும் இச்சீர் திருத்தத்தின் பலனாய் திருடுகிறவர்களெல்லோரும் அயோக்கியர்களெல்லோரும் ஜனங்களால் மதிக்கப்படுகின்றார்களே யல்லாமல் அவர்களைப் பழிப்பவர்கள் ஒருவர்கூட இல்லை. எங்காவது அத்திபூத்தது போல் அந்த இலாக்காவில் ஒரு யோக்கியர் இருந்து விட்டால் அவர் இந்த சர்க்காராலும், மந்திரியாலும் மிகுதியும் அவமானப் படுத்தப்படுகின்றாரே யல்லாமல் அவரை மதிப்பவர்களே இல்லை; இனியும் இதைப்பற்றி பொது ஜனங்களால் சொல்லிக்கொள்ளப்படும் அசிங்கியங்களை பாக்கி வைத்துக்கொண்டு மற்றதை கவனிப்போம்.

அடுத்தபடியாக நமக்கு கல்வி சம்பந்தமாக கொடுத்திருக்கும் அதிகாரங்களிலும் யாதொரு பிரயோஜனமில்லை.

உதாரணமாக எந்தக் கல்வி படித்தாலும் படித்து விட்டு எவன் காலையாவது கட்டி மானம், மனச்சாட்சி, சத்தியம், தேசம் அவ்வனது பெண்டு பிள்ளை, கற்பு ஆகிய எதையும் விற்கத்தயாராய் இருந்தாவது வயிறு வளர்க்கவேண்டுமே, உத்தியோகம் சம்பாதிக்க வேண்டுமே, பதவி பெறவேண்டுமே, மேலே போகவேண்டுமே என்கின்ற கவலையோடு சதா சர்வகாலம் வாழத்தக்கதாயிருக்கின்றதே தவிர சுயமரியாதையுடன் யோக்கியமான வழியில் பிழைப்பதற்கு ஒரு கடுகளவாவது இக்கல்விபிரயோஜனப்படும் படி மாறி இருக்கின்றதா, மாற்றப்படமுடிகின்றதா, என்று பார்ப்பதானால் அதன் உண்மை யாருக்கும் விளங்காமல் போகாது.

இனி மது சம்மந்தமான அதிகாரம் நமக்கு கொடுத்திருக்கிறார்கள் என்கின்றோம். இதனால் என்னமாறுதல் நமது நாட்டில் இதுவரை ஏற்பட்டிருக்கின்றது என்று இந்த அதிகாரம் நமது கைக்கு வருமுன் குடித்துக்கொண்டிருந்த ஜனங்களைவிட ஒரு குழந்தைகூட குடிப்பவர்கள் எண்ணிக்கையில் குறையவேயில்லை. பின்னும் அதிகமாயிருப்பதாகக்கூட சொல்லலாம். அது வருமானத்தைப் பார்த்தாலே தெரியவரும். கடைகளின் எண்ணிக்கையும் பெருகிசந்து பொந்து முதலிய இடங்களில்எல்லாம்லைசென்சு இல்லாமலே விற்கப்படுகிறது. கள்ளுக்கு மரங்களும் கட்டப்படுகிறது. அந்த இலாக்கா மந்திரிகளாவது குடிக்காமலிருக்கிறார்களா, குடிப்பது தப்பு என்று எண்ணுகிறார்களா என்பதே சந்தேகப்படவேண்டியதாயிருக்கின்றது. ஏனென்றால் மதுவைப்பற்றி அந்தந்த மந்திரிகள் பேசுவதைப் பார்த்து அந்த மாதிரி சந்தேகப்படவேண்டியிருக்கிறது.

மற்றபடி நமது நாட்டுக்கு மிகுதியும்முக்கியமானதாகியது கைத்தொழில் விஷயம். அந்த

இலாகாவும் நமது கைக்கு வந்திருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். இதனால் என்ன லாபம் ஏற்பட்டிருக்கின்றது. என்ன விதமான கைத்தொழில் நமது நாட்டில் வளர்ந்திருக்கின்றது. முன் இருந்ததை விட இப்போது குறைந்து வந்திருக்கின்றதேயல்லாமல் கடுகளவாவது விர்த்தியாகி இருக்கின்றதா? அந்த இலாக்கா மந்திரியாவது கைத்தொழில் என்றால் எதை நினைத்துக்கொண்டிருக்கின்றார் என்பதே ஜனங்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. யந்திரங்கள் வளர்ந்து கொண்டேதான் போய்க்கொண்டிருக்கின்றது. வாரம் லட்சம் கூலிகளுக்கு மேல் நம் நாட்டை விட்டு வெளி நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர். இதை அறிந்த நமது பிரதிநிதிகள் என்பவர்களும் யந்திரங்களையே ஆதரிக்கின்றார்கள்.

அடுத்தபடி மதவிஷயம். அதுவும் நமது கைக்கு வந்திருக்கின்றது என்கின்றார்கள். இதில் என்ன மாறுதல் நடந்திருக்கின்றது அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் அந்த மதக் கோயில்களில் போய் கடவுளைத் தரிசிக்க உரிமையில்லை, தெருவில் நடப்பதற்கு உரிமையில்லை. இன்னும் மதத்தின் பெயரால் நடக்கும் விபசாரம் முதலிய கொடுமைகளைக் கூட நீக்க யோக்கியதை இல்லை. அதைப்பற்றி பேசக் கூட அந்த இலாகா மந்திரி என்பவருக்குத் தைரியமில்லை.

மற்றபடி, சீர்திருத்தங்களின் படி இந்தியர்களுக்கு நிர்வாக சபையில் உத்தியோகம் கிடைத்தபலன் என்ன என்று பார்ப்போம்.

சட்ட சம்மந்தமான அதிகாரம் இந்திய நிர்வாக சபை மெம்பருக்கு கிடைத்ததின் பலன் சட்ட சம்மந்தமான இடத்திலெல்லாம் மற்றும் அவர் ஆதிக்கத்திலுள்ளயிடத்திலெல்லாம், பார்ப்பனர்களைக் கொண்டுபோய் நிரப்புவதும், பார்ப்பனர்களுக்கு வேலை புதிதாக உண்டாக்கிக் கொடுப்பதும், அவ்வேலையின் கருத்தாக முடிந்ததேயல்லாமல் வேறு என்னஎன்றுயாராவது சொல்ல முடியுமா? அன்றியும் பார்ப்பனரல்லாதா மக்களை இழிவு படுத்தவும் கொடுமைப்படுத்தவும், எவ்வளவு தூரம் சர்க்காருக்கு இந்த நாட்டை காட்டிக்கொடுத்து இந்த நாட்டின் செல்வத்தை வெளி நாட்டிற்கனுப்பி ஒற்றறாக இருக்கவேண்டுமோ அவ்வளவு தூரம் இருக்கதுணிவது என்பதைத் தவிர வேறு ஏதாவது உணர்ச்சி அந்த உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உண்டாகின்றது என்று யாராவது சொல்லக்கூடுமா? அல்லது சட்ட உத்தியோகம் இந்தியர்களுக்கு கிடைத்ததின் பலனாய் மக்கள் நாணயமான முறையில் நீதி அடைய முடிகின்றதா? ஒரு வாழைக்காய் பாக்கிவரவேண்டுமென்று பிராது போட்டால் இரண்டு கத்திரிக்காய் லஞ்சம் கொடுக்கத் தயாராயிருந்தாலொழிய நியாயம் கிடைக்க மார்க்கமில்லை.

அன்றியும் இந்தியநிர்வாக சபைமெம்பர்களுக்கு இந்தியப் பண விஷயத்தில் எவ்வளவு அக்கரை உண்டு என்று யோசிப்போமானால், தன்னுடைய அதிகாரம் இன்னம் கொஞ்ச நாளைக்கு நீடிக்கவும், தான் செய்கின்ற அயோக்கியத்தனமான காரியங்கள் செல்லுபடியாகவும்வேண்டி வெள்ளைக்காரர்களுக்கு மேலும்மேலும் நல்லபிள்ளையாகவேண்டும் என்கிற கருத்துக்கொண்டே நமதுபணம் நம்மதொழிலாளிகளுக்கும், கூலிக்காரருக்கும், நமது நாட்டு சாமான்களுக்கும் உபயோகப்பட முடியாமல் செய்து, கோடிக்கணக்கான ரூபாய்களை ஏழைகள் மனம் பதறப்பதற வெளிநாட்டிற்கு அதுவும் வெள்ளைக்காரருக்கே போய்ச் சேரும் படி செய்யத் துணிவு கொண்டு, உள் நாட்டுச் சுண்ணாம்புக்கு பதிலாக வெளி நாட்டு சுண்ணாம்பும், கூலிக்காரர்கள் கையால் வேலை செய்யச் செய்து அவர்கள் ஜீவனத்திற்கு கூலி உதவுவதைவிட யந்திரங்களைத் தருவித்து அதன் மூலம் வெள்ளைக்காரருக்கு அளவில்லாத லாபம் கொடுத்து கூலிகள் வயிற்றில் மண்ணைப் போடுவதும் தவிர வேறு என்ன செய்யமுடிகின்றது. வாரம் ஒன்றுக்கு லட்சக்கணக்கான கூலி ஆட்கள் நம் நாட்டை விட்டு வேலையில்லாமல் வெளி நாட்டிற்குப் போவது இவர்களுக்குத் தெரியாதென்று சொல்ல முடியுமா? அன்றியும்இதன் மூலம் அவ்திகாரிகளுக்கு ஏற்படும் எந்த பழிப்புக்காவது இழிவுக்காவது பயப்பட இடம் கொடுக்கின்றதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. இனி மற்றவைகளைப்பற்றி சொல்லவேண்டியதில்லை.

சீர்திருத்தத்தால் ஏற்பட்ட இவ்வளவுகெடுதிகளும் அல்லாமல் மக்களுக்கு பொதுவில் ஏதாவது பலன் உண்டா என்று பார்த்தால் சீர்திருத்தம் பெருகப் பெருக வரியும், வழக்கும், ஒழுக்கக் குறைவும், ஒற்றுமைக் கேடும், பஞ்சமும், நாட்டின்மீது அதிகமான கடனும், மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டு வருகிறதேயல்லாமல் வேறு ஏதாவது நன்மை செய்ய முடிகிறதா என்றால் ஒன்றுமேயில்லை. சர்க்காருக்கு இதனால் ஏற்படும் அனுகூலம் இன்னது என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. எனவே இந்த சீர்திருத்தங்களின் பலன் இன்ன குறிப்பிட்ட மனிதரின் சொந்த குறிப்பிட்ட குணங்களால் தான் இந்த ஸ்திதிக்கு வந்தது என்று சொல்வதற்கில்லாமல், யார் இச்சீர்திருத்தத்தை ஏற்று நடத்துவதாயிருந்தாலும் ஒவ்வொருவரும் அப்படிதான் செய்ய முடியும், செய்யத்தூண்டும் என்கிற மாதிரியிலிருக்கின்றது என்பதற்காகவே இவற்றை விளக்கினோமேயல்லாமல் தனிப்பட்ட மனிதனின் குற்றம் என்பதை விளக்கவல்ல என்பதையும ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக கொண்டுசீர்திருத்தத்தின் யோக்கியத்தைப பற்றி நினைக்கவேண்டும்.

எனவே, வெள்ளைக்காரருடைய எந்த அதிகார பதவி நமது கைக்கு வந்தாலும், அதனால் சர்க்காருக்கும, வெள்ளைக்கார அரசாங்கத்திற்கும் ஒரு வெள்ளைககார உத்தியோகஸ்தர் அந்தப்பதவியில் இருந்தால் ஏற்படும் நன்மையைவிட, அதிகமான நன்மை ஏற்படுவதோடு மக்களிடத்திலும வெள்ளைக்காரர்கள் நடந்துகொள்ளும நாணயக் குறைவைவிட அதிகமாகவே நடக்க ஏற்படவேண்டிய நிலைமைகள்தான் சீர்திருத்தங்களில அமைககப்பட்டிருக்கின்றன.

முடிவாக சீர்திருத்தம் என்பதே குடிகளையும் பாமர மககளையும் ஏமாற்ற சர்க்காரும ஜனத்தலைவர்கள் என்பவர்களும் வேண்டுமென்றே அயோக்கியத்தனமான என்னத்துடன் செய்யும் சூழ்ச்சியும் கட்டுக் கொள்ளையும் தவிர வேறல்ல என்று கோபுரத்தின்மீது இருந்தும் கூவுவோம். இதைப்பற்றி இனியும பின்னால் விபரம் எழுதுவோம்.

## புதிய கட்சிகள்
## பெசன்ட் அம்மையாராட்சி.

சாதாரணமாய் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு மாதிரி வேலைகள் மும்முரமாய் நடப்பது இயற்கை. உதாரணமாக ஒரு காலத்தில் எங்கும் பஜனை கூடங்கள் ஏற்படும். மற்றொரு சமயம் எங்கும் ரீடிங் ரூம் ஏற்படும். மற்றொருகாலத்தில் எங்கும் சங்கீத சபைகள் ஏற்படும். இம்மாதிரியே ஒரோர் சமயத்தில் ஒரோர் காரியம் செல்வாக்குப் பெறுவதுண்டு. அதுபோலவே நமது நாட்டில் புதுப்புது கட்சிகள் ஏற்படுவது என்பது இக்காலத்திய சம்பவமாக இருக்கின்றது.

சமீப காலத்திற்குள் அரசியலின் பெயரால் அநேக கட்சிகள் ஏற்பட்டாய்விட்டது. இனியும் பல கட்சிகள் ஏற்படும்போலவும் இருக்கிறது. அதாவது தென் இந்திய நல உரிமைச் சங்க மாகாண மகாநாடு கோயம்புத்தூரில் நடந்த பின்பு, திருப்பூரில் பார்ப்பனரல்லாதார் சுயேச்சைக்கட்சி என்பதாக ஒரு கட்சி உண்டுபண்ணி ஸ்ரீமான் திருப்பூர் ராலிங்கம் செட்டியார் முயன்று, ஒன்றும் முடியாமல் கடைசியாக ஒரு மகாநாடு கூட்டி கோயம்புத்தூர் தீர்மானத்தை ஆட்சேபித்து கவர்னரையும் மந்திரிகளையும் ஆதரித்து ஒரு தீர்மானம் செய்து சர்க்காருக்கு அனுப்பி, தற்கால சாந்தியாய் ஒரு உத்தியோகமும் பெற்று இருக்கிறார். அவரைப்பார்த்து மனம் பொறுத ஸ்ரீமான் டாக்டர் சி. நடேச முதலியார் அவர்களும் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களும தென் இந்திய நலஉரிமைச்சங்கத்தார் என்கிற முறையில் கோயமபுத்தூர் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள் கட்சி என்பதாக ஒரு கட்சி ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேற்கண்ட இருகனவான்களுமே இரட்டைத்தலைவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு இன்னமும் இன்ன இன்ன உத்தியோகம் கொடுப்பது என்பது சர்க்காரார் இன்னமும் தீர்மானம் செய்யவில்லை. ஏனெனில் சர் சி. பி. அய்யர் மேல் நாட்டுக்குப் போனவர் இப்போதுதான வந்திருக்கிறார். தவிர இனி காங்கிரஸ் என்பதைப்பற்றி யோசிப்போம். அதற்குள் ஏற்கனவே சுயராஜ்யக் கட்சி என்பதாக ஒரு கட்சி இருந்தாலும் அதை ஆதரித்துக்கொண்டு அதற்குள் இருந்தவர்களுக்குள்ளாகவே ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் தேசீய கட்சி என்று ஒன்று ஆரம்பித்தார். அது முளைத்த மூன்று நாளிலேயே அதற்குப்பச்சை வர்தம வந்து கிணற்றில் விழுந்த கல்லுப்போல்தூங்கிக்கொண்டிருக்கின்றது.

குறிப்பு:—ஈரோடு முனிசிபல் சேர்மன் தேர்தல் விஷயமாக கவர்ன்மெண்டார் உத்திரவு பற்றியும், எலக்ஷன் நடவடிக்கைகளைக் குறித்தும், 13-வது பக்கத்தில் காணப்படும் விஷயங்களில் சில திருத்தங்கள் அடுத்தவாரம் வெளிவரும்.

பிறகு ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்களால் சும்மா இருக்கும் கட்சி என்பதாக ஒன்று ஏற்பட்டது. எல்லா கட்சிகளைவிட அதற்குத்தான் தொந்தரவு அதிகம். ஏனென்றால் சும்மா இருப்பதே சுகம் என்று வாயில் சொல்லலாமானாலும், சும்மா இருப்பதைப் போல் கஷ்டமான வேலை உலகத்தில் வேறு ஒன்றுமே இல்லை ஏனெனில் ஐம்பொறிகளுக்கும் உணர்ச்சி இருக்கும்வரை எந்த ஜீவனும் சும்மா இருக்க முடியாது. இது தவிர சுயராஜ்யக் கட்சியில் ஒரு குட்டிக் கட்சி ஸ்ரீமான் எஸ். முத்தையா முதலியாரைத் தலைவராகக்கொண்டு அதாவது பார்ப்பனர்களை நீக்கி காங்கிரஸ் தேசியக்கட்சி என்பதாக 8 பேர் சேர்ந்து ஒரு கட்சி இந்த வாரத்தில் ஏற்பாடாயிருக்கின்றது. இது நாளடைவில் வலுக்கும் போல் தெரிகிறது. ஏனெனில் சுயராஜ்யக் கட்சியில இருந்த பார்ப்பனரல்லாதார்கள் எல்லாம ஒவ்வொருவராய்ப்பார்ப்பனர்களின் சூழ்ச்சி இன்னது என்பதாக அறிந்து விலகுகின்றார்களாதலால், அப்படி விலகுகின்றவர்களுக்கு இதுசமயம் தேசியப் போர்வையுடன ஒரு கட்சி வேண்டுமானால் இதுதான் தயாராயிருக்கின்றது.

இது தவிர மந்திரி கக்ஷி என்று ஒன்று கொள்கையில்லாதது என்கின்ற அர்த்தத்தில் ஒரு கக்ஷி உண்டு. ஒவ்வொரு மந்திரிக்கும தனித் தனியாய் ஒரு கக்ஷியும் அதற்கு 2, 3 பின்பற்றுபவர்களுமஉண்டு. மந்திரி உத்தியோகம் சாகும்போது இந்தக்கக்ஷியும் அழுவாரற்று தானாகவே செத்துப்போகும். இது தவிர மிதவாதக் கக்ஷி என்று ஒன்றுண்டு. இது தனியாக சாஸ்திரி, சர்மா, அய்யர் என்கின்ற இரண்டு மூன்றுவிக பட்டப்பெயரையே கொண்டது, இந்தக் கூட்டத்தார்தான் நமது சர்க்காரை நடத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்புடன் அடுப்புக் கல்லைப்போல் சர்க்காரைத் தாங்குவதற்கென்றே பிறந்தவர்களென்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள்.

போதாக் குறைக்கு அம்மையார் பெசண்டம்மையார் இந்த வாரத்தில் நமது நாட்டில் "லோக குரு" கிருஷ்ண மூர்த்தியுடனும் லக்ஷக்கணக்கான ரூபாயுடனும அடிவைத்திருக்கின்றார்கள. இந்தமமாலைய பிடித்துக் கொண்டு கரையேறலாமென்று வெகுபேர் நாக்கில்தண்ணீர் சொட்டிக்கொண்டு காத்திருக்கின்றார்கள். இந்த அம்மையாரும் காங்கிரசுக்கு யோக்கியதை கெட்டுப்போயிருக்கின்றஇக்காலத்தில சுலபத்திலதான் ஆதிக்கம்பெற்றுவிடலாமென்று ஆசைப்படுவதில் அதிசயமொன்றுமில்லை. "அம்மையாருக்கும" "லோககுருவுக்கும" இனி புது புது சிஷ்யர்கள் சேருவார்கள். "மகாத்மாக்களுடன" அடிக்கடி பேசுவார்கள், சர். சி. பி. அய்யருக்கு இனி அபார யோக்யதைகள் வரும ஏனெனில் அம்மையார் சீமையிலிருந்து பெரிய பெரிய வெள்ளைக்காரரிடம் கோஷன் பிரபுவுக்கு சிபார்சு கடிதம வாங்கி வந்திருக்கலாம. அதில சர். சி. பி அய்யருக்குததான இரட்டைபபங்கு கிடைககும. ஆதலாலஇனி அம்மையார் ஒருபெரிய கக்ஷியாக புறப்படக்கூடும். சுயராஜ்யககக்ஷியும அம்மையார் கக்ஷியுடன் இரண்டறககலந்தாலும் கலந்துவிடும்.

ஏனெனில் சுயராஜ்யக் கக்ஷி இப்போது வடிகட்டி ஆய்விட்டதால் அம்மையார் கக்ஷிக்கு வேண்டிய ஆட்களே மீதி தங்கியிருக்கின்றது. ஒருகாலத்தில் அய்யர் கூட்டத்தோடு மாத்திரம்இருந்துகொண்டு ஆதிக்கம்பெற்ற அம்மையாருக்கு இப்போது அய்யங்கார் கூட்டமும் சேர்ந்து, ஒரு மந்திரி உத்தியோகமும் தனது சிஷ்யருக்கு இருந்து, சட்ட மெம்பர் உத்தியோகமும் அவாது 'மகன் என்பவருக்கு' இருக்கும்போது அம்மைக்கு என்னதான் நடக்காது. பருத்திச்செடி புடவையாய் காய்த்தது என்பதுபோல் ஆகிவிடும் அல்லவா? அதற்கு ஆதாரமாகவே நாளது 7௳. நடைபெறும் அம்மையார் வரவேற்புக்கு சுயராஜ்யக்கக்ஷிக்கு ஜீவநாடியாகிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரே பேசப் போகிறாராம்.

காஞ்சிபுரம் திருநெல்வேலி முதலிய மகாநாடுகளில் அம்மையாரைப்பற்றி ஸ்ரீமான் சத்தியமூர்த்திஅய்யர் பேசியபேச்சுகளும் எழுதியஎழுத்துக்களும் கல்லின்மேல் எழுத்துக்கள் போல் விளங்குவது யாவருக்கும் தெரியும். ஆனால் அப்பொழுது ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை விலக்குவாங்கி அம்மையார்மீது ஏவிவிட்ட ஆள்களேதான் இப்போதும அம்மையாரைப் புகழ அனுப்பி இருக்கின்றார்கள். ஆகவே இவ்வளவு செல்வமும பாக்கியமும் யோகமும பொருந்திய அம்மையார் இந்த செல்வாக்குடன் தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறார்களாம்.

இதன் பலன் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாருக்கு ஆபத்தாகவே முடியும்.

ஆனாலும் நாம் அதைப்பற்றி சிறிதும் கவலைப்படவில்லை. ஏனெனில் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை பெறத்தக்க அளவு இன்னமும் போதிய உணர்ச்சி பெறவில்லை. அல்லாமலும் அதற்குத்தகுந்த தியாகமும் செய்யவில்லை. ஆதலால் அதற்குத் தகுந்த விலை கொடுக்காமல் எந்தப்பண்டமும் கிடைக்காது எனபது உலகமறிந்த விஷயம்

இதை எழுதி முடித்த பின்பு நாம நினைத்தது போலவே அம்மையாரால் விஷம் கக்கப்பட்டிருக்கின்றது. அதாவது பார்ப்பன ஆதிக்கத்திற்கு மத விஷயத்தில் பிரசாரம்செய்ய ஒருமகாத்மா கிடைத்தது போலஇப்போது அரசியலிலும் பிரசாரம செய்ய அம்மையார் ஆகிய "லோகநாயகி" கிடைத்திருக்கிறாரென்றே சொல்லவேண்டும. என்னவென்றால் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொல்லித்தான் பிரசாரம் செய்யப்போகிறார்களாம. அதற்கு காரணம பார்ப்பனர்கள் சொல்வது போலவே வகுப்புவாரி பிரதிநிதித்துவம வந்த பின்புதான் இந்தியாவில் கலகம அதிகமாயிருக்கின்றதாம. ஐயோ பாவம் இது எவ்வளவு கஷ்டப்பட்டு கண்டு பிடித்த காரியமாயிருக்கவேண்டும.

வருணாசிரமமும், பிறப்பில குணம் வருவதும இல்லாவிட்டால ஸ்ரீமான் காந்தியவர்களிடத்தில பார்ப்பனருக்கு யாதொரு வேலையுமில்லை. அவரை மகாதமா என்று கூப்பிடவுமாட்டார்கள். அப்படி ஒருவர் இருக்கின்றாரென்றுகூட உலகத்திற்குதெரியாமல் செய்து விடுவார்கள். அதுபோலவேவகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொன்னால் ஒழிய அம்மையாரிடத்தில் பார்ப்பனர்களுக்கு யாதொருசிநேகமுமில்லை. அம்மையாருக்கும் நமது நாட்டில் யோக்கியதையும் இருக்காது. பூரண கும்பங்களும் லோகநாயகிபட்டமும இருக்காது. உள்ளதையும் மூன்றுநாளில் கவிழ்த்துவிடுவார்கள். இந்த விஷயமும்அம்மையாருக்கும்நன்றாய் தெரிந்தேதான் வரும்போதே இந்த மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு ஐய்யங்கார் கூட்டத்தையும் தன் கைக்குள் போட்டுக்கொண்டுவிட்டார். ஆனால்மகாத்மா என்பவர்களின்உபதேசத்திற்கே ஏமாறுத தமிழ் மக்கள் அம்மையார் சங்கதி நன்றாய் அறிந்த பின்பும் ஏமாந்துபோவார்கள் என்று சுலபமாய் சொல்லிவிடமுடியாது. ஆனாலும் அம்மையார் இடத்தில் இருக்கும் பணமும் உத்தியோகம் அளிக்கக்கூடிய செல்வாக்கும் யாரைத்தான் சுவாதீனம் செய்யமுடியாது என்று யோசிக்கும்போது சற்று பயமாய்த்தான் இருக்கின்றது.

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கோவில்களுக்குள் சாமிக்கு நாட்டியமாட என்பதாக அலங்கரித்துக்கொண்டு வந்து, சாமி கும்பிடவந்த பக்தனுக்கு பாதிகொங்கையைக் காட்டி கண்சிமிட்டி ஜாடை செய்து வீட்டிற்கு கூட்டிப்போய், அவனுக்கு மேகரோகத்தைக்கொடுத்து மடியில் இருக்கும் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு வெளியில் தள்ளுவது இந்துமத சாமியின் போரலா அல்லவா என்று கேட்கின்றோம்.

மக்களுடைய வீடுவாசல்களில் நடக்கும் கல்யாணங்களிலேயே நாட்டியம் கூடாது, அது ஒழுக்கயீனம் ஆவதுடன் மக்களை தப்பு வழியில் நடக்கச்செய்கின்றது என்று நாட்டில் பிரசாரம் நடந்துகொண்டு இருக்கும்போது, கோவிலில் சுவாமிக்கு நாட்டியம வேண்டும் அது மத சம்பிரதாயம் என்று சொல்லுவதானால் அதில் எவ்வளவு போக்கிரித் தனம் நிறைந்திருக்க வேண்டும் என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. மதத்திற்கும சாமிக்கும் பெண்கள் நாட்டியமும் பெண்கள் பணிவிடையும் வேண்டியது அவசியமானால், அந்தச்சாமியைக் கும்பிடும ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில உள்ள பரிசுத்தமான பெண்களை விட்டு ஆடவும் பாடவும் பணிவிடைகள் செய்யவும் ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது என்று கேட்கிறோம்.

கடவுள், பல புருஷர்களை கணவனாய்க்கொண்டே பிழைக்கவேண்டிய ஸ்திரீகளைவிட, ஒரு புருஷனையே கணவனாய்க்கொண்டு பிழைக்கவேண்டிய ஸ்திரீயின் ஆட்டபாட்ட பணிவிடைகளை ஏற்கமாட்டாரா என்று கேட்கின்றோம.

எந்தவழியில் பார்த்தாலும் நமது நாட்டுக்கு ஒழுக்கமும் சுயமரியாதையும் ஏதாவது ஒரு காலத்திலாவது ஏற்பட வேண்டுமானால், பார்ப்பனர்கள் வயிற்றுப்பிழைப்புக்காகவே அவர்களால் சிருஷ்டித்துக்கொண்ட கூட்டுக்கொள்ளைத் தந்திரமாகிய இந்துமதம் எனனும் மாயத்தை ஒழித்தே தான் தீரவேண்டும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் காட்ட முடியாது.

## ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபாலிட்டி சேர்மென் தேர்தலானது முன் லைவஸ் சேர்மென் அவர்கள் குறித்தது போலவே நவம்பர் மாதம் 1-ந் தேதி மாலை 4-மணிக்கு ஆரம்பமாயிற்று. ஆனால் மாஜி சேர்மென் ஸ்ரீமான் சீனிவாச முதலியாரவர்கள் இந்த தேர்தலையும் நிறுத்துவதற்காக சர்க்காருக்கு எழுதியதில் சர்க்காரும் எலக்ஷனை நிறுத்த அநுமதி கொடுத்து விட்டார்கள். ஆனாலும் சேலம் ஜில்லா போர்டு எலக்ஷனை நடத்தக்கூடாது என்று சர்க்கார் உத்திரவு வந்தும் சேலம் ஜில்லா போர்டார் அதை லக்ஷியம் செய்யாமல் தைரியமாய் நடத்தின தேர்தல் நிலைத்து விட்டதைக் கண்ட ஈரோடு முனிசிபாலிட்டியாரும் சர்க்கார் உத்திரவை லக்ஷியம் செய்யாமல் தைரியமாய் நடத்திவிட்டார்கள். ஏனெனில் ஸ்ரீமான் சீனிவாச முதலியார் அன்று பகல் 12 மணிக்கு மேல் முனிசிபல் ஆபீசுக்கு வரக்கூட போக்கியதை இல்லாது போய் விட்டதால், மற்றபடி முதலியார் கக்ஷியைச் சேர்ந்த ஆள்களில் சிலர் தேர்தலை நடத்தக்கூடாது என்று மீட்டிங்கில் ஆக்ஷேபித்தும் அது யாராலும் லக்ஷியம் செய்யப்படாமல் போய்விட்டது. தவிரவும் முதலியாருக்கு அநுகூலமாய் இருந்து அநுகூலம் பெற்று வந்த சில கவுன்சிலர்களும் முதலியாருக்கு வேலை போனவுடனே அவரை கைவிட்டு விட்டுவிட வேண்டியதாகவும் ஏற்பட்டு விட்டது இந்நிலையில் சேர்மென் தேர்தல் நடந்தாலும் என்று கவுன்சில் மெஜாரிடியார் அபிப்பிராயப்படுவதை அறிந்த முதலியாரின் அத்தியந்த கூட்டாளிகளான நண்பர்களில் முக்கியமானவர்களில் சிலர் கவுன்சிலை விட்டு வெளியேறி விட்டார்கள். உடனே தேர்தல் துவக்கமானதும் முதலியார் கக்ஷியைச் சேர்ந்தவரும், முதலியாரின் முக்கிய பாதுகாப்பாளராயிருந்தவருமான ஸ்ரீமான் பிரபு துரை அவர்கள் தனது கேண்டிடேட்டாக ஸ்ரீ. டேவிட் என்பவரை பிரேரேபித்தார். கிருஸ்தவ கவுன்சிலர்கள் எல்லோரும ஸ்ரீமான் டேவிட்டுக்கே ஓட்டுக் கொடுத்தார்கள்.

கருங்கல் பாளையம் ஸ்ரீமான் பால சுப்பராயலு நாயுடுகார் என்கிற ஒரு கனவானை மற்றொரு கவுன்சிலர் பிரேரேபிக்க, கிருஸ்தவரல்லாத கவுன்சிலர்கள் தவிர எதிர்க்குறையமற்ற கவுன்சிலர்கள் எல்லாம் அவரை ஆதரித்து ஓட்டுக்கொடுத்ததால் மெஜாரிட்டி ஓட்டினால் ஸ்ரீமான் நாயுடு அவர்களே தெரிந்தெடுக்கப்பட்டார். ஆகவே இந்த தேர்தலின் மூலம் ஸ்ரீமான் நாயுடுகார் தெரிந்தெடுக்கப்பட்டார் என்கிற சந்தோஷத்தைவிட 'ஸ்ரீமான் முதலியார் வருவதற்கில்லாமல போய்விட்டாரே அதுவே போதும்' என்கின்ற சந்தோஷமே அதிகமென்றுதான் சொல்லவேண்டும். இந்த தேர்தல பலனில ஸ்ரீமான் முதலியார் அவர்கள், தான் வருவதற்கில்லாமல் போய்விட்டதே என்பதால அடைந்த விசனத்தைவிட ஸ்ரீமான் பிரபு என்கின்ற பாதிரி துரைசுதத்தான் அதிக விசனம் என்று சொல்லவேண்டும். ஏனெனில் ஸ்ரீமான் முதலியாரை கொள்ளையடிக்க அநுமதிப்பதால் பாதிரித் துரைக்கு தன் காரியம் எவ்வளவோ சாதகமாய்க்கொண்டு வந்தது. இப்போது அவ்வளவு எதிர்பார்க்க முடியாது. ஆதலால் தன் மனுஷர் போய்விட்டாரே என்கின்ற விசனம் அவருக்கு இருப்பது அதிசயமல்ல. கடைசியாய் ஈரோடு முனிசிபாலிட்டியில் ஸ்ரீமான் முதலியார் ஆக்ஷியில் இதுவரை நடந்துவந்த ஊழல்களுக்கு எல்லாம் இந்த பாதிரி துரை அவர்களே 100க்கு 75 பங்கு காரணஸ்தர் என்று சொல்வது மிகையாகாது. அவர் தனது மிஷின் காரியத்திற்காகவே ஸ்ரீமான் முதலியார் செய்து வந்த நாணயக் குறைவான காரியங்களுக்கெல்லாம் உதவி அளித்து வந்ததுதான் இப்படிச் சொல்வதற்கு முக்கிய ஆதாரம் அல்லாமலும் ஸ்ரீமான் முதலியாருக்கு அண்ணனாகிய ஸ்ரீமான் டேவிட் அவர்களை பிரேரேபித்தது இரண்டாவது ஆதாரம். நிற்க,

இனி மேலாவது முன் நடந்தது போன்ற காரியங்கள் நடவாமல் இருக்கும் என்று தைரியமாய் இருப்பதற்கு போதிய ஆதாரம் இருப்பதாகவும் சொல்வதற்கில்லை. ஏனெனில் முதலியார் சூழ்ச்சி மறைமுகமாக இன்னமும் கொஞ்சகாலத்திற்கு இருக்கும் என்று சந்தேகப்பட அநேக அறிகுறிகள் காணப்படுகிறன்றன. ஏனெனில் இந்த சேர்மென் தேர்தலையும் பலர் ஆக்ஷேபிக்க ஆசைகொண்டிருக்கின்றார்கள். இதற்கும் ஸ்ரீமான் பிரபு துரை சிபார்சு வெகு தூரம் பாயும். சர்க்காருடைய யோக்கியதையும் அதற்கேற்றதுபோல் தான் இருக்கிறது. எனவே யார் யார் சிபார்சு யார் யாரை என்ன என்ன செய்யச் சொல்லுமோ என்கின்ற பயம் ஜனங்களுக்கு இனியும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆதலால் முன்னின்று வேலை செய்தவர்களுக்கு மூக்கு நிலைக்குமா என்கின்ற சங்கதி போகப்போகத்தான் தெரியவேண்டும்.

## பிராமணீயம் ஒழிந்த திதிகள்.

1. நிகழும் பிரபவ-ஹு அற்பசி-மீ 17-உ (2-11-27) புதன் கிழமை அன்று சிக்கல் ஸ்ரீமான் ஜி. நடராஜம் பிள்ளை அவர்கள் தம தகப்பனார் திதியன்று பிராமணப் புரோகிதமின்றி ஸ்ரார்த்தம் கொடுத்து, சுமார் 40, 50 ஏழை ஜனங்களுக்கு அறுசுவை பதார்த்தங்களுடன் அன்னமளித்தார் என்று திரு என். ஜி. சடையப்பன் அறிவிக்கிறார்.

2. செய்யாறு தாலூகா மேனல்லூர் கிராமத்திலிருக்கும் ஸ்ரீமான் சி. ப. வரதராஜ முதலியார் தனது தாயார் வருஷாந்திர திதியை 31-10-27ல் பார்ப்பனர்களை அறவே நீக்கி தம்தாயை எண்ணி இறைவனைத் துதித்து இஷ்டமித்திர பந்துக்களுடனும் சாதுக்களுடனும் உண்டுகளித்து தாமபூலமருந்தி திதியை சிறப்பாக நடத்திவைத்தார். இவ்வூரில் பார்ப்பனீயம் ஒழிந்த முதல் திதி இதுதான.

வி. கிருஷ்ணசாமி முதலியார்
தாலூகா போர்டு மெம்பர்,
மேனல்லூர் கிராமம்.

## இந்திய தேசீயம்.

### காங்கிரசுக்கு பணம் சேர்க்கும் முறை.

யானைக்கவுனிக்கடுத்த கிருஷ்ணா தியேட்டர் என்னும் நாடகக்கொட்டகையில் ஸ்ரீமதி கமலம் என்கின்ற நடனப் பெண்ணைக்கொண்டு வள்ளிபரிணயம் அதாவது வள்ளி என்கின்ற குறப்பெண்ணை பரமசிவன் என்கின்ற இந்து மதக் கடவுளுடைய மகனை சுப்பிரமணியக் கடவுள் என்கின்ற மற்றொரு இந்து மதக்கடவுள் நாசோரம் செய்த (அதாவது திருட்டுத்தனமாய் அடித்துக் கொண்டுபோன) கதையை நாடகமாக நவம்பர் மாதம் 3-தேதி ஆடிக்காட்டி, அதன் டிக்கட்டு விற்பனையின் மூலம் காங்கிரசுக்கு பணம் சம்பாதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். தேசீயப்பத்திரிகைகள் என்பவை நாடகத்தைப்பற்றி விளம்பரம் செய்வது கூடத்தப்பு என்று ஒரு காலத்தில் மகாத்மாவாயிருந்த ஸ்ரீமான் காந்தி எழுதியிருந்தார். இப்போது தேசீய சபையின் தலையெழுத்து நாடகமாடி பணம் சம்பாதிக்கவேண்டியதாய்ப்போய்விட்டது. அதிலும் என்ன நாடகம் என்றால் ஒருவன் பெண்ணை ஒருவன் திருடிக் கொண்டு போகின்ற நாடகம். அதுவும் எதன் பேரால் என்றால் இந்து மதத்தின் பெயராலும் இந்து மதக் கடவுள் பெயராலும். அதுவும் யாரால் என்றால் ஸ்ரீமதி கமலம் என்கின்ற நடனப் பெண்மணியால். அதுவும் டிக்கட் யாரால் விற்கப்படுகிறது என்றால் சென்னை மகாஜன சபை கட்டிடத்தில் காங்கிரஸ் தாசர்களால். எனவே நமது மதத்திற்கும், நமது கடவுளுக்கும், நமது ஒழுக்கத்திற்கும், நமது தேசீயத்திற்கும, நமது காங்கிரஸ் தாசர்களின் யோக்கியதைக்கும நற்சாட்சி பத்திரம் வாங்க மிஸ் மேயோவிடம் போகவேண்டுமா அல்லது மைலாப்பூர் காங்கிரஸ் காரிடம் போகவண்டுமா என்பதை பொது ஜனங்களே யோசியுங்கள்.

## வழி பார்க்கிறது.

காங்கிரஸ் தோன்றி நாற்பது ஆண்டுகட்கு மேலாயின. காகிதத் தீர்மானங்கள் செய்து கொண்டிருந்த நாட்கள் பல. சென்ற சில ஆண்டுகளாகவே மக்களை நோக்கிக் காங்கிரஸ் திரும்பியிருக்கிறது. அரசியல் நெறிக்குக் குறுக்கே நின்று தடுத்து நிற்கும் சமுதாய வழக்கங்களில் காங்கிரஸ் கண்ணோட்டம் செலுத்தியிருக்கிறதென்பது ஒரு முக்கிய விஷயமாகும். காங்கிரஸ் செய்துள்ள தீர்மானங்களுள் தீண்டாமை ஒழித்தலும் ஒன்று. வருணாசிரமிகள் இத்தீர்மானத்தை ஒப்புக்கொள்ளவில்லை. காங்கிரசில் சேர்ந்துள்ள ஒவ்வொருவரும் தீண்டாமை விலக்கை ஒப்புக்கொண்டு தீரவேண்டுவது கடமையாகும். விஷயம இவ்வாறிருக்க, சென்னையில் நடைபெறும் காங்கிரஸ் பந்தலில் வருணாசிரம மகாநாடு கூடவேண்டுமென்று சென்னை பார்ப்பனர் முயல்வதாக அறிகிறோம் வருணாசிரமிகளுக்கும், காங்கிரசிற்கும் இன்று சம்பந்தமிரு

## தமிழ்நாடு இராஜுக்கள் சங்கஸ்தாபன மகாநாடு.

30—10—27-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு ஸ்ரீரங்கம் சிங்கப்பெருமாள் கோவிலுக்கு எதிரில் தாயுமான பிள்ளையவர்கள் தோட்டத்தில் திருச்சி ஸ்ரீ கே. பராங்குசராஜுகாரு தலைமையில் இராஜுக்களின் பெருத்த கூட்டமொன்று கூடியது. பலர் சமூகத்தின் முற்கால தற்கால நிலை, கல்வி, சங்கம் வேண்டுவதின் அவசியம் முதலியவற்றைப்பற்றி பிரசங்கம் செய்தார்கள். பின்னர்,

ராஜுக்கள் முன்னேற்றத்திற்காக எல்லா இராஜுக்களையும் ஒன்று சேர்த்து மகாநாடு கூட்டி ஷை சங்க ஸ்தாபிதம் செய்யவேண்டுமென்றும்,

ஷை மகாநாட்டை பிரபவ வருஷம் கார்த்திகை மாதம் ஸ்ரீரங்கத்தில் அவசியம் கூட்டவேண்டுமென்றும்,

கரும்பியூர் மிராஸ்தார் ஸ்ரீ பி. நாராயணசாமி ராஜுகாரை தலைவராகவும், பொன்மலை ஆர். கோபால்சாமி ராஜுகாரும், எஸ். பக்கிரிசாமி ராஜுகாரும் காரியதரிசியாகவும், திருச்சி ஸ்ரீ கே. பராங்குசராஜுகாரை பொக்கிஷதாராகவும் இக்கூட்டம் தேர்ந்தெடுக்கிறதென்றும்,

ஷை மகாநாடு செவ்வனே நடைபெறுவதற்கு இராஜுக்கள் ஒவ்வொருவரையும் பொருளுதவி செய்யும்படியாக இக்கூட்டம் கேட்டுக்கொள்வதாகவும்,

5—11—27-ந் தேதி சனிக்கிழமை மாலை 4-மணிக்கு திருச்சிக்கோட்டை முத்தழகு பிள்ளைத் தெரு 77-ம் நெம்பர், பொக்கிஷதார் ஸ்ரீமான் கே.பராங்குச ராஜுகாரு வீட்டில் வரவேற்புக் கமிட்டிக்கூட்டம் கூட்டுவதெனவும் தீர்மானிக்கப்பெற்று பகல் ஒரு மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. கந்தசாமி ராஜு.

## கும்பகோணம் தாலூக்கா பார்ப்பனரல்லாதார் முதல்மகாநாடு.

திருபுவனத்தில் புதியதாய் அமைத்திருக்கும் வைக்கம் வீரர் பந்தலில் 20-11-27 ஞாயிறன்று நடைபெறும்.

தஞ்சை ஜில்லாபோர்டுத்தலைவர் உயர் திருவாளர் T, A, பன்னீர்செல்வம், பார் அட்லா அவர்கள் தலைமைவகிப்பார்.

"திராவிடன்" ஆசிரியர் உயர் திருவாளர் சகை சங்கர கண்ணப்பர் அவர்கள் மகாநாட்டுப் பந்தல் திறப்பு விழாவைச் சிறப்பிப்பார்.

மாயூரமணி ஆர். சின்னய்யா பிள்ளையவர்கள் மகா நாட்டுப்பந்தலில் வைக்கம் வீரரின் திரு உருவப்படத்திறப்பு விழாவை நிகழ்த்துவார்

கும்பகோணம் உயர் திருவாளர் ஆர். சி. வெங்கட்டராம நாயுடு அவர்கள் மகா நாட்டுப் பந்தலில் இளைஞர்களின் சுயமரியாதைக்கொடி நாட்டு விழாவை நிகழ்த்துவார்.

சுயமரியாதை ஸ்தாபன வீரர் திரு ஈ. வெ. ராமசாமிநாயக்கரும், பட்டிவீரன்பட்டி திருவாளர் W. P சௌந்திரபாண்டியநாடார் M. L. C. அவர்களும் இன்னும் மற்ற தமிழ் நாட்டுத் தலைவர்களும் மகாநாட்டுக்கு விஜயம் செய்வார்கள். பல முக்கிய சமூக ராஜ்ய மத விஷயங்கள் விவாதிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| வரவேற்புக்கட்டணம் | ரூபாய் | 5, 2. |
| பிரதிநிதி கட்டணம் | ,, | 2 |
| விசிட்டர் கட்டணம் | அணா | 4 |

R. முருகேசம் பிள்ளை,
பொக்கிஷதார் & காரியதரிசி

க்க முடியாது இந்தியாவிற்கு சுய ஆட்சி தேவையில்லையென்பவருக்கு எவ்வளவு உரிமை காங்கிரசில் உண்டோ, அவ்வளவே வருணாசிரமிகளுக்கும் உண்டு. எனவே வருணாசிரம மகாநாட்டிற்குக் காங்கிரஸ் பந்தலில் இடங்கொடுத்தல் ஒழுங்கீனமாகுமென்று எச்சரிக்கிறோம். மெள்ள மெள்ள வந்து உள்ளே நுழைய வழிபார்க்கின்றனர் போலும்? 'குமரன்'

## சுப்பராய பிரம்மா.

டாக்டர் சுப்பராயன் ஜாதிகளை சிருஷ்டிக்கும் வேலையில் மிகுதியும் ஈடுபட்டு வருகிறார் போல் தெரியவருகின்றது.

சென்ற வாரம் பார்ப்பனரல்லாதார் என்பதாக பிரிந்து விளங்கும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், தீண்டாதார். தாழ்த்தப் பட்டவர் என்பதாக பல ஜாதிகளை சிருஷ்டித்தார் என்பதாக எழுதி அவற்றைக் கண்டித்து ஒரு இரங்கற் சுற்றறிக்கை எழுதினோம்.

இந்த வாரம் கிருஸ்தவ ஆதித் திராவிடர் என்று ஒரு புதிய ஜாதியை சிருஷ்டித்திருக்கின்றார். இந்து என்கிற ஒரு இல்லாத மதக்காரர்களைப் பிடித்த சனியன் கிருஸ்தவ மதக்காரரையும் தொத்திக் கொண்டு விட்டதாகக் காண்கின்றது. இனி இந்த பாழும் இந்துமதம் என்னும் பொய் மதம் இன்னும் எந்த எந்த மக்களைப் பிடித்து ஆட்டுமோ தெரியவில்லை.

கொஞ்சமும் தாக்ஷண்யம் பாராமல் இந்துமதம் என்னும் பேதமையை அடியோடு வெட்டிப் புதைத்தாலொழிய நமதுநாட்டில் வைப்பாட்டி மக்களையும் தீண்டாதார்களையும் கீழ் ஜாதியார்களையும் உற்பத்தி பண்ணிக்கொண்டே போகும் வேலை நிற்கவே நிற்காது என்றே நினைக்கின்றோம்.

## ஸ்ரீமான் ஈ. வெ ராமசாமி நாயக்கர்.

ஸ்ரீமான் நாயக்கரின் சுற்றுப்பிரயாண அறிக்கை:—

நவம்பர் 5, 6-தேதி சேலம் மகாநாடு, 6-தேதி மத்தியானம் புறப்பட்டு 7-தேதி மன்னார்குடி, 8-தேதி முதல் 4-நாள் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மையான விடுதலையையுமே பிரதானமாகக் கருதி சொல்லுகின்றோம். அரசியல் என்பதின் உயிர்நாடியே இதில் தான் அடங்கிக் கிடக்கின்றது. ஏனெனில் நமது நாடு ஆயிரக்கணக்கான வருஷங்களாய் சுயமரியாதையும் விடுதலையும் அற்றே வந்திருக்கின்றதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இதற்கு நிவர்த்தியும் சமீபத்திலாவது தூரத்திலாவது இருப்பதாகவும் காணவில்லை. மற்ற வகுப்பாராகிய பௌத்தர்கள், கிருஸ்தவர்கள், மகமதியர்கள், எல்லோரும் சுயமரியாதையுடனும், விடுதலையுடனும், அரசாங்க ஆதிக்கத்துடனும் நம் கண்ணெதிரில் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே அச்சமூகங்களில் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் ஆதாரமான கொள்கை என்ன என்பதை உணர்ந்து அவைகளைக் கைப்பற்ற முற்படுவதுடன் நமது சமூகத்தில் சுயமரியாதைக்கும் விடுதலைக்கும் விரோதமான கொள்கைகள் முறைகள் என்ன என்பதை உணர்ந்து அவைகளை ஒழிக்கவும் முற்படவேண்டும். இதில்லாமல் விடுதலை எதிர்பார்ப்பது குழந்தைகள் விளையாடுவதற்கு சந்திரனைப் பிடித்துத் தருப்படி அழுவது போலத்தான் முடியும். நாம மேற்காட்டிய நிலைமை அடைவதென்பது ஒவ்வொருமனிதனின் சுயமரியாதை ஆசையையும் விடுதலை ஆசையையும் அதன் உண்மையையும் பொருத்திருக்கின்றது.

தவிர, உண்மையான விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் விரோதமாகத்திருந்தே தொழுதத்கினதான ஒரு கூட்டத்திற்கு இக் காட்டுமிராண்டிக் கொள்கையின் பலனால் நமது நாட்டில் செல்வாக்கு ஏற்பட்டு விட்டதால் அக்கூட்டத்தாரின் முட்டுக்கட்டைகளைத் தகர்த்து எறிவது என்பதும்; சுலபமான காரியம் அல்ல என்பது நமக்குத் தெரியும். ஏனெனில் நமது நாட்டில் உள்ள மக்களின் வாழ்க்கையானது தூய்மையான மார்க்கத்தில் நடத்துவதற்கு வழியில்லாமல் நாட்டையும், சமூகத்தையும், ஒழுக்கத்தையும், கற்பையும் விற்று ஜீவிக்கவேண்டியதும் அப்படி ஜீவிப்பதை இழிவு என்று கருதாமல் அதையே ஒரு பெரிய பொதுநல சேவை என்று கருதும்படியானதுமான நிலைமை ஏற்பட்டு விட்டது. அன்றியும் இந்நிலையில் உள்ளவர்களையே பெருமபாலும் உயர் பிறப்பார் என்று ஒப்புக்கொள்ளவும் படுகிறது. ஆதலால இவ்விழிமக்களின் சூழ்ச்சியும் அயோக்கியர்களின் ஆப்பாட்டமும் காலிக் கூலிகளின் வசவும் இவற்றிற்கு எதிராய் தடையாவது அதிசயமல்ல. ஆனாலும், இதைப் பற்றி கவலைவையாமல் உண்மையில் விடுதலையிலும், சுயமரியாதையிலும் கவலையுள்ளவர்கள் யோசித்து வெகு சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதுவே தக்க சமயம். "திராவிடன்"

சூத்திரன் என்று உன்னைச்
சொல்லிக் கொள்ளாதே.

சூத்திரன் என்றால் வேசி
மகன் என்று பொருள்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யாயிருந்தவாறு புகழ்ந்து கூறியிருந்தால் இராமர் வெற்றிகொண்டது வெளிறாகவும் ஒருகால் அநீதிப்பாகவுந்தானே தோற்றும்? ஆகையால்தான் இராவணர் இவ்வாறு இழித்தும் பழித்தும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளார். அது போகாததுபோல் இப்பொழுது காலட்சேபம் செய்யும் ஒரு வகுப்பார் தம் புத்தி வன்மையையுஞ் சேர்த்து வேண்டுமென்றபடி வியாக்யானஞ் செய்து இராவணரை அவர் பிறப்பித்து வந்த மனித வர்க்கத்துக்கே அப்பாற்படுமாறு இழித்துக் கூறி விடுகின்றனர். ஆகவே உண்மைத் தமிழர் இக்கதை கேட்பதால் பெறும் பயனென்ன?

மேலும், ஒரு வெற்றி கொண்ட வீரனுடைய திறமையை வியந்தெழுதவந்த ஒரு புலவன் அவ்வீரனைச் சேர்ந்தவனாகவோ அல்லது அவனது நாட்டினனாகவோ இருந்துவிட்டால் அவ்வீரனை வானமளாவப் புகழ்ந்தும், அவனது எதிரியை காலால் மிதித்து நசுக்கி எறிவதுபோல் இகழ்ந்தும் கூறுவதுதானே முறை? வான்மீகியார் இராமாயணத்தில் இம்முறையைக் கைப்பற்றியது வேறு என்ன செய்திருக்கிறாரென்றே கேட்கிறோம்? இது அசம்பாவிதமென்று யாராவது சொல்ல முடியுமா? உதாரணமாக இப்பொழுது நடந்து முடிந்த பெரும்போர் காலத்தில் ஆங்கிலேயர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் உண்டான கசப்பு காரணமாகவும், ஜெர்மானியர் ஆங்கிலேயா நாட்டினைக் கெடுக்க முனைவதாரென்றது காரணமாகவும், அவர்களை வாயில் வந்தவாறு "அசுரர்கள்" "இராட்சதர்கள்" என்று ஆங்கிலேய பத்திரிகைகளும் நூலாசிரியர்களும் எழுதி வந்தது நாமறியாததா? நமது படித்த கல்லூரியில் இருந்த ஒரு ஆங்கிலப்பத்திராதிபர் தாம் கற்றுக்கொடுத்த பாடத்தில் ஒரு திருட்டுக்கூட்டத்தினரைப்பற்றி யெடுத்துக்கூறவேண்டி வந்தபோது "அவர்கள் திருடர்கள், மூடர்கள், கொடியர்கள், கொலைகாரர்கள், ஏன் "ஜெர்மானியர்கள்" என்றுகூடச் சொல்லுவேன்" என்று மாணவர்கட்குக் கூறியதை நாம் காதாரக் கேட்டிருக்கிறோம். அதனால் ஜெர்மானியரெல்லாம் அசுரர்கள், ஆங்கிலேயர்களே தேவர்களென்று நாம் கொள்வதா என்பதனை நாம கேட்கிறோம். தேயப்பற்று காரணமாக ஒவ்வொருவரும் தத்தம் தேயத்தினரைப் புகழ்ந்து அப்புகழுக்கு நேரெதிரிடையாக எதிரிகளை இகழ்ந்தும் வருவதுதான வழக்கமென்பதற்கு இதைவிட வேறு சான்றுமவேண்டுமா? ஆகவே வடநாட்டைச் சேர்ந்த இராமனைப் புகழ்ந்தெழுதவந்த அந்நாட்டு வான்மீகர் அவருக்கெதிரிபாயிருந்த இராவணரை அசுரரென்றும் இராட்சதனென்றும் எழுதி வைத்தது வியப்பா? ஆனால் அதைப் பகுத்தறிவும் ஆராய்ச்சியுங் கொண்டு பார்த்தும் நாம் அப்படியே உண்மையென்று ஒப்புக்கொள்ள வேண்டுமா வென்றுதான் கேட்கிறோம். அவுரங்கசீப் என்ற முகமதிய மன்னன் ஒரு பகாநரம்பு கொலைகாரனென்று ஆங்கிலேய சரித்திரகாரர்களெல்லாம் எழுதிவைத்து விட்டனர். ஆனால் தக்க ஆதாரங்களுடன் திருமிகு. கே. வி. இரங்கசாமி அய்யங்கார் என்ற சரித்திர ஆசிரியர் அவுரங்கசீப் ஒரு பெரிய செங்கோலரசன் அவர் நாட்டுக்கு நன்மையையே செய்து வந்தவர் என்று நிரூபித்திருக்கிறார். இதற்காக ஆங்கிலேயர்கள் அய்யங்காரைத் தேசத்துரோகியென்றோ மதத்துவேஷியென்றோ அம்முடன் மாறுபட்ட ஒரு காரணத்தில் கூறுவாராயின் அதை நாமும் ஒப்புக்கொள்ள வேண்டுமா? "எப்பொருள் யார் யார்வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற நமது நாயனாரின் அறிவுமொழியைக் கைக்கொள்ளாது விட்டுவிட வேண்டுமா?

இதே இராமாயணக்கதையை நம் தமிழ்நாட்டிலுள்ள தமிழரில் ஒருவர் எழுதியிருந்தால் இவ்வாறு எழுதியிருப்பாரா என்றுதான் நாம் கேட்கிறோம். சமீபத்தில் சர்வகலாசாலையில் பிரசங்கம் செய்த காளிதாஸ் நாக் என்ற சரித்திர நிபுணர் சாவகத்திலுள்ள "பாலி" என்ற பாலியர்களுடைய மொழியில் ஒரு இராமாயணம் இருக்கிறது. அது இந்தியாவில் வழங்கும் இராமாயணத்துடன் பல துறைகளில் மாறுபட்டிருக்கின்றது என்று கூறினார். அதேன்? அது வேற்றாரா ஒருவர் அக்கதையை யெழுதிவைத்ததாலா? அவ்வளவு தூரம் செல்வானேன்? வால்மீகியார் எழுதியிருக்கும் இராமாயணத்தில் சீதையை இராவணன் மயிரைப்பிடித்துத் தூக்கித் தன் தேரில் வைத்துக்கொண்டுபோனதென்ன எழுதியிருக்கின்றார். அதைச் சித்திரமாக்கவெழுதவந்த இராஜ இரவிவர்மாவும், சீதையை பிடிப்பிற் கைகொடுத்த இராவணன் தன்னுடன் சேர்த்துப் பிடித்துக்கொண்டிருப்பதுபோல் ஜாபு புத்தப்படத்தில் எழுதியிருக்கிறார். இவ்வாறு பெண்களை நடத்துவதை தமிழரது வழக்கமல்ல என்பதை நன்குணர்ந்த கம்பர் அதனாலன்றோ தாம் எழுதிய இராமாயண மொழி பெயர்ப்பில் இராவணன் சீதையை அவளிருந்த குடிசையுடன் பெயர்த்துச் சென்றனென, அவனது பராக்கிரமம் வெளிப்படவும், தமிழர் பெண்களை நடத்திவந்த உண்மை நெறி வெளிப்படவும் எழுதிவைத்தார். இவ்வொரு சிறு விஷயத்தில் ஒரு தமிழர் இவ்வாறு பிற்காலத்தில் உண்மையுணர்ந்து தக்கவாறு மாற்றி எழுதியிருப்பாராயின், வான்மீகரையன்றி அவர் காலத்திலிருந்த ஒரு தமிழன் இராமாயணம் எழுதப் புகுந்திருந்தால் எவ்வாறு உண்மைபட எழுதியிருப்பான்? தன்னுடைய அரசனுடைய இராவணரை இவ்வாறு கண்டோரும் கேட்டோருமகண்டோரும் பிறகாட்டாரும், அறிவுள்ளோரும், அறிவிலாரும் பழிக்கத் தூற்றுமாறு எழுதி வைத்திருப்பானா? உண்மைத் தமிழ் மக்களே! இதை உய்த்துணருங்கள் இதை ஆய்ந்து சிந்தியுங்கள் வாய்க்கு வந்தவாறு வியாக்கியானஞ்செய்யும் ஒரு தனிப்பட்ட வகுப்பினரது சூழ்ச்சிப்பிரசாரத்தை ஒழியுங்கள் உடனே ஒழிக்க முயலுங்கள்! அதையே மதத்தொண்டாகவும் தேசத்தொண்டாகவுங் கொள்ளுங்கள்!!!

---

## வேலூர் சித்தவைத்திய நிலையத்தின் திறப்பு விழா

28-10-27 ஆம் நாள் வேலூர் டவுன் அமிர்தலிங்க சுவாமி வீதியில் மருத்துவமணி ஆர் அப்பாதுரை பிள்ளை அவர்களால் புதிதாகக்கட்டப்பட்ட சித்த வைத்திய நிலையம் ஸ்ரீ. பத்மநாப முதலியார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. பின்னர், சித்த வைத்தியத்தில் மிக்க அன்புடையவராயிருந்து காலஞ்சென்ற சுபேதார் மேஜர் லட்சுமண பெருமாள் முதலியாரின் உருவப்படத்தை சித்தவைத்தியம் கே. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் திறந்துவைத்தார். பின்னர் சித்தவைத்தியத்தைப் பற்றி சென்னை பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்கள் விரிவாகப் பேசினார் என்று திரு. எஸ். கே. மீனாட்சிசுந்தரம் எழுதுகிறார்.

---

## பிராமணீயம் ஒழிந்த திருமணம்.

சோளவந்தான் யூனியன் போர்டு சேர்மெனும் பிரபல மிட்டாதாரருமான திரு. கண்ணுசாமி முதலியார் அவர்கள் தனது சகோதரிகளுடைய திருமணங்களை அக்டோபர் 30 தேதியில் பிராமணரல்லாத புரோகிதர்களைக் கொண்டு வெகு விமரிசையாக நடத்திவைத்தார். ஷை கலியாணங்களுக்கு விஜயம் செய்திருந்தவர்களில் திருவாளர்கள் பி. டி. ராஜன், மதுரை முத்துக்கருப்பன் செட்டியார், சாமியப்ப முதலியார், ஷை புத்தக வியாபாரம் கூடலிங்கம்பிள்ளை, வக்கீல் ரெங்கசாமி நாயுடு, வக்கீல் ஏ. நாராயணசாமி பிள்ளை ஆகியவர்கள் முக்கியமானவர்கள்

ஒரு "திராவிடன்"

---

## தேவாங்கர் வாலிப சங்கம் குன்னத்தூர்

அன்புமிக்க சகோதரர்களே! சகோதரிகளே!

நமது குலப்பெரியாரும் சேட்டிவ் டாக்டருமான ப. சி. சிவமலையா தேசிகர் அவர்கள் தேவாங்க வாலிப சங்கம் ஒன்றை குன்னத்தூரில் தேவாங்கர்பொதுக் கூட்டம் கூட்டி நிறுவியுள்ளார்கள் அதன் சார்பாக அநேக நீதி நூற்களை கற்பதாகவும் "திராவிடன்" "குடி அரசு" "தேவாங்க மகாஜோதி" போன்ற பத்திரிகைகளை வாங்கி படிப்பதாகவும், பொதுவாக நமது குல முன்னேற்றத்திற்கு பாடுபடுவதற்கும் இச்சங்கத்தின் மூலம் ஆக்கந்தேடலாகும். ஆகலின் பொது நலத்தில் ஆர்வமிகுந்த ஒவ்வொரு குல மான்களும இச்சங்கமானது தழைக்கும்படி உதவி செய்வீர்களாக.

பணம் அனுப்பவும் அன்பர்களின் பெயர் அவ்வப்போது 'திராவிடன்' 'குடி அரசில்' பிரசுரிக்கப்படும் பணத்தை அடியில்கண்ட விலாசத்திற்கு அனுப்புவீர்களென்று ஷை சங்க உதவி காரியதரிசி எழுதுகின்றார்.

க. சோ. சுப்பயன் செட்டியார்

தேவாங்க வாலிப சங்கம் குன்னத்தூர் P. O

திருமங்கலம் S. I. R.

# சர் சதாசிவ ஐயரும் இந்து மதமும்.

திருவண்ணாமலை கோயில் பிரவேச வழக்கில் சர். சதாசிவய்யர் அவர்கள் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டதில் சாக்ஷிவாக்குமூலம் வேறு ஒரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. சர். சதாசிவ அய்யரவர்கள் சொன்ன சாக்ஷியத்திற்கும் திருவண்ணாமலையில் நடக்கும் கோயில் பிரவேசத் தடுப்பு வழக்கிற்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றி நாம் ஒரு சிறிதும் கவலை செலுத்தவில்லை. அதை அவ்வழக்குக்குப் பொருத்தி முடிவு காணும் விஷயத்தை இது சமயம் திருவண்ணாமலை மேஜிஸ்ட்ரேட்டின் இஷ்டத்திற்கே விட்டுவிடுகிறோம். மற்றபடி பொது ஜனங்கள் இந்துமதம் என்பதைப்பற்றி நினைத்திருப்பதற்கும், இந்துமதம் என்பதின் பேரால் தமிழ்மக்களை ஏமாற்றிப் பார்ப்பனர் அவர்களது சுயமரியாதையை எவ்வளவு தூரம் கெடுத்து கீழாய் ஏமாற்றிப் பிழைக்கின்றார்கள் என்பதையும், இக்கூட்டத்திற்கு நமது நாட்டில் எவ்வளவு செல்வாக்கு இருக்கின்றது என்பதையும் விளக்கிக்காட்டவே இதை உபயோகித்துக் கொள்ளுகிறோம். சர். சதாசிவய்யர் என்கின்றவர் ஒரு வேதம் கற்ற பிராமணர் என்று சொல்லப்படுபவர். தன்னாலும் வேதம் கற்று இருப்பதாய் ஒப்புக்கொள்ளப்பட்டவர். தவிர சட்டம் படித்து உயர்தர கோர்ட்டு நீதிபதியாய் அதாவது ஹைகோர்ட்டு ஜட்ஜாய் வெகுகாலம் இருந்து வந்தவர். இந்துமத பரிபாலன ஸ்தாபனத்திற்கும் தலைவராயிருக்கின்றவர். இந்துமதத்திற்கு ஒரு மத தத்துவ நிபுணர் என்பதாக அரசாங்கத்தாரால் கருதப்பட்டு இந்துமத விஷயமான சட்டங்கள் ஏற்படுத்துவதற்கு ஏற்பட்ட சட்டசபைக்கு ஒரு அங்கத்தினராய் நியமிக்கப்பட்டவர். எனவே, இதைவிட யோக்கியதையுடைய நிபுணர் ஒருவரை இந்துமதத்தைப்பற்றி பேசக்கண்டு பிடிப்பது லேசான காரியமல்ல. அப்படிப்பட்ட சர். சதாசிவய்யர் சொன்னவற்றில் "வேதம்", "ரிஷிகள்", "மதம்", "இந்து" முதலியவைகளைப் பற்றி நமக்கு எவ்வளவு அபிப்பிராய பேதமிருந்தாலும், அபிப்பிராயபேதமில்லாத இந்துக்கள் என்கிறவர்கள் அவர் சொன்னதை ஒப்புக்கொண்டுதானாகவேண்டும். ஆகவே, அவர் மதசம்பந்தமான விவகார விசாரணையின்போது திருவண்ணாமலையில் சொல்லியிருப்பது என்னவென்று கவனித்துப்பார்த்தால், நாம் வெகுநாளாக சொல்லிவரும் தத்துவங்களில் உண்மை இருக்கின்றதா இல்லையா என்பது வெளிப்படும்.

பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டு என்பதை இந்து சாஸ்திரங்கள் மதிப்பதில்லை என்றும், ஜாதி உயர்வு தாழ்வு ஒழியவேண்டும் என்றும், ஆதிதிராவிடர் முதலிய யாவர் வீட்டிலும் உணவருந்தலாம் என்றும், ஆதிதிராவிடர் கோவிலுக்குள் போகலாம் என்றும், தானே ஆதிதிராவிடர்களுடன் உணவருந்தி இருப்பதாகவும், அதற்காக எவ்வித பிராயச்சித்தமும் செய்ததில்லை என்றும், தான் இன்னும் பிராமண சமூகத்தில் ஒருவனாகவே இருப்பதாகவும், இதை அறிந்தே பார்ப்பனர்கள் தன்னை சேர்த்துக்கொண்டிருப்பதாகவும், இது எல்லோருக்கும் தெரியுமென்றும், தான் தாராளமாய் எல்லாக் கோவில்களுக்குள்ளும் போய்வருவதாகவும், வடநாட்டிலுள்ள கோவில்களில் எல்லா இந்துக்களும் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். அல்லாமலும் அன்னிபெசண்டு அம்மையாரைச் சிதம்பரம் கோவிலுக்குள் தீக்ஷிதர்களே பார்ப்பனர்கள் போகும் இடம் வரை அழைத்துக்கொண்டு போனார்கள் என்றும், சொல்லியிருக்கின்றார். எனவே இப்பொழுது கோவில் பிரவேசத்தைப்பற்றியும், மற்றும் பார்ப்பனர்கள் ஜாதி மதம் என்பதின் பெயரால் செய்யும் அக்கிரமங்களைப்பற்றியும் வெளியாக்கிப் பிரசாரம் செய்து வரும் பார்ப்பனரல்லாதார்களைப் பார்ப்பனர்களும் அவர்களிடம் கூலிபெற்று வாழும் அவர்களது அடிமைகளான பார்ப்பனரல்லாதார்களும் வைவதும், ஓலமிடுவதும் எல்லாம் வெறும் புரட்டு என்பதும் நீலிக்கண்ணீர் என்பதும், வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்ட இந்துமத பக்தி என்பதும் யாவருக்கும் விளங்குகின்றதா இல்லையா என்று கேட்கிறோம். அன்றியும் சர். சதாசிவய்யர் சொல்லும் தத்துவத்திற்கு விரோதமான கொள்கைகளையுடைய மதத்தையும் சாஸ்திரங்களையும் நமது பிடரியில் ஏற்றுவதனால் அதை ஒழிப்பதற்கும் அழிப்பதற்கும் முயற்சிப்பதில் குற்றமென்ன என்றும் கேட்கிறோம். தவிர "இந்துமதம் போச்சு, கடவுள் போச்சு' என்று உளையிடும் வயிற்றுச்சோற்று பத்திரிகைக்காரர்களும், கூலிப்பிரசாரகர்களும் இந்த அபிப்பிராயங்களை ஒப்புக்கொள்ளுகின்றார்களா. அல்லது சர். சதாசிவய்யரையும் நாஸ்திகன், காலதோன்றி, என்கிறார்களா என்று தான் கேட்கின்றோம்.

சர். சதாசிவய்யரை நாஸ்திகர் என்று சொல்லுவார்களானால், அவர் ஒரு அபிப்பிராயம் சொல்ல அருகரல்ல என்பார்களானால், இவர்கள் இந்து மத பரிபாலன ஸ்தாபனத்திற்கு அவர் தலைவராய் இருப்பதைப் பற்றி எப்போதாவது ஆக்ஷேபித்திருக்கிறார்களா என்று கேட்கின்றோம்.

இனி "வேதத்தையும் ரிஷிகள் வார்த்தைகளையும் ஒப்புக்கொண்டால் அவர்கள் யாவரும் இந்துக்கள்" என்று சர். சதாசிவய்யர் அவர்கள் சொன்னதைப்பற்றி யோசிப்போம். வேதம் என்றால் என்ன என்பது எத்தனை பேருக்குத் தெரியும் என்பதாக சர். சதாசிவய்யர் நினைக்கிறார் என்பது நமக்கு விளங்கவில்லை. வேதம் என்பது பார்ப்பான் தவிர மற்றவர்கள் படிக்கக் கூடாது என்று இருக்கும்போது மற்றவர்கள் அதில் என்னதான் இருக்கின்றது என்பதாக எப்படி அறியக்கூடும். தான் படிக்காததையும் அதில் இன்னது இருக்கின்றது என்று அறியாததையும் ஒருவன் ஒப்புக்கொண்டால் அவன் யோக்கியனும் அறிவாளியும் ஆவானா? அந்தப்படி ஒப்புக்கொண்டால் தான் ஒருவன் இந்து ஆகக்கூடும் என்றால் உலகத்தில் உள்ள முட்டாள்களும், அயோக்கியர்களும் மாத்திரம் தானே இந்து ஆகக் கூடும் என்று அர்த்தமாகும். ஒரு மதத்திற்கு, அதுவும் தெய்வீக சம்பந்தம், ஆத்மார்த்தம் என்கின்ற விஷயங்களுக்கு இம்மாதிரி நிபந்தனைகளை வைப்பது ஒரு மதத்திற்கு யோக்கியப் பொறுப்பான காரியமாகுமா என்று கேட்கின்றோம்.

இவைகள் எல்லாம் வெளியாக வெளியாக இந்து என்கின்ற வார்த்தைக்கு திருட்டுப் பயல்கள் என்று ஒரு பாஷையில் அர்த்தமிருக்கிறது என்பதாக ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுவதை உண்மை என்று நம்பவேண்டியிருப்பதுடன் அப்படிப்பட்ட திருட்டுப் பயல்கள் என்கின்ற அர்த்தத்தைக்கொண்ட இந்து என்கின்ற பெயரை நமதுமீதும் வைத்து நம்மையும் ஏமாற்றி ஒரு கூட்டத்தார் வயிறு வளர்ப்பதை இன்னமும் பொறுத்துக்கொண்டிருப்பதா என்று கேட்கின்றோம்.

திராவிடன்"

## புதிய கட்சி.

சென்னை சட்ட சபையில் கீழ்க்கண்ட 8 அங்கத்தினர்கள் காங்கிரஸ் தேசியக்கட்சி யென்னும் பெயரால் ஒரு தனிக் கட்சியேற்படுத்தியிருப்பதாகவும் அவர்களுக்காக சட்டசபையில் பிரத்தியேகமான இட வசதிகள் அளித்திருப்பதாகவும் தெரிகிறது. ஸ்ரீமான்கள் எஸ். முத்தையமுதலியார், அப்துல்ரஜாக் சாகிபு, ஜே. ஏ. சல்தானா, வி. கோபாலமேனன், நாராயண ரெட்டி, கே. மாணிக்கவேலு நாயகர், சையத் இபுராகிம்சாகிபு, பி. சிவ ராவ் ஆகியவர்களே அந்த எண்மர். இதனால் சுயராஜ்யக்கட்சிக்குப் பலம் நாளுக்கு நாள் குன்றிவருவது வெளிப்படை. இன்னும் பலர் சுயராஜ்யக் கட்சியிலிருந்து பிரிய இடமேற்படக் கூடுமென்றும் சொல்லப்படுகிறது.

'திராவிடன்'

## சுகாதாரக் கட்டுரைகள்.

அசுத்தக்காற்றே அநேக நோய்தரும்.
ஆதலாலதனை யணுக இடந்தரேல்.
இலகுபோஜனமே ஏற்றதுவாகும்.
ஈமொய்ப்பண்டமெவையுமுண்ணேல்.
உண்பதும் சற்று உலவுதல்முறையாம்.
ஊசினபதார்த்தம் உட்கொளல் விதியல.
எதிர் காற்றடிக்குமிடந்தனிலுறங்கேல்.
ஏசுமபண்டம் கூசித்தள்ளு
ஐயென்பதுவை அகலத்துப்புக.
ஒள்ளி இரவில் உறங்குவதுநலம்.
ஓய்வு காலத்து உலவுதல்நன்று.
ஔவையார் சுகமுறை அறிவதும்விதியே.

வெ. ராமகிருஷ்ணன்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது செய்த குற்றத்துக்கு வருந்துவதும் அக்குற்றம் போக கடவுளை வணங்குவதுமேயாகும். தென்னிந்தியாவில் தான் கெர்ப்பக் கிருகத்துள் நடக்கும் பூசை குருக்களால் மட்டும் நடைபெறுகின்றது. சுகாதாரத்தை முன்னிட்டும் சௌகரியத்தை முன்னிட்டும் கெர்ப்பக் கிருகத்துக்குள் குருக்கள் மட்டும் போவது நல்லது. தீண்டாமை இப்பொழுது குறைந்துவருகின்றது. பெசண்டு அம்மையார் வந்ததற்காகச் சிதம்பரத்தில் பிராயச்சித்தம் செய்யப்படவில்லை. கோயில்களில் இப்பொழுது நடக்கும் காரியங்கள் மாமூல்படியும், சாஸ்திரப் படியும், சாஸ்திர விரோதப்படியும் இந்த மூன்று வகையாக நடைபெறுகின்றன. மாமூல் என்பது கோர்ட்டார் முடிவு செய்திருப்பது.

## கொள்கையால் மதமா? பிறப்பால் மதமா?

### சிதம்பரனுர் எழுதுகிருர்

நாம் நீண்ட நாள் பழகிய பழக்கத்தின் காரணமாக இன்னும் பல காரியங்களை உண்மையுணராமல் செய்து வரக்கூடிய அறியாமை நிலையிலிருக்கின்றோம். நம் அறிவுக்கும் மனச்சாட்சிக்கும் மனதுக்கும் பொருந்தாத காரியங்களைக்கூட பழக்கத்தின் கொடுமையால் நடத்துகின்றோம். சிலவற்றில் உண்மையுணராமலேயே இருக்கின்றோம். அத்தகைய கொடிய வழக்கங்களில் மதம் என்பதும் ஒன்று. சாதாரணமாகக் கற்ற அறிவினரும், மதம் என்ற விஷயத்தில் உயிரை விடவும் தயாராயிருக்கின்றார்கள்: பொதுவாக ஒருவனுக்கு மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மதப்பற்று வேண்டுமென்று கூறுகின்றனர். இதனை பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம், ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம் வேண்டுமென்று ஆடம்பரமான சமஸ்கிருத வார்த்தைகளாற் கூறிவிடுகின்றனர்.

மேற்கூறியதில் மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் வேண்டுமென்பதில் யாருக்கும் மாறுபட்ட எண்ணந்தோன்றுவதற்குக் காரணமில்லை. ஆனால் மதப்பற்று என்பதுதான், சரியான பொருளில் வழங்கவில்லையென்று நாம் நினைக்கின்றோம். தமிழ் மொழியில் ஒவ்வொரு வார்த்தைக்கும் பொருள் என்னவென்று ஆராய்ந்து பார்ப்போமாயின் உண்மையை உணரலாம். அந்த முறையில் மதம் என்பதற்கு பொருள் யாதென்று பார்க்குங்கால் கொள்கை என்பதே பொருளாகின்றது.

கொள்கை என்றால் ஒவ்வொரு மனிதருடைய தீர்மான எண்ணங்களையே குறிக்கும். கடவுளைப் பற்றியும், பாவபுண்ணியங்களைப் பற்றியும், மோட்ச நரகங்களைப்பற்றியும், ஒருவன் தன் அறிவினால் ஆராய்ந்து கொண்டிருக்கும் முடிவான எண்ணத்திற்கே மதம் என்று கூறலாம். அதைப் போலவே மொழி வளர்ச்சியின் பொருட்டு முடிவு செய்திருக்கும் எண்ணங்களும், நாட்டு வளர்ச்சியின் பொருட்டு முடிவு செய்திருக்கும் எண்ணங்களும், மதம் என்றே கூறப்படும். ஆகவே ஒருவன் ஒரு விஷயத்தை ஆராய்ந்து முடிவு கட்டிக்கொள்வதற்குத் தகுந்த அறிவைப்பெற்றிருக்க

4 ம் பக்கத் தொடர்ச்சி

3 அனேகமாய்ப் பார்ப்பனர்கள் எல்லாம பண்டிதர்கள், சாஸ்திரிகள் என்று பெயர் வைத்துக் கொண்டு பெரிய மதாச்சாரியார்கள் ஆகிறார்கள்.

4 தாங்கள் நான்கு ஜாதிகள் உண்டு என்று சொன்னதால் பிராமணரல்லாத எங்களைச் சட்ட சபை மூலமும் சூத்திரன் என்று உறுதி செய்யப் படுகிறது.

5 தங்களிடத்திலும் அதிருப்தி எற்பட்டதின் பலனாக கதரிடத்திலுங் கூட சில பிராமணரல்லாதார் வெறுப்புக் கொள்ள நேர்ந்து விட்டது.

6 வருணாசிரமத்தைப் போதிக்கும் மனுதர்ம சாஸ்திரங்கள் போன்றவைகளைப் பறிமுதல் செய்யும்படி சர்க்காரைக் கேட்கும்படியாகி விட்டது.

7 தங்களுக்காகவே பிராமணரல்லாதார்கள் இந்து மதம் என்பதைத் துறந்து வேறு மதக் கொள்கைகளை அநுஷ்டிக்க நேரும் என்று தோற்றுகின்றது.

8 கொஞ்சம் கொஞ்சம் சில பார்ப்பனரல்லாதவர்களுக்குக் காங்கிரசிடமிருந்த நம்பிக்கையும் அடியுடன் தொலைந்து விட்டது.

9 சுயமரியாதைக்காக வேதம், ஸ்மிருதி, புராணம், சப்த ரிஷிகள் முதலியவர்களும அவர்கள் கற்பிக்கும் கடவுளுங்கூட தாக்கப் படும் படி ஏற்பட்டு விட்டது.

இந்நிலை தங்கள் அபிப்பிராயங்களை மக்கள்தாக்குவதில் தாங்கள் ஒன்றும் அதிசயப்படமாட்டார்கள்.

கவேண்டும். ஒவ்வொன்றையும் சீர்தூக்கிக் குற்றங் குறைகளை உணர்ந்து, உண்மையையும், உண்மையல்லாததையும் தெரிந்து ஆராயும் அறிவே பகுத்தறிவின் விளக்கமாகும் பகுத்தறிவின் துணையில் ஒருவன் தன் மனத்தில்கொண்டிருக்கும் முடிவான எண்ணங்களையே மதமென்று கூறலாம்.

மதம் என்பதன் பொருளை யறியும் போது நமக்கு ஒரு உண்மை விளங்குகின்றது: அதாவது மதம் அறிவினால் வருவதே யன்றிப் பிறப்பினாலன்றென்பதே. ஆனால் பல மத நூல்களும் குருட்டு நம்பிக்கையுடையவர்களும், மதம் பிறப்புரிமையென்று கண் மூடிக்கதறுகின்றனர். ஒவ்வொரு மதத்தினரும், தங்கள் தங்கள் மதத்தையே உயர்த்திக்கூறி அநேக புண்ணியங்களைப் புரிந்தால் தான் தங்கள் மதங்களிற் பிறக்கலாமென்று கூறுகின்றனர். இதனால், வைணவன் ஒருவனுக்குப் பிறந்தவன் வைணவ மதத்தைச் சேர்ந்தவனாகக் கருதப்படுகிறான். சைவன் ஒருவனுக்குப் பிறந்தவன் சைவமதத்தவனாக எண்ணப்படுகிறான். கிறிஸ்தவனுடைய பிள்ளை கிறிஸ்தவனாகவே நினைக்கப்படுகிறான், மகம்மதியனுடைய மகன் மகம்மதிய மதத்தவனாக மதிக்கப்படுகின்றான். இவ்வாறு கொள்ளப்படுவது தவறு என்பதை மதம் என்பதன் பொருளை யுணர்ந்தவர் நன்கறியலாம் ஒன்றையும் பகுத்தறியாத சிறு குழந்தையை எந்த மதத்திற்சேர்க்க முடியும்? வைணவன் என்று கருதப்படுகிற ஒருவனுக்கு வைணவத்தின் கொள்கைகள் இன்னதென்றே தெரியாதிருக்கலாம். சிவ மதத்தவன் என்று கருதப் படும் ஒருவன் சைவத்தின் கொள்கைகள் இன்னதென்றே தெரியாமலிருக்கக் கூடும். கிறிஸ்தவன் என்று கருதப்படும் ஒருவனுக்கு அம்மதத்தின் உண்மைகள் தெரியாமலேயிருக்கலாம். முஸ்லிம் என்று கருதப்படும் ஒருவன் இஸ்லாத்தின் கொள்கைகளை உணராமலே இருக்கலாம். இவர்களையெல்லாம் எப்படி வைணவன், சைவன், கிருஸ்தவன், முஸ்லிம் என்று மதத்தின் பெயரால் அழைக்க முடியும்? அவ்வாறு அழைப்பதில் என்ன பொருளிருக்கின்றது. அறியாமை, மூட நம்பிக்கை, குருட்டுத்தனம், அசட்டுத்தன்மை தான் பொருளென்று நாம் கொள்கிறோம்.

இங்ஙனம் தங்கள் மதம் என்று உரிமை கொண்டாடுவதற்கு ஏற்ப அதன் கொள்கைகளை உணராமலிருந்தாலும், மதம் பிறப்புரிமை யென்றுகருதி, அதன மேல் ஒருவித மூட பக்தியும், அபிமானமும் கொள்ளுகிறான். இதற்கு மத்தியில் கற்றறி மூடர்கள் யாரேனும் தோன்றி அந்நிய மதத்தில் வெறுப்பையும், ஆத்திரத்தையும் உண்டாக்கக் கூடிய மொழிகளைக் கூறுவார்களாயின் உடனே பிறமதத்தினர் மீது வெறுப்பும், ஆத்திரமும் கொள்ளுகிறான். இதனால் மக்களின் சகோதரத்தன்மைக்குத் தீங்குண்டாகின்றது. ஒற்றுமை குறைகின்றது தீமை பெருகுகின்றது. நன்மை குறைகின்றது இதற்குக் காரணம், மதம் பிறப்புரிமை யென்னும் குருட்டு மூட அறிவற்ற நம்பிக்கையேயாகும்.

ஆகவே சைவ மதத் தாய் தந்தையர்களுக்குப் பிறந்த ஒருவன் வைணவத்தின் கொள்கைகளில் ஈடுபட்டிருப்பானாயின் அவனை வைணவன் என்றே கொள்ளலாம். வைணவமதத்தாய் தந்தையர்க்குப் பிறந்தவர்கள் கிருஸ்தவமதக் கொள்கைகளைப் பின்பற்றுவார்களாயின் அவர்கள் கிருஸ்தவர்களென்றே கொள்ளப்படவேண்டும் இவ்வாறே ஒவ்வொருவர் கொள்கைகளே அவரவர் மதத்திற்கு அடிப்படையாகும் என்பதை இதுகாறுங் கூறியவாற்றால் காணலாம்.

பார்ப்பனரல்லாதாராகிய நமக்கு இப்பொழுது வேண்டியது சுயமரியாதை மதம் ஒன்றே. சுயமரியாதைக்குக் கெடுதி வரக்கூடிய எதனையுஞ் செய்தல் கூடாது. சுயமரியாதை குறையும்

## பம்பாயில் சத்தியாக்கிரகம்.

மகத் என்னுமிடத்திலுள்ள தாழ்ந்த வகுப்பார் எனப் படுவோரின் கூட்டமொன்று நேற்று ஜஹாங்கீர் மண்டபத்தில் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் கூடியது. அக்கூட்டத்தில் அவர்கள் சாதாரணமான மனிதர்களுக்கு அவசியமாக இருக்கவேண்டிய உரிமைகளுக்காகப் போராடியும் உயர்ந்த வகுப்பார் என்போர் அனுதாபங்காட்டாமல் இருப்பதால் இனி அவைகளைச் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்று தீர்மானித்து அவர்களுடைய உரிமையைப் பெறுவதற்காகச் சத்தியாக்கிரகம் செய்வதென்றும் தீர்மானித்து விட்டனர். அவர்கள் இந்த நிலைமைக்கு வந்ததற்குக் காரணம் அவர்களுக்குப் பொதுக் குளத்திலும் சுதந்திரம் அளியாமையே யாகும். அக்கூட்டத்தலைவர், மனிதவர்க்கத்தைச் சேர்ந்த ஒருவனை ஒரு பொதுக்குளத்திலிருந்து தண்ணீர் பருகுவதைத் தடுப்பதானது அமானுஷீகத்தனமென்றும், பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் உள்ள சுதந்தரமும் மனிதனுக்கில்லாதிருப்பது நீதியன்றென்றும் கூறினார். தலைவர் வேண்டுகோளின் மீது அந்த இடத்திலேயே 500 ரூபாய்க்கு மேல் வசூல் ஆய்விட்டது. சத்தியாக்கிரகம் செய்வதற்குப் பல தொண்டர்கள் முன்வந்திருக்கின்றனர். டிசம்பர் 25-ந் தேதி முதல் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்படும். இதேமாதிரி சத்தியாக்கிரகமொன்று கோயிற் பிரவேசத்துக்காக நவம்பர் 15-ந் தேதி முதல் அம்ரோதியில் ஆரம்பிக்கப் படும்.

## சமதர்ம உதயம்.

### 'ஜாதி சம்ஹார சக்கரத்தின் முயற்சி.

ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பம்பாயில் 'ஜாதி சம்ஹார சக்கரம்' என்ற ஒரு சங்கம் உழைத்து வருகிறது.

பம்பாயிலுள்ள சென்னை ஹோட்டல்களில் பரவியிருக்கும் ஜாதி வேற்றுமைகளை அடியோடு ஒழிக்க பம்பாயிலுள்ள தமிழ் வாலிபர்கள் முன்வரவேண்டுமென்று மேற்கூறிய சங்கம் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. பம்பாயில் சமூக வேற்றுமைகளை ஒழிப்பதற்கு இங்குள்ள பனஸ்வதி ஆலயமே ஒருமுக்கிய காரணமாக விருக்குமென இங்குள்ள பிராமணரல்லாத இளைஞர்களிடம் ஒரு உணர்ச்சி தோன்றியிருக்கிறது. பம்பாயில் பிராமணரல்லாதாரை இழிவாக நடத்திவரும் கோயில் பனஸ்பதி ஆலயமொன்று தான். இங்கு பூஜைகள் நடக்கும் பொழுது பிராமணரல்லாதார் மிகவும் தாழ்மையாகவே நடத்தப்படுகின்றனர். இம்மாதிரி இக்கோயிலில் நடப்பதை தடுக்காது விட்டுக்கொண்டிருந்தால், பம்பாயிலுள்ள மற்ற கோயில்களும் இதே வழக்கத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்து விடலாமென 'ஜாதி சம்ஹார சக்கரம்' அஞ்சுகிறது. இக்கோயிலை பகிஷ்கரிப்பதற்கு ஒரு இயக்கம் ஆரம்பிக்கும் பொருட்டு வேண்டிய ஏற்பாடுகளை இச்சங்கம் செய்து வருகிறது. "தமிழ் நாடு"

வரையில் உயிர் கொடுத்தேனும் அதனை மீட்க முயலவேண்டும். பழைய மூட வழக்கங்களையும் சடங்குகளையும், மக்களுக்குள் உயர்வு தாழ்வு கருதப்படுவதையும் ஒழிப்பதுதான் நமது மதம். ஆகையால் வீணான குருட்டுமூட மத வழக்கங்களில் ஈடுபடாமல் அறிவினால் ஆராய்ந்த கொள்கைகளாகிய மதத்தைக் கடைப்பிடித்து அதன்படியொழுகயாவரும்முயல்வோமாக.

**மநுநீதி போன்ற அதர்ம நீதி உலகில் மற்றொன்றும் இல்லை**

## வெள்ளகோவிலில் "மகாத்மா" வருகை.

சென்ற 23-10-27ம் தேதி ஞாயிறன்று காலையில், திருப்பூரிலிருந்து காங்கயம்,வெள்ளகோவில் வழியாக கரூருக்கு "மகாத்மா காந்தியடிகள்" சென்றுவிட்டு திரும்ப 9 மணிக்கு வெள்ளகோவில் சர்க்கா சங்கத்துக்கு முன் கார் வந்து நின்றவுடன் ஸ்ரீமான் எஸ். இராமநாதன் அவர்கள் இறங்கி மஹாத்மாவை அழைக்க அவரும் துயிலிலிருந்து எழுந்து, புன்னகை ததும்பும் முகத்துடன், சர்க்கா சங்கத்தில் வருகின்றார். மஹாத்மா காந்திக்கு ஜேய் என்ற சத்தம் எழுந்தவுடன் ஸ்ரீ இராமநாதன் அவர்கள் கொதித்தெழுந்து கையமர்த்தி மஹாத்மாவுக்கு உடம்பு சுகமில்லை,சத்தமிடவேண்டாமென்று கட்டளையிட்டு விட்டார். "சர்கா" சங்க மானேஜரால் கதர்மாலை மஹாத்மாவுக்குச் சூட்டப்பட்டவுடன் பொது ஜனங்களாலும், கதர் டிப்போ ஏஜண்டுகளாலும் வசூலான 100 ரூபாய் பணமுடிப்பும், வரவேற்புப் பத்திரமொன்றும் மகாத்மாவுக்கு அளிக்க, அவரும் அன்புடன் அதை ஏற்றுக்கொண்டவுடனே அடுத்த நிமிஷத்தில் ஸ்ரீ ராமநாதன் மஹாத்மாவை ஏற்றிக்கொண்டு காரை அதிவேகமாய் விட்டுக்கொண்டு போய்விட்டார்கள். இரண்டு மூன்று நிமிஷத்தில் இச்சம்பவங்கள் நிகழ்ந்தபடியினால் பலர் மகாத்மாவைக்கண்குளிரப்பார்க்க முடியாமலும் இன்னும்பலர் ஓடோடியும் வருவதற்குள் காரைக் காணாமல் மின்னல் மறைவதுபோல் கார் மறைந்துவிட்டதேஎன்று ஏக்கமடையவுமாயிற்று. ஏழைக்கன்பரென்று சொல்லும் மஹாத்மா இச்சிற்றூரில் ஏழைகள் மத்தியில் வந்து இறங்கியும் வாய் திறந்து ஒரு சொல்லாவது சொல்லாமல் சென்றுவிட்டாரே என்று பெரிதும் ஏக்குவதுடன் உடன் வந்த பிள்ளை அவர்களாவது கவலை எடுத்துக்கொள்ளவில்லையே என்றும் வருந்துகின்றோம். புகைப் படத்தில் மகாத்மாவைக் கண்டு எவ்வளவு களிப்படைய முடியுமோ அதைவிட சிறிதும் அதிகம் சந்தோஷப்பட முடியாமல் அன்று சம்பவத்தை காரிய தரிசிகள் நிகழ்த்திவிட்டார்களோ என்றே வருந்துகின்றோம். ஸ்ரீமான் பிள்ளையவர்கள் சொல்லுகிறபடி மகாத்மாவுக்கு பேசமுடியாத அசவுகரியமாக இருக்கும்போது திருப்பூரிலிருந்து கரூர் சென்றுவர 112 மைல் கார்சவாரி மகாத்மாவுடம்புக்கு ஒத்து கொள்ளுமா? அல்லது டாக்டர் அனுமதிக்குமா? என்றுதான் கேள்வி. அன்று கார்போன வேகம் சொல்லதரமன்று. பின்னால் வந்த வண்டிக்காரர்களெல்லாம் பந்தயக்காரா இன்று போகிறது என்று கேட்டதுடன் தங்கள் வண்டிகள் காருக்குத் தப்பிவந்தது அதிசயமென்றும் சொன்னார்கள். இவ்வளவு வேகத்தில் செல்லும்போதுகாருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் யார் ஜவாப்தாரி என்பதை ஏன் பிள்ளையவர்கள் மனத்தில் உணரவில்லை என்றே கேட்கின்றோம். எது எப்படியாயினும் சரி, பணம் சம்பாதிப்பதிலேயே மகாத்மாவின் சிஷ்யகோடிகள் தங்களோடு நில்லாமல் பெரியாரையும் கஷ்டப்படுத்துகின்றனரே! அன்று வெள்ளகோவிலில் சம்பாதித்த 100 ரூபாய் பண முடிப்பும் கதரால் ஏஜண்டுகளால் கொடுக்கப்பட்டதென்று "மித்திரன்" பத்திரிகையில் எழுதி பொதுஜனங்களைப் பிரித்து பாத்தியதை இழககும்படி இவ்வளவு அவசரமாக ஒன்றிருக்க ஒன்று பிரசுரித்ததிலிருந்தே இவர்களின் மனப்பான்மை வெட்டவெளிச்சமாய்த் தெரியவில்லையா! இனியேனும் மகாத்மாவைக் காப்பற்றும் சிஷ்யகோடிகள பணத்தின்பொருட்டு பூழுநோக்கமும் செலுத்தி உலகம்போற்றும் பெரியாரை உலகம் தூற்றும்படி செய்யாமலிருக்கவேணடு மென்றும், மஹா ஜனங்களின் மனதைக் கோதிக்கவைக்காமலிருக்கவும் வேண்டப்படுகிறார்கள் என்று நேரில் கண்ட பரிதாபி ஒருவர் எழுதுகின்றார்.

## பார்ப்பனப் பசப்புவார்த்தைகளை நம்பாதீர்.

இந்த வாரம் வெளியான "குடி அரசு" பத்திரிகையில் ஸ்ரீமான் ஜோசப் கற்ற பாடமென்று தலையங்கம் எழுதி இருந்ததைப் படித்துப் பார்த்தேன். அதில் கண்டபடி பலேயவ்வளவு நன்றி செய்த ஒருவருக்கு தினையவ்வளவு நன்றிசெய்ய ஒரு வகுப்பார் இணங்கவில்லை யென்பது நன்ருய் தெரிந்தது.

மதுரை 16-வது வார்டு எலக்ஷனில் நமது தலைவர் ஸ்ரீமான் ஜோசப் அவர்களுக்குவேலை செய்தவர்களில் சிறியோனுகிய நானும் ஒருவன். 16-வது வார்டிலுள்ள வாக்காளர்களிடம் சென்று உங்கள் வாக்குகளை யாருக்குக் கொடுக்கப்போகின்றீர்களென்று வீடு வீடாகச் சென்று கேட்டதில் "எங்கள் வாக்குகளை ஸ்ரீமான்ஜோசப் அவர்களுக்கே கொடுக்கப்போம்" என்றும், முனிசிபல் சபைக்குச்சென்று போராடும் திறமை அவருக்குண்டென்றும், அவர் இந்த ஊரில் ரொம்ப தியாகம் செய்தவரென்றும், அவரை விட வேறொருவர் போய் எந்தக்காரியத்தையும் சாதித்துவிட முடியாதென்றும், வாயாரப் புகழ்ந்து சொல்லி "நீங்கள் வந்து அலைய வேண்டாம், நாங்கள் எங்கள் வாக்குகளை உறுதியாய் ஜோசப் அவர்களுக்கே கொடுக்கிறோம்" என்றும் அவர் இந்த எலக்ஷனில் நின்றதே பெரியகாரிய மென்றும் சொல்லிமுடிவில் ஸ்ரீராமநாத அய்யரையே ஆதரித்தார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் பிராமணர்கள் வகுப்புவாதி என்றும், சுயநலங்கருதுபவரென்றும் தெரிந்து கொண்டவர்களில் நானும் ஒருவன். நாட்டில் அபிப்பிராய பேதங்கள் யேற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் சாதிச் சண்டை சமயச் சண்டை வளர்ந்து கொண்டு போகிறது. இந்தச் சமயத்தில் பிராமணரல்லாதார் ஒவ்வொருவரும் சுயமரியாதை தேடிக்கொள்ள வேண்டிய மக அவசியமென்பதை உத்தேசித்து மக்கள் பட்சத்தில் மலிந்திருக்கும் மூட நம்பிக்கையை ஒழிக்கவும் ஒருவகுப்பார் செய்யும் சூழ்ச்சியால் சொக்குண்டு தூங்கிக்கிடக்கும் மக்களை தட்டி யெழுப்பவும் நமக்கு வழிகாட்டியாகவும் ஒரு தலைவர் வேண்டியதவசியம். அத்தகைய தலைவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டுமென்றால் சுய நலம் கருதாதவரும் தியாக புத்தியுடையவரும், அரசியல் அனுபோக முள்ளவருமாயிருத்தல் வேண்டுமென்பது எனதபிப்பிராயம். அத்தகைய குணமுடையவரால்தான் மககளைச் சரியான முறையில் நடத்திக்கொண்டு போகமுடியும். அத்தகைய குணம் அமைந்த தலைவர் ஸ்ரீமான் ஜோசப் அவர்களே இந்தப் பிரசாரம் செய்து இருளில் மூழ்கிக்கிடக்கும் மக்களுக்கு சுயமரியாதை என்னும்ஒளியைகாட்டமுன் வரும்படி கேட்டுக்கொள்வதோடு ஒத்துழையாமைக்காலத்தில் தமிழ் நாட்டில் தூங்கிக்கிடந்த மக்களை தட்டி யெழுப்பி தேசத்தொண்டே பெரிதென நினைத்து பன்முறை சிறை சென்ற தேசபக்தர்களும் நமது தலைவர்களுமான ஸ்ரீமான்கள் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள், ஈ. வி. இராமசாமி நாயக்கர் அவர்கள், திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் அவர்கள் போன்ற தியாகமூர்த்திகளாகிய திருமூர்த்திகளும் தமிழ்நாட்டில் கொஞ்சம் பிரசாரம் செய்யவேண்டுமென்றும், அசனுல் இளைஞர்கள் வேலைசெய்ய முன்வந்து பிரபல கமிட்டிகளும் ஏற்படுத்த ஏதுவாயிருக்குமென தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தங்கள் பி. லட்சுமணன்.

## கடவுள் எங்கும் இருக்கிறார்.

இன்று மாலை "ஈவினிங் நியூஸ்" பத்திரிகைப் பிரதிநிதி மகாத்மாவை பேட்டிகண்டு சம்பாஷித்தபோது "திரு. சீனிவாசய்யங்கார் கல்கத்தாவில் கூட்டியுள்ள ஒற்றுமை மகாநாட்டுக்கு என்னை அழைக்கவில்லை. நான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினன் என்ற ஹோதாவில் அந்த நடவடிக்கைகளில் கலந்து கொள்ளலாம். ஆனல் நான் கலந்துகொள்வதால் எவ்வித பிரயோசனமும் ஏற்படாதென்று கருதினேன்" என்று கூறினார்.

பின்னர் தென்னிந்தியாவில் தனது சுற்றுப் பிரயாணத்தில் "கடவுள் விபசாரிகள் வீட்டில் எந்த அளவில் இருக்கிறாரோ அவ்வளவில்தான் சில ஹிந்து கோவில்களிலும் இருக்கிறார்" என்று கூறிய பின் வெளிவந்த பல குறை கூறல்களுக்கு பதிலளிக்கும்போது "நான் சொன்னதில் ஒரு வார்த்தையும் வாபீஸ்பெறப் போவதில்லை. அதன் ஒரு அர்த்தப்படி கடவுள் எங்கும் இருக்கிறார் என்பது உண்மை. திருடர்கள் பதுங்கிக்கிடக்கும் குகையிலும் கடவுள் இருக்கிறார். ஆனல் நாம கடவுளை வணங்குவதற்கு இம்மாதிரி வீடுகளுக்குச் செல்வதில்லை. கோவில்களில் பரிசுத்தம் நிறைந்திருக்கிறதெனக் கருதி அங்குதான் கடவுளை உபாசிக்கச் செல்கிறோம். அந்த அர்த்ததில்தான் கடவுள் சில ஹிந்து கோவில்களில் இல்லையென்று கூறுகிறேன். அவர் அங்கு இருப்பாரானல் ஒரு விபசாரி வீட்டில் இருப்பதுபோல் தான் இருக்கிறார் என வேண்டும். இப்படி நான் கூறியது சில ஹிந்துக்களின் மனதை புண்படுத்துமாயின் சத்தியத்திற்காகவும் ஹிந்து கோவில்களுக்காகவும் எனது வார்த்தைகளை ஒரு சிறிதும் வாபீஸ் வாங்கவோ திருத்திக் கொள்ளவோ முடியாது" என்று கூறினார் பிரீ பிரஸ்.

## சர்க்கா சங்கத்தில் பார்ப்பனக் கொடுமை.

நாம் முன்னரேயே பார்ப்பனர்கள் இன்ஸ்பெக்டர்களாகவும் நிர்வாகிகளுமாக இருப்பதினால் பார்ப்பனரல்லாத காரியஸ்தர்கட்கு பலவித இன்னல் விளைவிக்க முயலுவர் என்பதாக எழுதியிருக்கிறோம். இதற்கு ஆதாரமில்லாமலில்லை. சர்க்கா சங்கத்தில் தான் பார்ப்பனக்கொடுமைகளும், சூழ்ச்சிகளும் தலை சிறந்து மிளிர்கின்றன. ஒரு கதர்க்கடை காரியஸ்தர் பத்திரிக்கை படித்தல் கூடாதென்று ஒரு பார்ப்பன இன்ஸ்பெக்டர் சொன்னதாகவும், மேற்படி காரியஸ்தர் எனக்கிருக்கிற இந்த உரிமையில் தலையிட வேண்டாமென்று சொல்லிவிட்டு சென்றபோது, எந்த பத்திரிகை வாசிக்கப்போகிறீர்கள் என்று கேட்டதாகவும் அறிகிறோம். சில இடங்களில் பார்ப்பனரல்லாத கதர் அபிமானிகள் சர்க்கா சங்கத்தில் சேரமுடியாதவாறு பார்ப்பனர் சூழ்ச்சி செய்வதாகவும், இதுபோதிககிற பார்ப்பனரல்லாதாரை ஏதேனும் பொருத்தமில்லாத குற்றத்தைச் சாட்டி விலக்க வேலைசெய்வதாகவும் அறிகிறோம். இது குறித்த பிறவிவரத்திற்கு சமயம் நேர்ந்துழி பின்னர் விரிவாக எழுதுவோம்.

சர்க்கா சங்க ஊழியன்.

## உடனே தேவை.

"அபூர்வ சம்பாத்ய முறைகள்" என்ற ஆச்சரியமான புஸ்தகத்தைப் படித்து முடிந்ததும் உடனே சம்பாதிக்கத் தொடங்கலாம். விசேஷ நற்சாக்ஷிகள் பெற்ற மிக்க உபயோகமான அரிய நூல். பிரதி காப்பி விலை அணு 12. வி. பி. செலவு பிரத்தியேகம். ஆர். சேஷன், எடிடர். ஸ்ரீரங்கம் போஸ்டு, (திருச்சி) தென் இந்தியா.

## கொளும்பு மருத்துவ குலத்தவர்கட்கு

கொளும்பு மருத்துவகுல சகோதரர்களே! இவ்விலங்கையில் நம் மருத்துவகுல சங்கம் இல்லாமல் இருந்து பின்னுல் மருத்துவ திலகம் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளையவர்கள் முயற்சியால் இவ்விலங்கையிலும் நம் மருத்துவகுல சங்கம் தோன்றி, குல ஒற்றுமையும் கட்டு திட்டங்களும் நம் குலத்தோர்களுக்கு ஏற்படுத்தி, நமது சங்கம் மாதம் தவறுமல் கூட்டம் கூடி முறை தவறுமல் நடந்து வந்தது.

இப்போது சொற்பநாளாக நம் சங்கம் ஒற்றுமை குலைந்து கட்டு திட்டங்கள் கலைந்து இருப்பதாய் நாம் கண்டு வருந்தாமல் இருக்க முடியாது.

இதற்கெல்லாம் முதன்மையான காரணம் மருத்துவ சகோதரர்களுக்கு குல அபிமானம் தோன்றவில்லை என்பதே. போனதுபோக இனி மேலாகிலும் நம்தொண்டர்கள் மனதில் குல அபிமானம் கொண்டு நம் குலத்தை முன்னேற்ற நல்வழியை நாடி சகோதரர்கள் எல்லோரும் சந்தா பணத்தை தடைசெய்யாமல் கொடுத்து வருவதுடன், மருத்துவகுல சங்கம் கூடும் தினத்தை கேளவிபட்ட மாத்திரத்தில் எல்லோரும பாக்கியின்றி விஜயம் செய்து மருத்துவகுல சங்கம் நெடுநாள் நிலைத்து வாழ சிரத்தை எடுத்துக்கொள்ளுமாறு தொண்டர்களை யாம் கேட்டுக்கொள்வதுடன் மருத்துவகுல மாபெரும் தலைவர்கள் கொளும்பு மருத்துவகுல சங்கம் கலையாதபடி சிரத்தை எடுத்துக்கொள்வீர்கள் என தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கின்றேன.

கு. வி. ச. முத்துமணி, கண்டி.

---

2-ம் பக்கத்தொடர்ச்சி

து காலில் வீழ்ந்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டதாகவும் இந்து மதம், முகம்மதிய மதம், கிரிஸ்து, பௌத்தம், சமணம், பார்சிகம். சீக்கியம், ஆரியம், பிரம், முதலிய மதங்களிலும், வேதத்தில், கீதையில், சைவம் வைணவம் முதலியவைகளைக் கோஷிக்கின்ற இதிகாச புராணங்களில், சித்தர்கள், மகான்கள், அறிஞர்களாகிய தயானந்தர், ராஜாராம் மோஹனராய், சுவாமி விவேகானந்தர், ராமதீர்த்தர், ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் இவர்களும் இன்னும் அநேக மகான்களும் ஜாதி வித்தியாசமில்லை என்று சொல்லவும், எழுதவும் செய்திருக்கிறார்கள். தவிர அநேக பத்திரிகைகளின் வாயிலாகவும், பிரசாரங்களின் வாயிலாகவும், போதித்து வரும் இக்காலத்தில் நாம் ஏன் ஜாதிவித்யாசமதைத்துக்கொள்ளவேண்டும ஆகையால் கண்மூடித்தனமாகச்சுமமா யிருப்பதால்யாதொரு பிரயோஜனமும் கிடையாததினுல் ஆன்றமுதற்கொண்டு இவைகளை சீர்திருத்தம் பண்ண வேண்டிய சாத்வீக வாழ்வில ஈடுபட்டு நமது உடல், பொருள், ஆவி, மூன்றையும் தத்தம் பண்ணி சுயமரியாதைக்காக வேலை செய்வோமாகுக! நம் தேசத்தார் அத்னபயனை அடைவோராகுக!! இதற்கு எல்லாம வல்ல இறைவன அருள்புரிவாராகுக!!

சமூகத்தொண்டன், பாலக்காடு.

---

## பூளைமேடு P. S. G. & சன்ஸ் தர்ம ஸ்தாபன ட்ரஸ்டிகள் விசேஷ மகா சபையின் நடவடிக்கைகள்.

தீபாவளிப் பண்டிகையாகிய 24—10—27 தேதி திங்கள் பிற்பகல் 4 மணிக்கு ஹைஸ்கூல் மேல்மாடியில் திருவாளர் R. K. ஷண்முகம் செட்டியார் B.A.B.L., M.L.A. அவர்கள் தலைமையில் மகாசபை நடைபெற்றது.

டிரஸ்டிகளும இரட்சகர்களுமாக 30 சனவான்கள்வரையிலும் விஜயம் செய்திருந்தனர். ஏற்கெனவே இந்தக் கிராமத்தில் P. S. G. & சன்ஸ் அவர்கள் மானேஜ்மெண்டில் 'சர்வஜன ஹைஸ்கூல்' என்றதோர் பாடசாலை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந்தப் பாடசாலைக்கு இதுவரையிலும் மூல திரவியம் இல்லாதிருந்தது ஒரு பெரும் குறையாக இருந்து வந்தது. இதற்காக பல கனவான்களிடம் நன்கொடையாகப்பெற்றதொகை ரூ. 7000 P. S. G & சன்ஸ் அவர்கள் சேகரித்து வலக்குறிச் சீட்டுத்தொகை ரூபாய் 20000 ஆக ரூ. 27000 ரூபாய் தொகையையும் இந்த ஹை ஸ்கூலின் மூலதனத்திற்காக P. S G. & சன்ஸ் அவர்கள் உதவினர்கள்.

இந்த ஸ்கூலை இனிமேல் P. S G. & சன்ஸ் தர்மஸ்தாபன ட்ரஸ்டிகளே நிர்வகித்து வரவேண்டுமென P. S. G. & சன்ஸ் அவர்கள் கொடுத்திருந்த விண்ணப்பத்தையும் அங்கீகரித்தார்கள்.

இப்பாடசாலைக்கு வேண்டிய கட்டிடத்திற்காக P. S. G. & சன்ஸ் அவர்கள் கடனாக உதவியிருந்த ரூ. 47741—2—8யும் நன்கொடையாகவே கொடுத்து P. S. G. & சன்ஸ் தர்மஸ்தாபனத்திற்கு இந்த ஸ்கூல், நிலம், கட்டிடம் முதலிய சகல வைபவங்களையும் டிரஸ்டில் பத்திரமாக எழுதிக்கொடுத்தார்கள்

டிரஸ்டு மகாசபையார் மேற்கண்ட விஷயங்களையெல்லாம் அங்கீகரித்தார்கள்.

வந்தனோபசாரம் கூறியதும் கூட்டம் இனிது கலைந்தது N. நாராயணசாமி நாயுடு.

---


## "தமிழன்"

(ஓர் தமிழ் வாரப்பத்திரிகை.)

தாழ்த்தப்பட்டவர்
சமத்துவம், சுதந்திரம், முன்னேற்றம்,

இவைகளை அடைய வேண்டுமானுல் ஒவ்வொரு கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்டவர்களும் "தமிழனை" வாங்கவேண்டும் தாழ்த்தப்பட்டவர்களாகும் ஆதிதிராவிடர்களின் குறைகளை இடைவிடாமல் கவர்ன்மெண்டாருக்கு விளக்கிக்கூறுவதும் இப்பத்திரிகையேயாகும.

வருட சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் 3
வெளிநாட்டுக்கு ரூ. 4.

மானேஜர் "தமிழன்" ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை, கே. ஜி. எப்.



## கதர்ப் பத்திரிகைக்கு வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம் அல்லது 8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

### "குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு



அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

### விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணு 8 முதல் அணு 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனும். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

| | |
|---|---|
| 20 சாம்பிள் பாக்கெட் | ரூ. 2—0—0 |
| 10 ,, ,, | ரூ 1—4—0 |
| நாட்டுக் காய்கறி 20 | ரூ. 2—8—0 |

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்டர்சரி தோட்டம், சேலம்.



## கதரன்பர்களுக்கு வேண்டுகோள்.

வரும் தீபாவளியன்று கதரணிவது கடமையல்லவா, அன்றையதினம் முக்கியமாக கதர் பனியனுவது அணியவேண்டும். நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு
28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0
32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமானகதர்ஜவுளி தினுசுகளும் கிடைக்கும் விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார்,
திருப்பூர், (தென் இந்தியா)



நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

## பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரிய யஹானின் முறை அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும்இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

## குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி —நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன் கா. முகம்து அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

## குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்புஇவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

**C.மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43 அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை

## மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள முதல் வயோதிகர் வரையில் ஸ்த்ரீகள் உள்பட எல்லோரும எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும்ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும கைகண்ட மருந்து

REGISTERED TRADE MARK MINSARA RASAM

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு

விலாசம்:—**மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்**

## "அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்திரப் பத்திரிகை

வருட சந்தா தபால்கூலி உள்பட 6 அணா

மாதிரிப்பிரதி இனாம்,

அறிவுவிளக்கம் ஆபீஸ்

உடுமலைப்பேட்டை.

## "குடி அரசு" நிருபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா. மானேஜர்,

"குடி அரசு"

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஷ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக்கொடுக் கபபடும தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

பற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

**மதருஸ் தென்னிந்தியா**

**மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,**

**மைலாப்பூர்-மதருஸ்.**

## கணித சோதிடம்

பாசித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மவகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,

முதலயார் பேட்டை, புதுச்சேரி.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிசகடம்பறு வெளியிடப்பட்டது.